THE SUDAROLI

# சுடர் ஒளி

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

30.00

பக்கங்கள் -28


வார சஞ்சிகை

ஜனவரி 09- ஜனவரி 15, 2013

January 09- January 15, 2013



## தீர்ப்பின் பின்னும்...




## இன்னும் அடங்காத கொலைவெறி



வாசகர்களுக்கு இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்



சுடர்ஒளி நாட்காட்டி இணைக்கப்பட்டுள்ளது



# அக்கிரமங்களின் கவசமாக பயங்கரவாத மாயை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஒரே ஒரு ஆசிரியரைக் கொண்டு இயங்கும் பள்ளிக்கூடங்களைப் பற்றி கேள்விப்பட்டு இருக்கிறோம். அவை 'ஓராசிரியர் பள்ளி' என்று அழைக்கப்படுகின்றன. ஆனால் ஒரே ஒரு மாணவனுக்காக மட்டும் செயல்படும் பள்ளி பற்றி இப்போது தெரியவந்துள்ளது.

சீனாவில் பூஜியான் என்ற மாநிலத்தில் இயங்கும் இப்பள்ளிக்கூடத்தில் கடந்த 2005ம் ஆண்டு 24 வகுப்பறைகளுடன், எல்லா பள்ளிக்கூடங்கள் போல்தான் இப்பள்ளியும் தொடங்கப்பட்டது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் கொஞ்சம் கொஞ்சமாக மாணவர்களின் வருகை குறையத் தொடங்கியது.

2 வருடங்களுக்கு முன்பு 80 பேர் படித்தனர். கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 17 ஆகக் குறைந்தது. இப்போது ஹூ யாங் என்ற 8 வயது சிறுவன் மட்டுமே அங்கு படித்து வருகிறான்.

ஆனால், ஒரு சிறுவன் மட்டுமே படிக்கிறான் என்பதற்காக அந்த பள்ளி சோர்ந்து விடவில்லை. வழக்கம்போல் 2 ஆசிரியைகள் அந்த மாணவனுக்கு அனைத்துப் பாடங்களையும் முறையான பாடத்திட்டப்படி நடத்திக்கொண்டு தான் இருக்கிறார்கள்.


# தரம் 5, 4 மாணவர்களே!

## இதோ! புலமை 13 வெளிவந்துவிட்டது




உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள
சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855
வடமாகாணத்தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222



# எமது நற்பணிகளில்... உங்கள் பங்களிப்பு

## ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம் - இஸ்கோன்



இஸ்கோன் - ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம் 1976ம் ஆண்டு கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இன்றுவரை சிறப்பான ஆராதனைகள் இடம் பெற்று வருகின்றன. 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆலயத்திற்கான நிலம் சொந்தமாக வாங்கப்பட்டது. தற்போது ஆலயம் கட்டும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆகவே பக்தர்களும் இந்நற்பணியில் பங்குகொண்டு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அருள் பெற வேண்டுகின்றோம். பகவான் ஸ்ரீ விஷ்ணுவுக்கு ஆலயம் அமைக்கும் ஒருவனுக்கு ராஜசூய யாகம், மற்றும் அஷ்வமேத யாகம் செய்த பலன் அனைத்தும் கிடைக்கும் (விஷ்ணு தர்மோத்தர).

### பக்தி வேதாந்த சிறுவர் இல்லம் - கோகுலம்

இல.607 A, நீர் கொழும்பு வீதி, மாபொல, வத்தளை. தொ.பேசி : 2948398



கோகுலம் சிறுவர் இல்லமானது 115 பிள்ளைகளுடன் ஆதரவற்ற குழந்தைகளை அரவணைக்கும் கருணை இல்லமாக இயங்கிவருகின்றது. இங்கு உணவு, உடை, உறைவிடம், வைத்திய வசதிகள் உட்பட சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு கல்வி பயில அதனுடன் இணைந்த பாடசாலையும் உள்ளது. அவர்களுக்கு தாங்களும் தங்களால் இயன்ற அளவு உதவி செய்து பகவான் அருள் பெற வேண்டுகின்றோம்.

தற்போதைய சூழ்நிலையில் அவர்களைப் பராமரிக்க ஒரு நாளைக்கு ரூபா.25,000.00 செலவாகின்றது.



### இஸ்கோன் கோசலா - பசுக்களை பராமரிக்கும் திட்டம்

இல.44/88, கிருஸ்த்துராஜ மாவத்தை, ஏகித்த, வத்தளை.

1999ம் ஆண்டு முதன் முதலாக ஒரு பசு எங்கள் ஆலயத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. இன்று 28 பசுக்கள் (கன்றுகளுடன்) கொண்ட ஒரு பண்ணையாக மாறிவிட்டது. ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் மக்கள் பசுவதை செய்வதையும் பாலை பசுவிடமிருந்து பெற்ற பின்பு தாயாக மதிக்கப்பட வேண்டிய பசுவைக் கொன்று உணவாக உண்பதைப் பார்த்து பசுக்களைக் காக்க வேண்டுமென்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அவரது திட்டத்திற்கேற்ப உருவாக்கப்பட்டதே எமது இஸ்கோன் கோசலாவாகும். நீங்களும் எமது சேவையில் பங்கு கொண்டு பசுக்களின் காவலன் கண்ண கோபாலன் அருளைப் பெற்று உய்ய வேண்டுகின்றோம்.

தங்கள் நன்கொடைகளை பிறந்ததினம் திருமண வருடப்பூர்த்தி மற்றும் உறவினர்களின் ஞாபகார்த்தமாகவே வழங்கி உதவலாம்.

ISKCON

### சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம்

ஸ்தாபக ஆச்சாரியார் அருட்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்கள்



இச் சேவைகளில் பங்குகொள்ள விரும்புகின்றவர்கள் தொடர்புகளுக்கு :

**ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம்**

இல. 188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13. தொ.பேசி : 011 2433325

E-mail : iskcon@sit.lk / Web - www.iskcon.lk / www.gokulam.lk
A/C NAME : ISKCON, A/C NO : 1050669901 BANK : COMMERCIAL BANK, KOTAHENA BRANCH


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அக்கிரமங்களின் கவசமாக பயங்கரவாத மாயை!

இன்று உலகில் பயங்கரவாதம் என்ற வார்த்தை பல்வேறு தரப்பினராலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சில சமயங்களில் உண்மையான விடுதலைப் போராட்டங்களும், ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவதற்கான போராட்டங்களும் கூட அதிகார பீடங்களாலும், அடக்குமுறையாளர்களாலும் பயங்கரவாத முத்திரை குத்தப்படுகின்றன. அதேவேளையில், சில பயங்கரவாதப் போராட்டங்கள் கூட விடுதலைப் போராட்டங்களாகக் காண்பிக்கப்படுகின்றன. இவ்வாறு திட்டமிடப்பட்ட வகையில் பயங்கரவாதம் என்ற வார்த்தையின் அர்த்தம் வேண்டுமென்றே பல தரப்பினராலும் திரிபுபடுத்தப்படுகின்றது. இன்று சிரியாவில் அதிபர் ஆசாத்தின் அரசுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயக வழியிலான போராட்டங்கள் ஆயுத வன்முறையாக மாற்றமடைந்துள்ளன. இப்போராட்டங்கள் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். போராளிக் குழுக்களால் மருத்துவமனைகள் தாக்கப்பட்டதாகவும், சர்வதேசத் தொண்டு நிறுவனப் பணியாளர்கள், ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன. ஆனால், இந்த நடவடிக்கைகளை எவருமே பயங்கரவாதம் எனக் கூறவில்லை. ஜனநாயக மீட்புக்கான போராட்டம் எனக்கூறி பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசு நாடுகள் அதற்கு ஆதரவளித்து வருகின்றன. இவ்வாறே லிபியாவிலும் கேணல் கடாபியின் ஆட்சி ஆயுத வன்முறை மூலம் வீழ்த்தப்பட்டு அவரும் படுமோசமான முறையில் கொல்லப்பட்டார். அதையும் எவரும் பயங்கரவாதம் என அழைக்கவில்லை.

ஆனால், காஸாவில் தங்கள் சொந்த மண்ணை விடுவிக்கப் போராடும் ஹமாஸ் இயக்கமும், அதனுடன் இணைந்து போராடும் அமைப்புக்களும் பயங்கரவாத அமைப்புகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. ஒரு காலத்தில் பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காகப் போராடிய யசீர் அரபாத் கூடப் பயங்கரவாதியெனக் கூறப்பட்டார்.

இவ்வாறே இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொட்டே பல்வேறு விதமான இன ஒடுக்குமுறைகளுக்கு உட்பட்ட இலங்கைத் தமிழ் மக்கள் பல ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்தி வந்தனர். அப்போராட்டங்கள் ஆயுத ஒடுக்குமுறை மூலம் அடக்கப்பட்டபோது தமிழ் மக்களும் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தலைமையேற்று வழி நடத்திய விடுதலைப்புலிகள் அமைப்பு அமெரிக்கா உட்பட்ட பல மேற்கு நாடுகளாலும், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளாலும் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இப்பிரகடனத்தின் அடிப்படையில் இந்தியா உட்பட பல சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு இராணுவப்பயிற்சி, படையுதவி, தொழில் நுட்ப உதவி, ஆயுத உதவி, புலனாய்வுத் தகவல்கள், விடுதலைப் புலிகளின் சர்வதேச நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடல் போன்ற செயற்பாடுகள் மூலம் விடுதலைப்புலிகளை இலங்கை அரசு தோற்கடிப்பதற்கு சகல உதவிகளையும் வழங்கின. பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் பிணக்குவியலில் ஏறி நின்று இலங்கை அரசு தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டத்தை அழித்தது.

ஆனால், தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்பு தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை பல்வேறு வடிவங்களில் பல மடங்காக விரிவடைந்துள்ளது. ஒரு இராணுவ சர்வாதிகாரத்தை ஒத்த அழுத்தங்கள் தமிழ் மக்கள் மேல் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. பாரம்பரியமாக மக்கள் வாழ்ந்த இடங்களை அபகரித்தல், மர்மக் கொலைகள், காரணமற்ற கைதுகள், கிறீஸ்பூதம், ஜனநாயக வழியிலான போராட்டங்களுக்கு எதிரான வன்முறைகள் எல்லா நிகழ்வுகளுக்கும் இராணுவப் பிரசன்னம் இருக்கவேண்டுமென்ற வலியுறுத்தல், மீன்பிடிக் கட்டுப்பாடுகள் எனத் தாங்க முடியாத அடக்குமுறைகள் தமிழ் மக்கள் மேல் பிரயோகிக்கப்படுகின்றன.

ஆனால், இப்படியான கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் போது உடனடியாகவே அவற்றுக்குப் பயங்கரவாத நாமம் சூட்டப்பட்டு, கைது செய்யும் கையாலாகாத நடவடிக்கை இலங்கை அரசு தரப்பாலும், படையினராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அண்மையில் மாவீரர் நாளன்று பொலிசாரும், படையினரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்திற்குள் புகுந்து சோதனை நடவடிக்கை என்ற பேரில் மேற்கொண்ட அடாவடித்தனங்களை எதிர்த்து அடுத்த நாள் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தின்போது பொலிசாரால் தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டு சில மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அதையடுத்து மாணவர்கள் உட்படப் பலர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் நால்வர் எந்தவித நீதிமன்ற உத்தரவுமில்லாமலே வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

**பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்திற்கு புலிச்சாயம் பூசப்பட்டது போலவே முஸ்லிம்களின் 'ஹலால்' முறைக்கும் அல்குவைதா சாயம் பூசப்படுகிறது. அதாவது இலங்கை வாழ் சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அந்யாயங்கள் பயங்கரவாதம் என்ற மாயையினால் நியாயப்படுத்தப் படுகின்றன.**

இவர்கள் அனைவரும் பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளின் தலைமை உறுப்பினர்கள்.

இவர்களை விடுவிக்கும்படி பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், மாணவர்களின் பெற்றோர்களும் வடபகுதி கட்டளைத்தளபதி மஹிந்த ஹத்துரு சிங்கவைச் சந்தித்துக் கோரியபோது அவர் பிரபாகரன் இருக்கிறார். தமிழீழம் கிடைக்கும் என்ற கொள்கையையே நான்கு மாணவர்களும் பின்பற்றுவதாகவும், அதை அவர்கள் மறக்க வேண்டும் எனவும், பிரபாகரன் உயிருடன் இருப்பதாக அவர்கள் புலனாய்வாளர்களிடம் கூறியதாகவும் தெரிவித்திருந்தார். அதுமட்டுமன்றி பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி கைதுசெய்யப்பட்ட அனைவரும் விடுதலைப்புலிகளின் தீவிர உறுப்பினர்கள் எனவும் நீண்டகாலமாகப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் அடிப்படையிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

அதாவது அக்கிரமங்களுக்கும், அடக்குமுறைகளுக்கும் எதிராகக் குரல் கொடுப்பவர்களைக் கைது செய்து விசாரணை இன்றி நீண்ட காலம் புனர்வாழ்வு என்ற பேரில் தடுத்து வைக்கும் நயவஞ்சகத் திட்டத்தின் ஒரு பகுதிதான் இது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் தடுத்து வைக்கப்பட்ட மாணவர்கள் தங்களிடம் பிரபாகரனைப் பற்றி எதுவும் கேட்கப்படவில்லை எனவும் அப்படி எதுவுமே அங்கு பிரஸ்தாபிக்கப்படவுமில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இப்படியான நிலையில் மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவின் கூற்றின் உள்நோக்கத்தை எவருமே தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

இப்படியாக அக்கிரமங்களையும் அடாவடித்தனங்களையும் நியாயப்படுத்தப் பயங்கரவாதம் என்ற வார்த்தையைப் பாவிப்பது தமிழ்மக்கள் மீது மட்டுமன்றி இப்போ முஸ்லிம் மக்கள் மீதும் பிரயோகிக்கப்படுகின்றது.




முஸ்லிம்கள் உணவுக்காக ஒரு உயிரைக் கொல்லும்போது 'ஓதி' வெட்டுவார்கள். அது அவர்களின் மதக் கட்டுப்பாடு, எனவே முஸ்லிம்கள் உணவுப் பொருட்களுக்கு 'ஹலால்' முத்திரை பதித்து அதன் மூலம் அதன் தூய்மையை உத்தரவாதம் செய்து விற்பனை செய்கின்றனர். அந்த உத்தரவாதம் காரணமாக வேறுமதத்தவரும் அதை விரும்பி வாங்கும் நிலை ஏற்பட்டது.

இதைப் பொறுக்காத புத்த பிக்குகள் தலைமையிலான இனவெறிக் கும்பல் 'ஹலால்' உணவுகளைப் பகிஷ்கரிக்கும்படியும், தடைசெய்யும்படியும் ஆர்ப்பாட்டம் செய்ததுடன் எம்பிலிப்பிட்டியாவில் அவற்றை விற்ற இரு முஸ்லிம் வியாபாரிகளின் கடையைத் தாக்கியதுடன், இனி இங்கு வியாபாரம் செய்யக்கூடாது என எச்சரிக்கையும் செய்துள்ளனர்.

இப்படியான சம்பவங்கள் தொடர்பாக ஜம்மா உலமா சபையும், முஸ்லிம் கவுன்சிலும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவிடம் முறையிட்டபோது அப்படியான ஆர்பாட்டங்களைத் தடைசெய்ய முடியாது எனவும் ஜனநாயக நாட்டில் அப்படிச் செய்வது அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுக்கும் எனவும் தெரிவித்துவிட்டார்.

அதே வேளையில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஹலால் சான்றிதழ் வழங்க அறவிடப்படும் கட்டணம் அல்குவைதா, ஜிஹாத் போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கப் பயன்படுவதாகக் கருதவேண்டியுள்ளது எனக் கூறியுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்திற்கு புலிச்சாயம் பூசப்பட்டது போலவே முஸ்லிம்களின் 'ஹலால்' முறைக்கும் அல்குவைதா சாயம் பூசப்படுகிறது. அதாவது இலங்கை வாழ் சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநியாயங்கள் பயங்கரவாதம் என்ற மாயையினால் நியாயப்படுத்தப்படுகின்றன.

முஸ்லிம்களின் இயல்பான நடைமுறைகளுக்கு எதிராக நடக்கும் ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பது ஜனநாயக விரோதம் எனக் கூறும் பாதுகாப்புச் செயலருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டம் மீது தடியடிப்பிரயோகம் நடத்தப்படுவதும், மாணவர்கள் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்புவது மட்டும் ஜனநாயக வரம்புக்கு உட்பட்டதாகி விடுகிறது.

தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட ஏனைய தமிழ் அரசியல் அமைப்புகளும், சிங்கள முற்போக்காளர்களும், புத்திஜீவிகளும் குரலெழுப்பி வருகின்றனர். ஆனால், பெரும்பாலான முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநியாயங்களைப் பூசிமெழுகி முஸ்லிம் மக்களை அமைதி காக்கும்படி கோரி தங்கள் அரசாங்க விசுவாசத்தைக் காட்டி வருகின்றனர். இது ஒரு துர்ப்பாக்கிய நிலைமையாகும்.

மேலும் மேலும் வலுப்பட்டுவரும் தமிழ் முஸ்லிம் மக்கள் மீதான ஒடுக்குமுறையை நியாயப்படுத்த இன்று பயங்கரவாதம் என்ற மாயை முன்வைக்கப்படுகிறது. இது இனி தொடர்ந்து வரப்போகும் பேராபத்துகளின் ஒருவித முன்னறிவித்தலாகும்.

தமிழ், முஸ்லிம் ஐக்கியத்தின் மூலமே இத்தகைய அக்கிரமங்களை முறியடிக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்வது தவிர்க்க முடியாத ஒரு உடனடித் தேவையாகும்.

• சந்திரசேகர ஆசாத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வலிமையுள்ள வாக்குச்சீட்டு

எனக்கு வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்தால் உங்களைச் சூழ்ந்து வருத்தும் எல்லாத் துன்ப துயரங்களையும் என்னால் போக்க முடியும். என்னை நம்புங்கள் என்றார், அன்று தேர்தல் கூட்ட மேடையில் ஏறிய வேட்பாளர் ஒருவர்



சத்தியமாகவே நாங்கள் உங்களையே நம்புகிறோம். ஏனென்றால் எல்லாத் துன்ப துயரங்களுக்கும் நீங்கள்தானே காரணம்! உங்களால்தானே எல்லாத் துன்ப துயரங்களும் எம்மிடத்தில் வந்து சேர்ந்தன. என்று ஒன்றாகச் சேர்ந்து குரலெழுப்பினார்கள் கூடி இருந்த மக்களில் பலர். இந்த வகை நகைச்சுவைக் கலந்துரையாடல்களுக்குள் விழித்துச் சிரிக்கிறது இன்றைய எமது தேர்தல் ஜனநாயகம்.

தேர்தல் காலங்களில் வேட்பாளர்களால் முன்வைக்கப்படும் வாக்குறுதிகளும் அவற்றை நம்பிக்கையோடு கிரகித்து வாக்களிக்கும் வாக்காளர்களும் ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் ஆட்சியை நிர்வகிக்கும் அதிகாரத்தை வழங்கும் சுதந்திரத்தை நிர்ணயிக்கும் வலிமை கொண்டவர்களாகவே தெரிகிறார்கள் எனினும் ஜனநாயகம் மக்கள் வாக்குரிமை சுதந்திரம் என்பதெல்லாம் மேலதிக வாக்குகளின் எண்ணிக்கையாலேயே நிச்சயிக்கப்படுகின்றன.

நீதியும் உண்மையும் நேர்மையும் காருண்யமும் வாக்கெடுப்புக்குள் தத்தமது சுயத்தை இழந்து போய்விடுகின்றன. லஞ்சம் வாங்கினேன் கைது செய்தார்கள்.
லஞ்சம் கொடுத்தேன் விடுதலை செய்தார்கள் என்கிறது ஒரு கவிதை. இதுவே இன்றைய யதார்த்தமாகவும் தெரிகிறது. இந்த ஜனநாயகமோ பேச்சுக்களால் மனதைத் தொட்டிழுக்கிறது செயலளவில் அவை மனதைக் குடைந்து வருத்துகிறது மக்களோ மகிழ்ச்சியைத்தேடி அலைகிறார்கள்.

பதவிக்குவர ஆசைப்படும் ஆர்வத்தின் அளவுக்கு ஈடாகப் பதவியின் புனிதத்தைக் காக்கும் தகுதி ஆட்சிக்கு வந்தபின்னர் இந்த வேட்பாளர்களிடம் இல்லாமலே போய்விடுகிறது. இந்த ஆட்சிக்காலம் முடியும்வரை இவர்களை அசைக்க முடியாதென்று தெரிந்திருந்தும் வாக்களித்தோமே என்று அங்கலாய்ப்பதே இன்று மக்களின் வழக்கமாகிப் போய்விட்டது.

அன்றைய அவர்களின் வாக்குறுதிகளை நம்பினோம். இன்று அவை எல்லாமே ஏமாற்றமாகிப் போய்விட்டதே! இதைத்தான் ஜனநாயகம் என்கிறார்களே! என ஏக்கம் தெரிவித்தார் ஒருவர்

சுதந்திரத்துக்காகப் பாடுபட்டவன் சுதந்திரத்தின் நன்மைகளைப் பெற்று அனுபவிக்க எண்ணிக் கண்ட கனவுகள் எல்லாமே கானல் நீராகவே இன்று தெரிகின்றன எனப் புலம்பி அழுகிறான் வேறொருவன்.

சுதந்திரத்தைப் பெற்று மக்கள் மகிழ்ச்சியைக் கண்டு அனுபவிக்க முந்திய அந்த நாட்களில் தேர்தல்கள் நடந்தன. அவை அமைதியாகவும் வாக்குப் பதிவுகளின்போது உள்ளத் தூய்மையுடனும் நடைபெற்றதாக எனக்கொரு ஞாபகம் உண்டு.

இன்று தேர்தலில் வென்று மன்றிலே தோன்றும் மாற்கங்கள் பலவாய் விரிந்து விட்டதாகவே பலராலும் உணரப்படுகின்றது. அதற்கான தந்திரோபாயங்களும் வஞ்சனைகளுமே பெருகி எல்லை கடந்து துயர்விளைத்து நிற்பதாகவும் உணர்கிறோம். கொலைகளும் கடத்தல்களும் நீதி குலைந்த ஆட்சிக்கான அடையாளங்களாக அவற்றையே ஒரு பிரிவினர் வரவேற்றுப் பார்ப்பதாகக் கருதப்படுவதை எண்ணி ஒவ்வொரு

நெடுந்தீவு மகேஷ்



மனித உள்ளங்களும் வேதனைக்குள் வீழ்ந்து துடிக்கின்றது. இவை யாவுமே நீதியற்றோர் ஆட்சியில் நிலைத்திருந்து வருத்தும் கொடுமைகளாகவே தெரிகின்றன.

இந்தியாவும் இலங்கையும் கிட்டிய இடைவெளிக் காலங்களிலேயே சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டன. ஜனநாயக தேர்தல்களின் மூலம் ஆட்சியமைக்கும் சுதந்திர நாடுகளாகத் தமது அதிகாரத்தை அவை வென்றெடுத்தன. அவர்கள் பெற்ற சுதந்திரத்தின் பயனாக மக்களால் மக்களுக்கான மக்கள் ஆட்சியை உருவாக்கும் வாய்ப்பினையும் நாடுகள் பெற்றுக் கொண்டன.

இக்காலத்தில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் தலைமைகளில் உயர்ந்த உன்னதமான நீதியின் பாதையில் தம்மையும் மக்களையும் வழிநடத்தும் தகுதியுடையோர் பலரையும் கண்டோம். ஆனால் இன்று ஆட்சிக்கு வருபவர்கள் பலரின் முகங்கள் நல்லெண்ணம் குன்றிய நிலையில் மிக விரைவிலேயே மனதிலிருந்து அழிந்து போய்விடுகின்றன. அவர் கொண்டிருந்த ஆளுமையும் அவர் தம் நடத்தைகளும் மக்கள் மனங்களில் மகிழ்ச்சி தருவதாக மலரவில்லை.

இந்நிலையை மாற்ற மக்களே தமது சிந்தனையில் நன்மை தரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். வாக் குரிமையின் பலமும் பலவீனமும் மக்களின் வாக்களிப்பின் மூலமே வெளிப்படும்

எம்மை நாமே காட்டிக் கொடுக்கும் வகை சுட்டும் வாக்குகளின் மூலம் தெரிவாகும் ஆட்சி எம்மையே அழிக்கும் வலிமை கொண்டது. எமக்குத் தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்குச் சீட்டும் மக்களால் மக்களுக்கு வாழ்வளிக்கும் நல்லெண்ணத்தை வலுப்படுத்த வேண்டும். அத்தகைய கருத்துடன் உறுதியாக உவப்போடு வாக்களிப்பதிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது. எனவே வல்லவர்களின் தெரிவு நல்லவர்களுக்கானதாக நல்லெண்ணம் கொண்டோரையே ஆட்சிக்குத் தெரிவு செய்வோம்.

அப்பொழுதுதான் அமைதியும் சாந்தியும் மகிழ்வும் கலந்த வாழ்வோடு கூடிய ஆட்சியை நாம் பெற்றுயர்வோம். எமது காலங்கள் சிறக்கும் வாழ்வும் வளம் பெறும்.

# நிகழ் கணத்தின் வலி - கவிஞர் சித்தாந்தன்



எம்மைச் சூழ்ந்திருப்பவை எவையோ அவையாகி நாமும் அவற்றுள் ஒன்றாகி எம்மையும் மறைத்து அதன் வடிவாகி அதனது ஒலியாகி எம்மையும் இழந்து பலரும் ஆட்டிவைக்கும் பொம்மைகளாகி வாழ்கிறோம் என்கிறார் இந்தக் கவிஞர்

**எங்களுக்கிடையில் பொம்மை**
**தன் சாகசங்களை நிகழ்த்துகிறது**
**எம் இரு சோடிக் கண்களுக்கப்பாலும்**
**அதன் கண்கள்**
**சூரியனிலிருந்து வந்திறங்குகின்றன.**

எங்களுக்கிடையே தோன்றிச் சாகசங்களை நிகழ்த்திய பொம்மைகளோ எம்மைக் கவர்ந்து எம்மையே மறைத்து நிற்கின்றன. அந்தப் பொம்மைகளின் கண்களோ எம்மைக் கவர்ந்திழுக்கும் சூரியனின் பிரகாச ஒளியாய் மின்னுகின்றன.

**பொம்மையுடனான சிநேகிதம்**
**எம்மையும் பொம்மைகளாக்கி விட்டது**
**நாம் சிரித்தோம் அது பொம்மையின் சிரிப்பு**
**நாம் அழுதோம் அது பொம்மையின் அழுகை**
**நாம் கூத்தாடினோம் அது பொம்மையின் களிப்பு**

பொம்மையுடனான சிநேகிதத்தால் நாமும் பொம்மைகளாகி விட்டோம் நாமும் பொம்மைகளாகிச் சிரித்தோம், அழுதோம், கூத்தாடினோம் எல்லாமே பொய்த் தோற்றங்களே!

**இன்னும் புதிய பொம்மைகளால்**
**எமது அறையை அலங்கரிக்க விரும்பினோம்**
**எமது உலகத்தினது அற்புதங்களை**
**பொம்மைகளிலிருந்து ஆரம்பிக்கவிரும்பினோம்**
**பொம்மைகளுக்கிடையில் பொம்மைகளாய் வாழ்வதிலும் கொடிது**
**மனிதர்களுக்கிடையில் பொம்மையாய் வாழ்வது**
**இன்றைய விருந்தினர்கள் பொம்மைகளையே பரிசளிக்கின்றனர்**
**ஒரு பொம்மை பற்றிய கவிதையைப்**
**பொம்மைகளிலிருந்து ஆரம்பிப்பதை விடவும்**
**எம்மிலிருந்து தொடங்குவதே நல்லது**

எம்மைச் சூழ்ந்திருப்பது பொம்மைகளே! புதிய பொம்மைகளாலும் எமது சூழல் அலங்கரிக்கப்படுகிறது. பொம்மைகளிலிருந்து அற்புதங்களை ஆரம்பித்தோம். பொம்மைளாய் மாறி மனிதர்களுக்கிடையில் பொம்மையாய் வாழ்வது கொடுமை; எதற்கும் பொம்மைகளையே பரிசளிக்கின்றனர். ஒரு பொம்மை பற்றிய கவிதையை ஆரம்பிக்கும்போது பொம்மைகளாய் ஆன மனிதர்களான எம்மிலிருந்து ஆரம்பிப்பதே நல்லது.

**நீண்ட நெடிய நாட்களின் பின்**
**இன்று தெருவுக்கு வர நேர்ந்தது**
**மனிதர்கள் எம்மைச் சூழ்ந்து கொண்டு**
**கற்களை வீசினர் தூசித்தனர்**
**சுற்றி நின்று கொண்டாடினர்**
**எமது அழுகையை**
**பொம்மைகளின் அழுகை என்றனர்**
**எமது இரத்தத்தை**
**பொம்மைகளின் இரத்தம் என்றனர்**
**கடைசியில் நாம்**
**பொம்மைகளாகவே இறந்து போனோம்**

பொம்மைகளாய் இருந்த நாம் நீண்ட நாட்களின் பின்னர் தெருவுக்கு வந்தோம். அப்பொழுது மனிதர்கள் எம்மைச் சூழ்ந்து நின்று தூசித்தனர், கற்களை வீசினர், எம்மை வருத்திக் கொண்டாடினர். எமது அழுகையையும் எமது இரத்தத்தையும் பொம்மைகளினுடையவை என்றனர். இறுதியில் நாம் பொம்மைகள் என்ற பெயருடனேயே இறந்து போனோம் என்கிறார் கவிஞர் சித்தாந்தன்.

இளைய தலைமுறையினருள் ஒருவரான கவிஞரின் பெயர் சபாபதி உதயணன். ஆசிரியராகப் பணியாற்றுகிறார். யாழ்ப்பாணம் கோண்டாவில் இவரது பிறப்பிடமாகும். காலத்தின் புன்னகை, துரத்தும் நிழல்களின் யுகம் ஆகிய கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். அவரது துரத்தும் நிழல்களின் யுகம் எனும் கவிதைத் தொகுப்பிலுருந்து பெறப்பட்ட கவிதையே இது. யாரிங்கே தோன்றும். பொம்மைகளென்பதை வாசகன் பார்க்கும் நிறத்துக்கு ஏற்ப ஊகிக்க முடிகிறது. இவரது கவிதைப் பயணம் பல புதிய இலக்கியப் பாதைகளுக்கு வழிகாட்டும் என நம்புகிறோம்.

உமாபாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு வகையில் பார்த்தால் இலங்கைக்கு இந்தியா அடிமைப்பட்டுவிட்டது. பணிந்து விட்டது. கடந்த மார்ச்சில் ஜெனீவாவில் நடைபெற்ற 19ஆவது மனித உரிமை மாநாட்டின் போது இலங்கையை இந்தியா பிணையெடுத்தது. சோனியாகாந்தியின் மன்மோகன் சிங் அரசால் இலங்கை காப்பாற்றப்பட்டது, காப்பாற்றியது. இலங்கைக்கு எதிராக வாக்களித்து தமிழ்நாட்டு மக்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அம் மக்களுக்கு முதுகில் குத்திக் கொண்டு, இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா துரோகமிழைத்தது.**

நிலாம்தீன்
அட்டாளைச்சேனை

# இன்னும் அடங்காத கொலைவெறி

ராஜீவ்காந்தி மீதான மனிதவெடிகுண்டுத் தாக்குதலின் பின்பு, இந்திய காங்கிரஸ் கட்சியின் ஈழத் தமிழர் மீதான கொலைவெறி என்பது இன்னும் அடங்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். புலிகளை அழிப் பதற்கான இறுதி யுத்தத்தின் போது இந்தியாவின் உதவிகள் இலங்கைக்கு வழங்கியதன் மூலமாக ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அப்போதைய தகவல்கள் தெரிவித்தன. தடை செய்யப்பட்ட கொத்தணிக் குண்டுகள் வடபகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக சர்வதேச மனிதஉரிமை அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இந்தியா இது விடயத்தில் எவ்விதமான கருத்துக்களையும் இன்றுவரையும் தெரிவிக்கவில்லை. ஆனால் இலங்கை மீது போர்க்குற்றம் சர்வதேச அரங்கில் அரங்கேறு மானால் இந்தியாவும் சிக்க வேண்டியேற்படும். காரணம் நாடுகளுக்கிடையிலான யுத்தமொன் றில் கூட பாவிக்கத் தடைசெய்யப் பட்டுள்ள, மனித உயிர்களுக்கு அதிகளவு பாதிப்புக்களை, அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய, குண்டுகளை இந்தியா இலங்கைக்கு வழங்கியதன் மூலமாக தன் சொந்த நாட்டு மக்களையே அழிப்பதற்கு இலங்கைக்கு இந்தியா தடைசெய் யப்பட்ட ஆயுதங்களை வழங்கியதாக குற்றம் சாட்டப்படலாம்.

அப்போது இந்திய ஆட்சியாளர்கள் மீது சர்வதேசக் கண்டனங்கள், குற்றச்சாட்டுகள் உருவாகலாம் என்று இந்தியா அஞ்சுகின்றது. அத்துடன் இலங்கை மீது சர்வதேச போர்க் குற்றம் இறுக்கமடையுமானால் இலங்கை இந்தியாவைப் பொறிக்குள் மாட்டிவிடலாம் என்றும் இந்தியா அஞ்சுகின்றது. அதாவது போர்க் குற்றச் சாட்டில் இலங்கை இருக்கு மானால் இலங்கை இந்தியாவை மாட்டிவிடவும் தயங்காது. தனது இரண்டு கண் போனாலும் பரவா யில்லை எதிரியின் ஒரு கண்ணாவது போகட்டும் என்ற போக்கின் அடிப்படையில் இந்தியாவை மாட்டிவிட்டு இந்தியாவுக்கு எதிராக இலங்கை சாட்சியாகவும் மாறலாம். அப்படியான ஒரு திட்டத்தின் அடிப்படையில் இலங்கை இந்தியாவை பயமுறுத்தலாம். இதனால்தான் இந்தியா இலங்கை மீது காட்டமாகவும் கடினமாகவும் நடந்து கொள்ளாமல் உள்ளது.

ஒரு வகையில் பார்த்தால் இலங்கைக்கு இந்தியா அடிமைப் பட்டுவிட்டது. பணிந்து விட்டது. கடந்த மார்ச்சில் ஜெனீவாவில் நடைபெற்ற 19ஆவது மனித உரிமை மாநாட்டின் போது இலங்கையை இந்தியா பிணை யெடுத்தது. சோனியாகாந்தியின் மன்மோகன் சிங் அரசால் இலங்கை காப்பாற்றப்பட்டது, காப்பாற்றியது. இலங்கைக்கு எதிராக வாக்களித்து தமிழ்நாட்டு மக்களை ஆசுவாசப் படுத்திக் கொண்டு அம் மக்களுக்கு முதுகில் குத்திக் கொண்டு, இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா துரோகமிழைத்தது.

கடந்த மார்ச்சில் ஜெனீவாவில் அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்ற போதிலும் இந்தியா அப்பிரேரணை மீது இரண்டு மிகப் பெரிய முக்கியமான திருத்தங்களைச் செய்ததன் பேரில் திருத்தங்களைச் செய்து இலங்கையைக் காப்பாற் றியுள்ளது.

அதனால் மாற்றங்கள், திருத்தங் கள் செய்யப்பட்டுள்ளது. முதலாவது திருத்தமானது பிரேரணையில் 3ஆவது பிரிவில் சர்வதேச சட்டங்களின் கீழ் நடாத்தப்பட வேண்டிய விசாரணையை ஐ.நா.சபையின் ஆலோசனைகளையும் சேர்த்து விசாரணை மேற்கொள்வது தொடர்பான சட்டரீதியான தொழில் நுட்ப உதவிகளையும் இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரேரணையில் கட்டாயப்படுத்தி இருந்தது.

ஆனால் இதனை இலங்கை அரசுடன் ஆலோசனை நடாத்தி அதன் ஒப்புதல் பெற்று நிறைவேற்ற வேண்டும் என்று இந்தியா திருத்தம் செய்துள்ளது.

இரண்டாவது திருத்தமானது விசார ணைகள் தொடர்பாகவும், பாதிக்கப் பட்ட மக்களுக்கு மனிதாபிமான நடவடிக்கைகளையும் ஆராயவரும் ஐ.நா.குழுவினர் இலங்கை அரசுடன் ஒப்புதல் பெற்றுக் கொண்டுதான் இலங்கை செல்ல வேண்டும் என்று இந்தியா அமெரிக்காவிடம் வற்புறுத்தி திருத்தம் செய்துள்ளது.

இந்த இரு திருத்தங்களானது சர்வதேச விசாரணையை சரியான முறையில் செய்ய விடாது தடுப்பதற் கான பச்சைத் துரோகமான, படுபாத கமான, நயவஞ்சகமான இந்தியாவின் இரட்டை வேடத்தை உலகிற்கு காட்டியுள்ளது. இதை நாட்டு வழக்கில் சொன்னால் கூடவே இருந்து கொண்டு குழிபறிக்கும் சூழ்ச்சியாகும். கழுத்தறுக்கும் கைங்கரியமாகும்.

தமிழ்நாட்டில் கட்சி பேதமின்றி அவைகள், மக்கள் ஆர்ப்பாட்டம், தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் எதிர்ப்பு போன்றவற்றால் ஜெனீவா பிரேரணையை இந்தியா இலங்கைக்கு எதிராக நிறைவேற்றினாலும் இந்தியா செய்த இரண்டு திருத்தங்களாலும் பிரேரணை வலுவிழந்து விட்டது.




அமெரிக்கா கொண்டு வந்த பிரேர ணையை ஆதரிப்பது போல் ஆதரித்து விட்டு இலங்கையை பிணையெடுப்பது போல் காப்பாற்றிவிட்டது. இது இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா தொடர்ந்து செய்யும் துரோகங்கள் வரிசையில் மற்றுமொரு சர்வதேச நயவஞ்சக துரோகமாகும்.

கடந்த மாதம் ஜெனீவாவில் நடைபெற்று முடிந்த ஐ.நா.மனித உரிமை மீளாய்வுக் கூட்டத்திலும் இந்தியா தனது நயவஞ்சகத்தையும், இலங்கைத் தமிழர் மீதான தனது கொலை வெறியையும் காட்டியுள்ளது.

ஜெனீவாவில் இந்தியாவின் ஐ.நா. பிரதிநிதி பேசும் போது மட்டும் இலங்கை 13 ஆவது திருத்தத்தை ஒழிக்கக் கூடாது. வடக்குத் தேர்தலை நடாத்த வேண்டும். படைக்குறைப்பு செய்ய வேண்டும் என இந்தியா மேடையில் பேசியது, ஆனால் இந்தியா எந்தவொரு பரிந்துரைகளையும் செய்யவில்லை. சர்வதேச நாடுகள் இலங்கை மீது 210 பரிந்துரைகளை செய்த போதும் இந்தியா மேடையில் பேசியதையாவது பரிந்துரையாக செய்யவில்லை. காரணம் இலங்கை மீது ஏதாவது இந்தியா எழுத்து மூலமாக கொடுத் துவிட்டால் அது இலங்கைக்கு சிக்கலை ஏற்படுத்தி விடலாம் என்று இந்தியா நினைத்திருக்கலாம்.

கடந்த ஜெனீவா மனித உரிமை மாநாட்டிலும் இந்தியா செய்த அதே தில்லுமுல்லு வேலைகளை இம்முறை யும் இந்தியா செய்துள்ளது. அமெரிக்கா, பிரான்ஸ், தயாரித்த பரிந்துரைகளை நீக்கியது மட்டுமன்றி சில பரிந்துரை களை இலங்கைக்கு சாதகமாகவும் மாற்றியமைத்து அந்த அறிக்கையில் இந்தியா இணைந்திருந்தது. இதனை அமெரிக்காவும், பிரான்சும் இந்தியாவை வெளிப்படையாகவே கண்டித்திருந்தன.

அதாவது வடபகுதியில் இறுதிக் கட்டப் போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றச் சாட்டுக்களை சர்வதேச பொறிமுறைகளுக்கு அமைய விசாரணை நடாத்தப்பட வேண்டும் என செய்யப்பட்டிருந்த பரிந்துரையை இந்தியாவின் துணையுடன் இலங்கையும் இணைந்து தலைகீழாக மாற்றியிருந்தது.

இறுதிக்கட்டப் போரில் நடந்ததாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களை இலங்கையின் சட்டதிட்டத்திற்கு அமைய உள்நாட்டிலேயே மேற்கொள்ள வேண்டும் என இந்தியா மாற்றியமைத்திருந்தது. இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இராணுவம் அதனை விசாரித்து வருவதாகவும், இலங்கைப் பிரதிநிதி தெரிவித்திருந்தார்.

சர்வதேசநாடுகள் இலங்கை மீது தயாரித்த 210 பரிந்துரைகளை இந்தியா தனது செல்வாக்கையும், ராஜதந்திரத்தையும் பயன்படுத்தி அந்தப் பரிந்துரைகளைக் கைப்பற்றி அவற்றில் இலங்கை ஏற்றுக் கொள்ளும் பரிந்துரைகள் எவை, ஏற்றுக் கொள்ளாதவைகள் எவை என்பவற்றில் ஈடுபட்டு இந்தியா தனது நாட்டாமை வேலையைக் காட்டியது என்பது மனித உரிமை விடயத்தில் மட்டுமல்லாது இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா இன்னும் ராஜீவ் காந்தியின் மரணத்திற்காக பழிதீர்க்கவும், கணக்கு முடிக்கவும், வஞ்சம் தீர்க்கவும் ஏதுவாகத்தான் நடந்து வருகின்றது. இந்தியா இலங்கைத் தமிழர்களை வாரி அணைத்துக் கொண்டு வஞ்சகம் தீர்ப்பதில்தான் குறியாகவுள்ளது.

ஆனால், இந்தியா தொடர்ந்து இலங்கையைக் காப்பாற்ற முடியாது. நீதி ஜெயிக்கும், தர்மம் வெல்லும்,. மகாத்மா காந்தி பிறந்த மண்ணில் இருந்து கொண்டு, வாழ்ந்து கொண்டு இலங்கைத் தமிழர்களுக்கு தொடர்ந்து இந்தியா அநியாயம், அக்கிரமம் செய்வதை இறைவனும் பொறுக்கமாட்டான். காந்திஜியின் ஆத்மாவும் சாந்தியடையாது. இந்தியா இலங்கையை காப்பாற்றுவது என்பதற்கு அப்பால் இந்தியா இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய தேவையுள்ளது. இந்திய அரசு மீது சர்வதேச கண்டனங்கள் குவியப் போகின்றன. சர்வதேச குனிவொன்றை இந்தியா சுமக்கவுள்ளது. இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா செய்துள்ள கொடுமைகள் அரங்கிற்கு வரும் நாள் காத்திருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

09, ஜனவரி - 15 ஜனவரி, 2013

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14, டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 -5
E-mail: editorial@sudaroli.com

# நெடுநாளைக்கு முடியாது!

மகிந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பல்வேறு சிக்கலக்களை எதிர்கொண்டாலும் கூட அடுத்தடுத்து வந்த தேர்தல்களில் சிங்கள மக்களின் அமோகமான ஆதரவைப்பெற்றுக் கொண்டது. நீண்ட காலப் போரில் மகிந்த அரசாங்கம் பெற்றுக் கொண்ட வெற்றியே இதற்கு முதன்மையான காரணம் என்பதே உண்மையாகும். விடுதலைப் புலிகளை அழித்து போரில் வெற்றிகொண்டமையை பாரிய பரப்புரையாகத் தேர்தல் மேடைகளில் மேற் கொண்டது ஆளும்தரப்பு.

இப்பொழுதும் கூட உள்நாட்டில் இரண்டு விடயங்களுக்கு அரசாங்கம் அதிமுக்கியத்துவம் கொடுத்து வருவதை அவதானிக்கலாம். ஒன்று சிங்கள மக்களிடம் தமக்கிருக்கும் வாக்கு வங்கியை தக்கவைத்துக் கொள்வது, மற்றது, படையினரின் மத்தியில் செல்வாக்கைப் பெறுவது.

அதற்காக சில அபிவிருத்தி வேலைத்திட்டங்க ளைக் கிராமங்களிலும் நகரங்களிலும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. ஆனால், மக்களுக்கு இப்போது ஏற்பட்டுள்ள தொழில் மற்றும், பொருளா தார பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிய வில்லை.

வியாபாரிகள் உட்பட தனியார்துறையினர் பலர் பொருளாதார நட்டத்துடனேயே இயங்குகின்றனர். அடிமட்ட மக்களும் தங்களின் வாழ்க்கைச்செலவை சமாளிக்க முடியாமல் திண்டாடுகின்றனர். நாளுக்கு நாள் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படு கின்றன. இவை மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் போக்குகள் தொடர்பான நம்பிக்கையீனத்தை ஏற் படுத்தி வருகின்றது.

படையினருக்கான பல்வேறு வசதிகளை ஏற் படுத்திக்கொடுப்பதற்கான வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
படையிலுள்ளோரின் குடும்பங்களுக்கான வீடமைப் புத்திட்டங்கள் உட்பட பல நலத்திட்டங்களை அர சாங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. படையி னரை இவ்வாறு மகிழ்ச்சிப்படுத்துவதன் மூலம் நாட்டில் கலகங்கள் எவையும் முளைவிடுவதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

நாளாந்தம் மக்கள் எதிர்கொள்ளும் தினசரி வாழ்க்கைப் பிரச்சினைகளும் நாட்டில் ஏற்படுத்தப் பட்டு வரும் அநீதியான நடவடிக்கைளும் இப்போது சாதாரண சிங்கள மக்களை சிந்திக்க வைத்துள்ளன.

நீதித்துறை மீதான அரசாங்கத்தின் நடவடிக்கை களும், அதன் விளைவுகளும், இப்போது வெளி யாகியுள்ள தீர்ப்பின் தன்மையும் இந்த நாட்டில் அரசாங்கமே மோசமாக மாறியுள்ளதா என்கிற கேள்வியை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விட்டுள் ளன.

இவ்வருடம் நடைபெறவிருக்கும் ஐ.நாவின் மனித உரிமைகள் தொடர்பான கூட்டத்தொடர் இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் சிக்கல்களைக் கொடுக் கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த கூட்டத்தொடர்களில் இலங்கை மீது கண்டனங்கள், விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. தம்மீதான அக்குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாமல், தமது தரப்பின் நியாப்பாடுகளை மட்டுமே முன்வைத்து வந்தது. அரச உயர்மட்டக் குழுக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்து விளக்கமளிப்பதிலும் சில நாடுகளிடம் ஆதரவு கோருவதுமாகவே அதன் செயற்பாடுகள் தொடர்ந் தன- தொடர்கின்றன.

உள்நாட்டில், இலங்கையின் இறைமையில் வெளிநாடுகள் தலையிட முடியாது எனவும், யாருக் கும் நாடும் அரசும் அடிபணியாது எனவும் பெரும் பான்மைமக்களுக்கு உசுப்பேற்றும் விதமான பேச் சுக்கள், கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின் றன. ஆனாலும் அரசின் இந்தப் போக்கு நெடு நாளைக்கு நீடிப்பதற்கு உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் வாய்ப்பில்லை என்றே எண்ணத் தோன்று கின்றது.



# நிர்ப்பந்திக்கப்பட்ட மீள் நல்லிணக்கமா?

**இணைந்து கொண்ட பெண்களில் ஆறுபேர் தாங்கள் ஏமாற்றப் பட்டுவிட்டதை உணர்ந்து உடனடியாகவே வேலையிலிருந்தும் விலகிவிட்டனர். தாங்கள் மாட்டிக் கொண்டுவிட்டதை உணர்ந்து வீடு செல்ல விரும்பிய பெண்களே நோய்த்தாக்கத்திற்குள்ளாகினார்கள் இராணுவத்தினர் அவர்கள் வீடு திரும்பிச் செல்வதை விரும்பவில்லை யெனவும் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார். இப்பெண்கள் 2007 தொடக்கம் 2009 வரையிலான காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் சிறு சிறு பணிகளில் ஈடுபட்டு ஊதியம் பெற்றவர்கள் என அறியப் படுகின்றது. இப்பொழுதும் அதேபோன்றுதான் இராணுவத்தில் இணைந்து கொண்ட தமது பெண் பிள்ளைகளும் வேலை செய்யப் போகின்றனர் போலும் எனக் குடும்பத்தவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.**

இராணுவத்தில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட தமிழ்ப் பெண்களிற் சிலர் பயிற்சி வகுப்புகளின் பின்னர் மன வேதனைக ளுக்கு ஆளாகித் துன்புற் றமையினால், அவர்க ளுக்கு சிகிச்சையளித் ததின் பின்பு அவர்கள் குணமடைந்து இராணுவ முகாம்களுக்கு மீண்டும் திரும்பிச் சென்றுவிட்ட தாகக் கூறப்படுகின்றது.

இப்பெண்கள், இராணு வத்தில் அவர்களது பணி களைத் தொடர்ந்தும் செய்வதற்குரிய பூரண மான உடல் ஆரோக்கி யமும், தகுதியுமுடைய வர்களாக இருக்கின் றனர் என உளவியல் நிபுணரான மருத்துவர் தெளிவுபடுத்தியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் றுவான் வணிகசூரியாவும் தெரிவித்துள்ளார்.

உளநோய் மருத்துவ நிபுணரான சுப்பிரமணியம் சிவதாஸ், இப்பெண்கள் கடுமையான பயிற்சிகளி னால் உடற் சோர்வுகளுக்குள்ளாகி வேதனையை அனுபவித்ததாகத் தெரிவித்துள்ளதுடன் பாலியல் ரீதியான தொல்லைக ளுக்குட்படுத்தப்பட்டார்கள் எனும் கூற்றினை ஆட்சேபித்தது அவர்கள் எதுவித சிக்கல்களுக்கும் உள்ளாகவில்லை யென்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

அவர்கள் ஓர் சிறியகால அளவிலான கடும்ப யிற்சியினால் மட்டுமீறிய உணர்ச்சிக் கோளாறுகளுக்கு ஆட்பட்டிருந்தனரென்றும் இப்பொழுது அவர்கள் வேலைகளைத் தொடர்ந்து செய்வதற்குத் தகுதியுடையவர்களாக இருக்கின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இப்பெண்கள் முகாமிற்குத் திரும்பிச் சென்று அவர்களது வேலையை மீண்டும் தொடர்ந்து செய்வ தற்குத் தாங்களாகவே விரும்பி முன்வந்தனர் எனக் கூறப்படுகின்றது. ஆனால் பலர் இதனை ஆட்சேபிக்கின்றனர்.

இப்பெண்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வேலைகளில் ஏமாற்றமடைந்துள்ளதுடன், மன அழுத்தங்களுக்குள்ளாகிய நிலையில், அதனை விட்டு வெளியேறவே விரும்புகின்றனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

அதேசமயம், தன்னை இனங்காட்டிக்கொள்ள விரும்பாத ஓர் உளவியல் ஆலோசனை வழங்குபவர், புதிதாக இணைக்கப்பட்ட இப்பெண்களைச் சந்தித்து உரையாடியதாகவும், அந்நேரத்தில் அவர்கள் தமது உண்மையான உணர்ச்சிகளையும் மற்றும் உள்ளுணர்வுகளையும் தமக்கு உளவள ஆலோசனை வழங்கிய மருத்துவ நிபுணரிடம் தெரிவிப்பதற்கான நம்பிக்கையை உண்டு பண்ணுவதற்குரிய வாய்ப்புத் தமக்குக் கிடைக்கவில்லையெனக் கூறி விசனித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தொடர்ந்து கூறுகையில் "சிகிச்சையின் பின்னர் மருத்துவர் சிவதாஸ், அவர்களிடம் வீட்டிற்கு செல்ல விரும்புகின்றீர்களா? அல்லது வேலைக்குச் செல்ல விரும்புகின்றீர்களா? எனச் சுற்றி வளைக்காது நேரடியாகக் கேட்டுள்ளார். அவர்களும் இராணுவத்தை விட்டு விலகும் பட்சத்தில் ஏற்படக்கூடிய தொல்லைகள் மற்றும் பின்விளைவுகள் குறித்து அச்சத்தினால் வேறு வழியின்றி வேலைக்குத் திரும்புவதைத் தேர்ந்தெடுத்தனர். தப்பிக்க முடியாத ஓரிடத்தில் வலிந்து சிக்கிக்கொண்டு விட்டதான ஓர் அச்சத்தில் அவர்கள் உள்ளனர். தமிழ் மக்களின் நம்பிக்கைகள் மற்றும் கொள்கைகளுக் கெதிரான ஓர் வேலையை ஒப்புக்கொள்வதற்கு அவர்கள் பொய்கூறி ஏமாற்றித் தவறாக வழிநடத்தப்பட்டுவிட்டனர் எனவும் கூறியுள்ளார்.

இவ்வேளை ஓர், படைத்துறை சாராத வேலையெனவும், முகாமுக்குள்ளேயே வேலைசெய்யவேண்டுமெனவும் அவர்களுக்குக் கூறப்பட்டது. ஆனால் அவர்கள் கடுமையான பயிற்சிக்குள்ளாக வேண்டியிருந்தது.

இப்பெண்கள் சேலை அணிந்தவாறு, இராணுவ முகாமிற்குள் சண்டை நடவடிக்கைகளில் ஈடுபடாதவகையில் வேலை செய்துவிட்டுத் தினமும் வீடு திரும்பலாமெனும் ஓர் புரிந்துணர்வினைக் கொண்டிருந்தனர். ஆனால், பயிற்சிக் காலத்தின் போது தாங்கள் துவக்குகளைச் சுமக்க வேண்டிய தேவையுள்ளது என்பதையும், சிறீலங்கா இராணுவத்தில் அவர்களும் ஓர் அங்கம் என்பதையும் கண்டறிந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்திற்கான இவ் ஆட்சேர்ப்பின் போது, அதற்குரிய நடைமுறைகள் பின்பற்றப் படவில்லை யென்பதைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச் சந்திரன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் இராணுவத்தில் இணையும் பெண்களுக்கு ரூபா 30,000 ஊதியமாக வழங்கப் படும் என்று இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று கவர்ச்சியூட்டி இழுக்கும் விதத்தில் குடும்பங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் வறுமையின் தாக்கத்திற்குள்ளாயிருக் கும் ஒரு குடும்பத்திற்கு ரூபா 30,000 என்பது பெரிய காசாகும். அதைவிட இவ்வேலை கிராமத்தி லேயே செய்யப்பட வேண்டிய ஓர் அலுவலக வேலை போன்ற தெனவும் இராணுவப் பயிற்சி தேவை யற்றது எனவும் அவர்க ளுக்குக் கூறப்பட்டிருந்தது.

இணைந்து கொண்ட பெண்களில் ஆறுபேர் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதை உணர்ந்து உடனடி யாகவே வேலையிலிருந்தும் விலகி விட்டனர். தாங்கள் மாட்டிக் கொண்டுவிட்டதை உணர்ந்து வீடு செல்ல விரும்பிய பெண்களே நோய்த்தாக்கத்திற்குள்ளா கினார்கள் இராணுவத்தினர் அவர்கள் வீடு திரும்பிச் செல்வதை விரும்பவில்லை யெனவும் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.



இப்பெண்கள் 2007 தொடக்கம் 2009 வரையி லான காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் சிறு சிறு பணிகளில் ஈடுபட்டு ஊதியம் பெற்றவர்கள் என அறியப் படுகின்றது. இப்பொழுதும் அதே போன்று தான் இராணுவத்தில் இணைந்து கொண்ட தமது பெண்பிள்ளைகளும் வேலை செய்யப்போகின்றனர் போலும் எனக் குடும்பத்தவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களை 22-23 வயதுக்குட்பட்டவர்களே முனைப்பான பயிற்சிகள் தொடங்கிய போதுதான், தாங்கள் அதற்குரிய சீருடைகளை அணிய வேண்டியிருப் பதையும், முகாமில் தங்கியிருந்து இராணுவ வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதையும் உணர்ந்து கொண்டனர். இது அவர்களுக்கு மன உளைச்சலை அதிகரித்துள்ளது. அத்துடன் தமிழ் மக்களையும், தமது உற்றார் உறவினர்கள் மற்றும் தம்மை நேசித்தவர்களையும் திகிலூட்டும் விதத்தில் கொலை செய்த சிறீலங்கா இராணுவத்தில் தாங்க ளும் ஓர் அங்கமாகி விட்டதனால் தமது சொந்தச் சமூகத்திற்கே நம்பிக்கைத் துரோகிகளாகி விட்டோ மென்பதையும் உணர்ந்து கொண்டனர். அதுமட்டு மன்றித் தமது உறவினர்கள் மற்றும் அயலவர்கள் கூடத் தம்மைத் துரோகிகளாக எண்ணி விட்டு விலகத் தொடங்கிவிடுவார்கள் என்பதையும் புரிந்து கொண்டனர்.

மேலும் கிளிநொச்சி மருத்துவமனையில் உளவள ஆலோசனை வழங்கக்கூடிய பட்டம் பெற்ற ஒரு மருத்துவரே உள்ளார். அவரைத் தவிர உளவியல் மருத்துவ நிபுணர் வேறெவரும் இல்லை யெனவும் அறிய முடிகின்றது. அவரால் கையாள இயலாத நோயாளிகள் எவராவது இருப்பின் அவர்களை அவரின் பரிந்துரையின் பேரில் யாழ்.போதனா வைத்தியசாலை உளவியல் மருத்துவ நிபுணரிடம் அனுப்புவதே வழமையாக இருந்து வந்தது.

**ஏற்றுக்கொள்ளப்படாத நடைமுறை**

எனினும் கிளிநொச்சி மருத்துவ மனையிலுள்ள ஆலோசகர் டொக்டர் ஜெயராஜ் அவர்களிடம் இப் பெண்களை அனுப்பாது இராணுவத்தினர். உள நோய் நிபுணரான டொக்டர். சிவதாசுடன் நேரடியாக ஆலோசித்துள்ளனர். இது வழமையான நடைமுறைக்கு பின்பற்றுவதாக இருக்கவில்லை யெனக் கூறப்படு கின்றது.

கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட இந்த 15 பெண்களுக்கும் சிகிச்சையை மேற் கொண்டதாகக் கூறப்படும். மருத்துவ நிபுணர் சிவதாஸ், பாலியல் ரீதியான தொந்தரவுகள் மற்றும் உளரீதி யான மனக் கோளாறுகள் எனத் தெரிவிக்கும். அறிக்கைகளை நிராகரித்துள்ளார். இந் நோயின் அறிகுறிகள் வெளிப்படுத்த முடியாத அந்தரங்க மான மிகை உணர்சிகளின் கூட்டான வெளிப்பா டேயாகும் என விபரித்துள்ளார்.

இப்பெண்கள் வறுமையின் நிமித்தம் தாங்களா கவே விரும்பி இராணுவத்தில் இணைந்து கொண்டி ருந்தாலும் கூட அவர்கள் இவ்வேலை தங்களது கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை நடைமுறைக்கு ஒவ் வாதது என்பதை உணர்ந்து கொண்டமை அவர்க ளுக்குள் ஓர் அந்தரங்கமான ஒவ்வாமையை அல்லது முரண்பாடுகளை ஏற்படுத்திவிட்டது. அதுமட்டுமன்றி இத்தொழில் தமிழ் தேசியத்திற்கும் எதிரானது என்பதை யும் புரிந்துள்ளனர்.

ஆட்சேர்ப்பு நடைமுறை கட்டளை நியதிகளுக்கு நேரெதிராகவே அமைந்திருந்தன. பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படவில்லை. வர்த்தமானியில் அறிவித்தல் கொடுக்கப்படவில்லை. நியமனக் கடி தங்கள் வழங்கப்படவில்லை. ஆட்சேர்ப்புத் தினத் தன்று தம் புதல்விகளை இராணுவத்தில் இணை வதற்கு ஒப்புதலளித்தமைக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் ஒவ்வொரு பெற்றோர்களுக்கும் சான்றி தழ்கள் வழங்கப்பட்டமை விசித்திரமானதாகத் தோன் றியது. தந்தையர்கள் மாலையணிவிக்கப்பட்டும் தாய் மார்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டும் நன்றி பாராட்டப் பட்டது.

**நிகழ்ந்தது என்ன?**

கார்த்திகை 14ம் திகதி மொழிப் பயிற்சிக்குக் கூட்டிச் செல்வதற் காக ஆயத்தமாக இருக்கும்படி அறி விக்கப்பட்டது. 15ம் திகதி பெண்கள் இராணுவ முகா மிற்குக்கூட்டிச் செல்லப்பட்டனர். 16 ம் திகதி ஒத்தி கைகள் ஆரம்ப மாகி. அத்துடன் 17 ஆம் திகதி ஆட் சேர்ப்பு வைபவம் இடம்பெற்றது.

அன்றைய தினத் தில் 60 பெண்கள், இராணுவத்தில் இணைப்பதற்குத் தங்களைத் தவறாக முட்டாளாக்கி விட்டனர் எனக்கூறிப் பிரச்சினை களை உருவாக்கினார்கள். இதனை அன்றைய தின வைபத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களில் அவர்கள் அழுத வண்ணமிருப்பதை காணக்கூடிய தாகவிருந்தது. ஆனால், அது அவர்களின் உணர் வுகளின் வெளிப்பாடேயாகும். ஆயினும், தாங்கள் திரும்பி செல்வதால் தமது குடும்பத்தவர்களுக்கு ஏற்படக்கூடிய தொல்லைகள் மற்றும் பின்விளை வுகள் குறித்து அவர்கள் அச்ச மடைந்துவிட்டனர்.

இராணுவத்தில் அவர்களை இணைத்துக் கொள்வதற்கு முன்பதாக எடுக்கப்பட்ட மருத்துவ அறிக்கைகள் அவர்கள் உடல் ரீதியாகவும் மற்றும் உளரீதியாகவும் உறுதியாக இருந்தனர் என்பதை உறுதி செய்வனவாக இருக்கின்றன. ஆனால் இவ் விசித்திரமான நடத்தை அவர்களின் அந்தரங்க உணர் வுகளின் வெளிப்பாடாகவே இருக்கின்றது.

உண்மையில் உளவள ஆலோசனைக்கு உட்படுத் தப்படுபவர்கள் தமது ஆலோசகரிடம் அவர்களது அந்தரங்க உணர்வுகளின் இரகசியங்களை வெளிப் படுத்துவதற்குரிய தைரியத்தை ஏற்படுத்த வேண்டு மாயின் அவர்களுக்குக் குறைந்தது இரண்டு அல்லது மூன்று தடவைகளுக்கும் அதிகமாக உளவள ஆலோ சனைகளை நடத்துதல் வேண்டும்.

ஆனால், இவர்களிடம் உளவியல் நிபுணர் சுற்றி வளைக்காது நேரடியாகவே வீட்டிற்குச் செல்லப் போகின்றீர்களா? அல்லது வேலையைச் செய்யப் போகின்றீர்களா என எடுத்த வாக்கிலேயே கேட்ட தற்கு அவர்கள் தாமாகவே முன்வந்து வேலையி லேயே இருப்பதாகக் கூறியுள்ளனர். ஏனெனில், அச்சமயத்தில் நிபுணரிடம் தமது அந்தரங்க உணர் வுகளை வெளிப்படுத்தும் அளவிற்கு நம்பிக்கையை அவர்கள் கொண்டிருக்கவில்லையென்பதே நியாய மாகும்.

அத்துடன், அவர்கள் மருத்துவமனையில் தங்கி யிருந்த வேளையில் அவர்களின் பெற்றோர்களைத் தவிர வேறெவருமே அவர்களைப் பார்வையிட அனு மதிக்கப்படவில்லை. அதற்கான காரணம் என்ன?

மனட்சாட்சி உறுத்தல்கள் எதுவும் அற்றவர்கள், இராணுவத்தில் தொடர்ந்தும் வேலை செய்ய விரும்பு பவர்கள் மற்றும் ஆழந்தெரியாமல் காலை விட்டு விட்டோமே, என வீடு திரும்ப விரும்பினாலும் கூட வழிதெரியாமல் யோசிப்பவர்கள் என இணைக்கப் பட்ட இப்பெண்களில் மூவகையினர் உள்ளனர். குறித்த இப் 15 பெண்களும் கடைசி வகையினைச் சேர்ந்தவர்கள்.



கார்த்திகை 5 ஆம் திகதி அவர்களுக்கான மருத்துவப் பரிசோதனை இடம்பெற்ற சமயத்தில், அவர்களின் பெற்றோர்களும் சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் இரு தந்தையர்கள். அங்கு இடம்பெற்ற மருத்துவப் பரிசோதனைகள் இராணுவத்திற்கான ஆட்சேர்பு முனையினை ஒத்ததாக இருந்ததை அவதானித் தவுடன் தமது பெண் பிள்ளைகளைத் தடுத்து நிறுத்தி அவர்களுடன் உடனடியாக அந்த நான்கு பெண்களுடன் அவ்விடத்தை விட்டு அகன்று விட்டனர். தனியாகப் பரிசோ தனைக்கு வந்த பெண்கள் அச்சத்தினால் பின்வாங்கிச் செல்லாது இருந்துவிட்டனர்.

ஒத்திகை தினத் தன்று மேடையில் இராணுவத் தின் கொடி காட்சிப் படுத்தப்பட்டிருந்ததைக் கண்ட பெண்கள், இணை வதற்கு மறுப்புத் தெரிவித்த வேளை யில் அது சிங்களப் படைவீரர்களுக்காக வேயன்றி உங்களுக்காக அல்லவெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் தம்வசமிருந்த கைத்தொலைபேசிகள் மூலம் பெற்றோர்களைத் தொடர்பு கொண்ட 5 பெண்கள் தமது பெற்றோர்கள் வந்ததும் உடனடியாக அவ்விடத்தைவிட்டு வெளியேறிவிட்டனர்.

இப் பெண்கள் தங்களுக்கு விரிக்கப்பட்ட வலை யில் சிக்கிக்கொண்டுவிட்டதை உணர்கின்றனர். ஆயினும் நிலைமை அவர்களது கட்டுப்பாட்டிற்கும் அப்பால் சென்றுவிட்டது.


30 ஆண்டு கால யுத்தத்தின் விளைவாகத் தமது உறவினர்கள் நண்பர்களைக் கொலை செய்த வர்கள் என்ற ஓர் எண்ணம் சிறீலங்கா இராணுவத் திற்கு எதிராக அனைவர் மனங்களிலும் உள்ளது. இது மெல்ல மெல்லக் குறைவதற்குச் சில வருடங் களாவது பிடிக்கும். அதைவிட்டு இப்போது இராணு வத்தில் இணைப்பது அவ்வளவு புத்திசாலித்தன மானதல்ல எனும் அபிப்பிராயத்திலேயே பெரிதள வில் மக்கள் கொண்டுள்ளனர்.

**சண்டேலீடர் பத்திரிகையில்**
**கிருஷாந்தி கிறிஸ்ரோபர் எழுதியது**

**தமிழில் - யஸ்ரின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் குறுக்கே கோபம்!



கோபமாக இருக்கும் ஒவ்வொரு நிமிடமும், அறுபது வினாடி ஆனந்தத்தைத் தொலைத்து விடுகிறோம் என்கிறார் ரால்ப் வால்டோ.

ஆனந்தமும், கோபமும் எதிர் எதிர்த் துருவங்களில் வேர்விட்டு அமர்ந்திருப்பதை அவருடைய வார்த்தைகள் சுட்டிக் காட்டுகின்றன.

எனக்குக் கோபமே வராது என்று யாராவது சொன்னால் அவர் பொய் சொல்பவராக இருக்க வேண்டும். அல்லது அதிசயப்பிறவியாய் இருக்க வேண்டும்.

கோபம் தும்மலைப் போன்றது. சாதி, மத, நிற பேதமில்லாமல் எல்லோருக்குமே வரும். சிலரிடம் நீங்க அடிக்கடி கோபப்படுவீங்களாமே? என்று கேட்டால் கூட எவன்டா அப்படிச் சொன்னது? என கோபப்பட ஆரம்பித்து விடுவார்கள்.

இதில் சமர்த்துக் கோபம் ஒன்று உண்டு. வரையறுக்கப்பட்ட, கட்டுக்குள் இருக்கக் கூடிய, நிலை தடுமாற வைக்காத கோபத்தை அப்படி அழைக்கிறார்கள். உதாரணமாக உங்கள் குழந்தை கீழ்ப்படிதல் இல்லாமல் வளர்கிறது எனில் உங்களுக்குக் கோபம் எழும். அந்தக் கோபம் கத்தலாகவோ, சண்டையாகவோ இல்லாமல் வரையறுக்கப்பட்ட நிலையில் வெளிப்படும்போது வழிகாட்டும் அறிவுரையாய் மாறி விடுகிறது.

"மனேஜர் கோபப்படுறதுலயும் ஒரு நியாயம் இருக்கு. இன்றைக்கு வேலையை முடிக்காவிட்டால் சிக்கல் பெரிசாயிடும்" என பேசிக்கொள்ளும் ஊழியர்கள் மேலதிகாரியின் நியாயமான கோபத்தைப் பேசுகிறார்கள்.

ஆனால் கண்கள் விரிய, கைகளை நீட்டி, குரலை உயர்த்தி ஆவேசமாய்ப் பேசும் கோபம் எந்த இடத்திலும், எந்தச் சூழலிலும் கொண்டாடப்படுவதில்லை என்பதே உண்மை.

கோபத்தை ஒரு மிகப்பெரிய கோடு கிழித்து இரண்டு பாகமாக பிரிக்கிறார்கள். ஒன்று வெளிப்படையான கோபம். நீ... எப்படி என் மனைவியைப் பற்றி தப்பாப் பேசலாம் என நரம்புகள் புடைக்கக் கத்தும் கோபம். இதை 'எக்ஸ்ப்ளோசிவ் அங்கர்' என்பார்கள்.

இரண்டாவது உள்ளுக்குள் உடைந்து சிதறும் கோபம். இதே பிரச்சினையில் எதிராளி உயர் அதிகாரியாகவோ, அரசியல்வாதியாகவோ இருக்கும்போது கோபத்தை வெளிக்காட்டாமல் உள்ளுக்குள்ளேயே அடக்கி விடுகிறோம். அது ஒரு கண்ணி வெடிபோல உள்ளுக்குள் வெடித்துச் சிதறும். இதை 'இம்ப்ளோசிவ் அங்கர்' என்பார்கள்.

எந்த வகைக் கோபமாக இருந்தாலும் அது நமது உடலையும், மனதையும் ஒரு கை பார்க்காமல் விடாது என்பது தான் உண்மை. சண்டை, அடிதடி, பிரிவுகள், தோல்வி, உடல் பலவீனம் எல்லாவற்றுக்கும் அடிப்படையில் இந்தக் கோபமே பதுங்கிக் கிடக்கிறது.

மாரடைப்பு, மன அழுத்தம், தலைவலி, வயிற்று வலி, உயர் ரத்த அழுத்தம், தோல் வியாதிகள், வலிப்பு என பல நோய்களுக்கும் கோபமே அடிப்படையாய் இருப்பதாக மருத்துவம் நீட்டும் பட்டியல் எச்சரிக்கிறது.

அமெரிக்காவின் ஒஹையோ பல்கலைக்கழக ஆய்வு ஒன்று இன்னும் ஒரு படி மேலே போய், நோய்கள், காயங்கள் போன்றவை குணம் அடையாமல் இருப்பதன் காரணமும் கோபமே என்கிறது.

கோபத்தின் கொடுமையான விளைவுகளைச் சிறைக் கைதிகளின் கதைகள் துயரத்துடன் பேசுகின்றன. ஏதோ ஒரு ஆவேசத்தில் தன்னிலை மறந்து யாரையோ தாக்கிவிட்டோ, கொன்று விட்டோ, பழி தீர்ப்பதாய் நினைத்துக் கொண்டே பலரும் சிறைச்சாலைக்கு வந்து விடுகிறார்கள். பின் தங்களுடைய கோபத்தின் மீதே கோபம் கொண்டு மிச்ச வாழ்க்கையைக் கண்ணீரின் கரைகளில் வாழ்ந்து முடிக்கிறார்கள்.

இருபத்து ஆறு ஆண்டுகள் சிறையில் வாடிவிட்டு வெளியே வந்தபோது நெல்சன் மண்டேலாவுக்கு சிறை அதிகாரிகளின் மீது கடுமையான கோபம் வந்தது. ஆனால் அடுத்த நிமிடமே அதை அழித்து விட்டு, சிறையின் கோபங்கள் சிறையுடனே போகட்டும் என வெளிச்சத்தை நோக்கி நடைபோட்டாராம். இதை அவருடைய சிறை அனுபவக் குறிப்புகள் பேசுகின்றன.

உறவுகளுக்கு இடையே வரும் பிளவுகளும் கோபத்தின் குழந்தைகளே. கொஞ்சம் அவசரப்பட்டுட்டேன் என்றோ, கொஞ்சம் நிதானமாய் நடந்திருக்க வேண்டும் என்றோ தான் விவாகரத்துகளின் சோகக் கதைகள் புலம்பித் திரிகின்றன.

கத்துவது, அவமானப்படுத்துவது, அடுத்தவரை குற்றவாளியாக்குவது, பழி சுமத்துவது, நான் சொல்வதே சரியென பிடிவாதம் செய்வது, நீ எப்பவுமே இப்படித்தான் என பாய்வது.... என மணமுறிவுக்கான காரணங்கள் எக்கச்சக்கம்.

அலுவலகத்தில் வெற்றியைத் தட்டிப் பறிப்பதும், பதவி உயர்வைக் கெடுப்பதும் பல வேளைகளில் இந்த பாழாய்ப் போன கோபமேதான். கொஞ்சம் கோபப்படாமல் இருந்திருக்கலாம்... மெயில் அனுப்பித் தொலச்சுட்டேன்... என்பது போன்ற உரையாடல்கள் அலுவலக வராண்டாக்களில் உலவித் திரிவதை அடிக்கடி கேட்க முடியும்.

மொத்தத்தில் கோபம் எனும் ஒரு கொலைக் கருவி வெட்டிப் புதைத்த வாழ்க்கையின் கணக்குகள் எண்ணிலடங்காதவை.

கோபமும், மன்னிப்பும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. நான் செய்வதும் சொல்வதும் சரியானவை, மற்றவர்கள் செய்வது தவறு எனும் புள்ளியிலிருந்தே பெரும்பாலான கோபங்கள் புறப்படுகின்றன. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் எனில் சுயநலமே கோபத்தின் அடிப்படை. மன்னிக்கும் மனதை வளர்த்துக் கொண்டால் கோபத்தின் தளிர்கள் காய்ந்து விடும். இதையே எல்லா மதங்களும், மகான்களும் போதித்துச் செல்கின்றனர்.

அவர் 'வள் வள்' என்று எரிஞ்சு விழுகிறார். வீட்டில சண்டை போட்டுட்டு வந்திருப்பார் போல... என்பது சர்வசாதாரணமான ஒரு பேச்சு. இது கோபத்தின் மிக முக்கியமான ஒரு பண்பை வெளிப்படுத்துகிறது. கோபம் என்பது எங்கோ ஒரு இடத்தில் உருவாகி அங்கேயே முடிந்து விடுவதில்லை. அடுத்தடுத்த இடங்களில் அது தொடர்ந்து, அந்தக் கோபம் மறையும் வரை நாம் செய்யும் செயல்கள் எல்லாவற்றிலும் அதன் பாதிப்பு நேர்ந்து விடுகிறது என்பதே அது!

நான் ஒரு கோபக்காரன் என்பதைப் புரிந்து கொள்வது தான் கோபத்தை வெற்றி கொள்வதன் முதல் படி. எனக்கு நோயே இல்லை என்பவர்கள் குணமடைவதில்லை. கோபம் இருப்பதைப் புரிந்து கொண்டால், இந்தக் கோபத்துக்குக் காரணம் நான் மட்டுமே. நான் நினைத்தால் இந்தக் கோபத்தை எப்படி வேண்டுமானாலும் கட்டுப்படுத்த முடியும் எனும் எண்ணத்தையும் மனதில் எழுதிக் கொள்ளுங்கள்.

00

கோபத்தைக் கட்டுப்படுத்த பல்வேறு வழிகளை பலரும் பரிந்துரை செய்கின்றனர். வல்லுநர்களின் ஒருமித்த பார்வையின் அடிப்படையில் கிடைக்கும் சில பரிந்துரைகள் இவை...

1. யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளப் பழகுங்கள். எல்லாமே நம்முடைய விருப்பப்படியும், திட்டத்தின் படியும் நடக்கப் போவதில்லை. வாழ்க்கையின் இந்த உண்மை நிலையைப் புரிந்து கொள்வது தேவையற்ற கோபங்கள் எழுவதைத் தவிர்க்கும்.

2. கோபத்தை அன்பினால் நிரப்பப் பழகுங்கள். இன்னா செய்தாரை ஒறுத்தலும், நன்னயம் செய்தலும் உறவுகளுக்கிடையே நீண்டகால பந்தத்தை உருவாக்கும். அடுத்தவர்கள் என்ன செய்யவில்லை எனும் பார்வையிலிருந்து, நான் என்ன செய்தேன் என பார்வையை மாற்றுவதே இதன் அடிப்படை.

3. கோபத்தை மூட்டை கட்டிக்கொண்டு திரியாதீர்கள். கோபம் உடனுக்குடன் கரைவதே நல்லது. அப்படியே நீடித்தாலும் ஒரு நாளின் கோபம் அடுத்த நாள் வரை போகவே கூடாது என்பதில் உறுதியாய் இருங்கள். இந்த நாள் புத்தம் புதிது என்றே ஒவ்வொரு நாளையும் எதிர்கொள்ளுங்கள்.

4. கோபம் வந்தவுடன் அதை உணர்ந்து கொள்ளுங்கள். மூச்சுப் பயிற்சி, பார்வையை வேறு இடத்துக்கு மாற்றுவது, மகிழ்ச்சியான ஒரு பகல் கனவில் மூழ்குவது, நூறிலிருந்து ஒன்று வரை தலைகீழாய் எண்ணுவது என உங்கள் கவனத்தை மாற்றுங்கள். கோபம் தற்காலிகமாய் தள்ளி நிற்கும்.

5. சாதகமான மனநிலையுள்ள மனிதர்களுடன் உங்களின் சகவாசத்தை வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய கோபம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடும்.

6. நமக்குப் பிடிக்காதவர்களைப் பற்றிய சிந்தனைகளைக் கொஞ்சம் ஒதுக்கி விட்டு, நமக்குப் பிடித்த நண்பர்கள், உறவினர்கள், அவர்கள் செய்த நல்ல விடயங்கள் இவற்றைப் பற்றியும் அடிக்கடி அசை போடுங்கள்.

7. சிரிக்கப் பழகுங்கள். நகைச்சுவை நூல்களை வாசியுங்கள். மற்றவர்களோடு சிரித்து மகிழ்ந்து இருப்பவர்களுடைய உடலில் கோபத்தைக் கிளறும் வேதியியல் பொருட்கள் அதிகமாய் சுரக்காது என்பது மருத்துவ உண்மை.

8. இப்போது கோபத்தைத் தூண்டிய இந்தச் செயல் சில ஆண்டுகள் கழித்தும் கோபம் கொள்ளச் செய்யுமா என யோசியுங்கள். டிராபிக்கில் கத்துவதும், வரிசையில் ஒருவர் புகுந்தால் எரிச்சலடைவதும் தேவையற்றவை என்பது புரியும்.

9. இந்தச் செயல் உங்கள் மீது திட்டமிட்டே செய்யப்பட்டதா? அடுத்த நபரின் இடத்தில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்? இதே தவறை நீங்கள் செய்தால் உங்கள் மீதே கோபம் கொள்வீர்களா என யோசியுங்கள். பெரும்பாலான கோபங்கள் காணாமல் போய்விடும்.

10. மனதார மன்னியுங்கள். இந்த ஒரே ஒரு பண்பு உங்களிடம் இருந்தால் கோபத்தை மிக எளிதாக வெல்லவும் முடியும், வெற்றியை ஆனந்தமாய் அனுபவிக்கவும்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தமிழரது பெருநாள்
தைப் பொங்கல் திருநாள்
செம்மொழி மாந்தர்களின்
தித்திக்கும் சிறப்பு நாள்!

உழவரது உள்ளங்கள்
உவகையால் மகிழும் நாள்
அழகு மொழித் தமிழரில்லமெல்லாம்
அமுது வைக்கும் பொங்கல் நாள்!

மங்களம் பொங்கும் காலம்
மகத்தான தை மாதம்
தங்கத் தமிழும்
தமிழுணர்வும் தமிழர் தம்
தரமான பண்பாடும்
தமிழ்த் தேசியத்தில்
தணியாத பற்றும் இத்
தரணியெங்கும் பொங்க வேண்டும்!

எங்கள் தமிழுக்கு இனிய நம்
இனத்திற்கு இன்னல் களைய
புதுப்பானை பொங்குதல் போல்
பொங்கி எழுவோம்...!

சேனையூரான்
மூதூர் கிழக்கு.




அழுகிறது முட் செடி ஒன்று
தன் நிலை எண்ணி

வெறுக்கிறது உலகம் என்னை
வேண்டாம் என்று...
சிரிக்கிறது பூக்கள் கூட
என் நிலை கண்டு...

எனக்கும் ஆசைதான்
ஒரு வீட்டு முற்றத்தில் வளர -
எனக்கும் ஆசைதான்
பூவொன்றாய் மலர -

என்ன செய்ய
இறைவனின் சாபம்
விட்டு விட்டான்
வேண்டாத ஒன்றாய்!

சிரித்த பூக்களிடம்
சினம் கொள்ள மனமில்லை
பழித்த பறவைகளிடம்
பழிவாங்க எண்ணமில்லை
வெறுத்த மனிதனையும்
நொந்து கொள்ள -
நினைக்கவில்லை.

படைத்த இறைவனையே
பகலிரவாய் கேட்கிறேன்
ஏன் என்னைப் படைத்தாய் என்று...

ஏ.ஆர்.எம்.நியாஸ்
அட்டாளைச்சேனை.




மழையே
மதியமாவது
ஓய்வு எடுப்பாயா
தற்காலிக கூடாரத்தினூடு
சிந்தும்
மழை நீரை
ஏந்த வைத்த
சட்டி பானையெல்லாம்
எடுத்து
சமைக்க வேண்டுமே.

வன்னி ஆதவன்




வீழ்ந்து விடாதே
வீழ்ந்து வீழ்ந்து
மீண்டும் முடியும் என்று எழு
நீண்டு கொண்டே செல்லும் உன் -
வெற்றிப் பயணம்.

முடியாது என முடங்கி
முயற்சி தன்னம்பிக்கை இன்றி
பிறர் வார்த்தைக்காய் தலைகுனிந்தால்
பின்னோக்கி பாழான குழிக்குள் மாண்டு -
போகும் உன் வாழ்வு.

முயன்றால் முடியும்!
விஞ்ஞான உலகினில் – நீயும்
விந்தைகள் செய்துவிட
நெஞ்சிலே வீரத்துடன்
அஞ்சாது முன்னேறு.


வேல்மகள்
புளியம்பொக்கணை.

## வேசம்

போட்ட வேசம் கலைந்த போது
சிதறிப் போனது மனது
சிரித்து மகிழ்ந்த மனங்கள் - எல்லாம்
சிதறிப்போனது - செய்திடா செயலைக் கண்டு
தூற்றிப்பேசுதடா என்னுறவுகள்
போற்றுவோர் போற்றட்டும் புகழ்வாரி
தூற்றுவோர் தூற்றட்டும் புழுதிவாரி
எதற்காகவும் கலங்கிடாமல் கண்ணீர்த் துளியினை -
சிந்திடாமல்
காலத்தை வெல்லும் கனவுகளுடன் - நீ மட்டும்
வேசம் போடாது - அன்பாய் இரு.



நா.சாளினி
குட்டிசுட்டபுலம் வுலார்விளான்.



## பாசம்

பிஞ்சுக் குழந்தையில் தாய்ப்பாசம்
அஞ்சு வயசினில் தந்தைப்பாசம்
துள்ளித் திரிகையில் உறவின் பாசம்
பள்ளிப் பருவத்தில் குருவின் பாசம்
வீட்டில் இருக்கையில் சகோதரப்பாசம்
றோட்டில் கிடக்கையில் பிச்சைப்பாசம்.

வேல்.நயன்
புளியம்பொக்கணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராசி பலன்

**09.01.2013 - 15.01.2013**




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

எதிலும் மாற்றத்தை விரும்புபவர்களே! பணவரவு திருப்திகரமாக இருக்கும். மகனுக்கிருந்து வந்த கெட்ட பழக்க வழக்கங்கள் நீங்கும். தந்தைக்கு மனஅழுத்தம், வேலைச்சுமை வந்து போகும். அவருடன் மோதல்கள் வரக்கூடும். மனக்குழப்பம், முன்கோபம், தடுமாற்றம், உடல் உஷ்ணம் வந்து செல்லும். யதார்த்தமான முடிவுகளாலும், பக்குவமான பேச்சாலும் முன்னேறும் வாரமிது.



**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

தராதரம் அறிந்து பழகுபவர்களே! யாரையும் சார்ந்திருக்காமல் தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தோற்றப் பொலிவு கூடும். எளிதில் செரிமானமாகக் கூடிய உணவுகளை உட்கொள்வது நல்லது. பண விஷயத்திலும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருங்கள். தனக்கென தனிப்பாதை அமைத்துக் கொள்ளும் வாரமிது.



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

சமயோஜித புத்தியால் சாதிப்பவர்களே! சிறுசிறு விபத்துகள் வந்து போகும். நெருங்கிய நண்பர்களாக இருந்தாலும் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம். பிள்ளைகளை அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நல்லது. சகோதரங்களுடன் மனவருத்தம் வரும். மனக்கட்டுப்பாடும், உடற்பயிற்சியும் தேவைப்படும் வாரமிது.



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

மனதில் பட்டதை மறைக்காதவர்களே! பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். மனஇறுக்கம் உண்டாகும். திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். சக ஊழியர்கள் சில நேரங்களில் உங்களுடன் ஒத்துழைக்க முரண்டு பிடிப்பார்கள். முக்கியமானவர்களின் ஆதரவால் வெற்றி பெறும் வாரமிது.



**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

தன்மானத்தை விட்டுக் கொடுக்காதவர்களே! உங்களின் மாறுபட்ட அணுகுமுறையைக் கண்டு எல்லோரும் அதிசயிப்பார்கள். நீண்ட நாட்களாகப் பார்த்து பேச நினைத்த நண்பர்கள், உறவினர்களை சந்தித்து மகிழ்வீர்கள். தந்தைவழி உறவினர்களால் அலைச்சல் இருக்கும். பழைய சிக்கல்கள் தீரும் வாரமிது.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம் 1,2 ம் பாதங்கள்**

பாகுபாடு இல்லாமல் பழகுபவர்களே! உற்சாகமாக புது முயற்சிகளில் இறங்குவீர்கள். உங்களுடைய எதிர்பார்ப்புகளுக்குத் தகுந்தாற் போல் ஒருவர் அறிமுகமாவார். வாயு பதார்த்தங்கள், கார உணவுகளைத் தவிருங்கள். கண்ணைக் கொஞ்சம் பரிசோதித்துக் கொள்ளுங்கள். தவிர்க்க முடியாத செலவுகளால் தர்மசங்கடத்தில் திணறும் வாரமிது.



**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

மூட நம்பிக்கை இல்லாதவர்களே! தன்னம்பிக்கை உண்டாகும். இழுபறியாக இருந்த காரியங்கள் உடனே நிறைவேறும். சில நேரங்களில் சோர்வு, களைப்பு அடைவீர்கள். சிலர் உங்களை சீண்டி விட்டு, தூண்டி விட்டு வேடிக்கை பார்ப்பார்கள். நெருக்கடிகளை சகிப்புத் தன்மையால் கடக்கும் வாரமிது.



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

ஆணவத்திற்கு அடிபணியாதவர்களே! எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். பழைய நண்பர்களின் சந்திப்பால் உற்சாகமடைவீர்கள். மற்றவர்களுக்காகப் பரிந்து பேசப் போய் நீங்கள் சிக்கிக் கொள்ளாதீர்கள். பல், காது வலி வந்து நீங்கும். மாற்றுப் பாதையில் சென்று புதிய தீர்வுகள் தேடும் வாரமிது.



**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

எதையும் நேருக்கு நேராக பேசுபவர்களே! சிலர் உங்களிடம் நடிப்பதாகவும், உங்களிடம் யாரும் உண்மையான பாசம் காட்டுவதில்லை என்றும் சில நேரங்களில் நினைப்பீர்கள். கண் எரிச்சல் வரக்கூடும். கடந்த கால சுகமான அனுபவங்கள், சாதனைகளை நினைத்து மகிழ்வீர்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய வாரமிது.




**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

அலட்டிக் கொள்ளாமல் அதிகாரம் செய்பவர்களே! வேகமாக சில காரியங்களை முடிக்க வேண்டுமென்று நினைப்பீர்கள். நெருங்கிய உறவினர், நண்பர்கள் விரும்பி வந்து பேசுவார்கள். வேலைச்சுமை இருந்து கொண்டேயிருக்கும். கொஞ்சம் அலைச்சலும் இருக்கும். ஆளுமைத் திறனும், செல்வாக்கும் அதிகரிக்கும் வாரமிது.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்**

தயஸள குணம் கொண்டவர்களே! சில நேரங்களில் நம்பிக்கை இல்லாமல் போகும். உடன்பிறந்தவர்களால் தர்மசங்கடமான சூழ்நிலையை சமாளிக்க வேண்டி வரும். எதிர்பார்த்த வகையில் பணம் வரும். காதல் கைகூடும். எதிர்பாராத சந்திப்புகளும், திடீர் திருப்பங்களும் நிறைந்த வாரமிது.



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

இலட்சிய கனவுடன் வாழ்பவர்களே! தூக்கமின்மை, வயிற்று வலி, வாயுக்கோளாறால் நெஞ்சுவலி வந்து போகும். உங்கள் தன்மானத்தைப் பாதிக்குமளவிற்கு சில சொந்தபந்தங்கள் நடந்து கொள்வார்கள். வாகனத்தில் அதிக வேகம் வேண்டாம். மனக்கசப்புகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும். முன்கோபத்தை தவிர்ப்பது நல்லது. எதிர்நீச்சலில் வெற்றி பெறும் வாரமிது.

# உண்மை!



உண்மையை மட்டுமே பேசுபவர்களின் வீட்டில் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் ஒரு துறவி. ஒரு ஊருக்குச் சென்று, அங்கே உண்மையாளர் யார் என விசாரித்தார். அவர்கள், ஒரு பெரியவரின் வீட்டைக் காட்டினார்கள்.

அங்கே சென்றதும் பெரியவர் ஓடிவந்து துறவியின் காலில் விழுந்தார். தங்கள் வீட்டில் சாப்பிடும்படி கேட்டுக்கொண்டார். அவர் உண்மை பேசுபவர் தானா என்பதைத் தெரிந்து கொள்ள துறவி ஒரு தேர்வு வைத்தார்.

"பெரியவரே! தங்கள் வயது என்ன?" என்றார்.

"மூன்று வயது, ஐந்து மாதம், ஏழுநாள், பதினாறரை மணி" என பெரியவர் பதிலளிக்கவே, துறவிக்கு கோபம் வந்து விட்டது. 60 வயது மதிக்கத்தக்க இவர், இப்படி ஒரு பொய்யை உதிர்க்கிறாரே! இவரைப் போயா இவ்வூர் மக்கள் உண்மையாளர் என்றனர்! என நினைத்தவாறே கோபத்தை அடக்கிக் கொண்டு, "உம் சொத்து எவ்வளவு?" என்றார்.

"24 ஆயிரம்" என பெரியவர் பதிலளிக்கவே, ஊர்மக்களிடம் நான் விசாரித்தபோது, இவரை இலட்சாதிபதி என்றனர். இவரோ, குறைத்துக்காட்டுகிறாரே என எண்ணியவாறாய் அடுத்ததைக் கேட்டார்.

"உமக்கு எத்தனை பிள்ளைகள்?"

"ஒரே மகன்" என்றதும், "ஆகா! உன்னை விட கொடிய பொய்யன் பூமியிலேயே இல்லை. நான் மக்களிடம் கேட்டபோது, உமக்கு நான்கு மகன்கள் இருப்பதாகச் சொன்னார்கள். நீயோ, இப்படி பொய் பேசுகிறாயே! உன் வீட்டில் கால் வைத்ததே பாவம்," என்றவராய் எழுந்தார்.

பெரியவர் அவரை அமைதிப்படுத்தினார். "சுவாமி! நான் உண்மையைத் தான் சொன்னேன், நீங்களே பாருங்கள்," என்றவர் கணக்கு நோட்டை எடுத்து வந்தார்.

"சுவாமி! இதில் இலட்சத்துக்கு மேல் சொத்துக்கணக்கு இருப்பது வாஸ்தவம் தான். ஆனால், நான் இதுவரை செய்த தர்மம் 25 ஆயிரம் தான். எவ்வளவு தர்மம் செய்கிறோமோ, அந்தப்பணம் மட்டுமே, இறைவன் சந்நிதியில் சொத்தாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை தாங்கள் அறியாததா!" என்றார் பெரியவர். துறவி அவரது பதில் கேட்டு வியப்பில் ஆழ்ந்தார்.

அடுத்து தன் மகன்களை பெயர் சொல்லி அழைத்தார். முதல் மூவரும், "போய்யா! வேலையைப் பார்த்துகொண்டு, நாங்கள் மூன்றுபேரும் சுவாரஸ்யமாக பகடை விளையாடிக்கொண்டு இருக்கிறோம்! நீ வேற! உயிரை வாங்காதே! கிழமே! சீக்கிரம் செத்துத் தொலை! சொத்தையாவது அனுபவிக்கிறோம்!" என்று ஆளுக்கொன்றாகச் சொன்னார்கள்.

கடைசி மகனை அழைத்தார். அவன் ஓடிவந்து நின்றான்.

"அப்பா! அழைத்தீர்களே! இந்த மகான் யார்? இருவரும் உணவருந்த ஏற்பாடு செய்யட்டுமா?" என்று கைகட்டி பணிவோடு கேட்டான் மகன்.

ஐயனே! பார்த்தீர்களா! மற்ற மூவரும் என் முன் ஜென்மபாவக் கணக்கைத் தீர்க்க வந்தவர்கள். இவன் மட்டுமே என் சொல் கேட்பவன். எந்தப் பிள்ளை தந்தைக்கு உதவுகிறதோ, அதுவே நிஜமான பிள்ளை. அதனால் தான் இவனை மட்டும் எங்க வீட்டு பிள்ளை என்றேன்," என விளக்கமளித்தார் பெரியவர். துறவியின் கண்கள் வியப்பால் விரிந்தன.

"எனது வயது குறித்த கேள்விக்கும் பதிலளித்து விடுகிறேன். எனது உடலுக்கு தான் வயது 60. இது தினமும் ஒன்றரை மணி நேரமே இறைவனைக் குறித்து பிரார்த்தனையில் ஈடுபட்டது. கூட்டிப்பெருக்கிப் பாருங்கள். நான் சொன்ன வயது சரியாக இருக்கும். ஒருவன் பிறந்து எவ்வளவு நாள் வாழ்கிறான் என்று கணக்குப் பார்ப்பதில் புண்ணியமில்லை. இறை சிந்தனையில் எவ்வளவு நேரம் இருந்தானோ, அதுதான் உண்மையான வாழ்நாள்," என்றார் பெரியவர்.

துறவி அவரை வாழ்த்தி மகிழ்ச்சியுடன் உணவருந்திவிட்டு கிளம்பினார்.

## இறைவனுடன் நெருங்கியிருப்பவர்

- உண்டியலில் காசு போட்டு விட்டான் என்பதற்காக கடவுள் ஒருவனைக் காப்பாற்றவும் மாட்டார். போடாததற்காக தண்டிக்கவும் மாட்டார்.
- எல்லாவற்றையும் கடவுள் செய்வார் என்று எதிர்பார்க்கும் குணம் கூடாது. நம் கடமையை நாமே செய்வது குறித்தும், எந்தச் சூழலில் வாழ்கிறோம் என்பது குறித்தும் அறியும் அறிவை இறைவன் நமக்கு தந்துள்ளதை மறக்கக்கூடாது.
- அமைதியாக இருப்பவர் இறைவனுக்கு நெருக்கமானவர். வீண் விவாதம், தேவையற்ற வாக்குவாதங்களில் அவர் ஈடுபடமாட்டார்.
- அன்பு, ஆனந்தத்தை பிறருக்கு கொடுக்கும் வாய்ப்பு ஒவ்வொரு விநாடியும் வருகிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
- சில விஷயங்களில் நம் மனதில் எதிர்பார்ப்பு ஏற்படுகிறது. எதிர்பார்ப்பு உண்டாகும் போது வாழ்வில் விருப்பு, வெறுப்பு தவிர்க்க முடியாததாகி விடும்.
- சாப்பாட்டின் முன் அமரும் போது, பரிமாறப்பட்டதை மகிழ்ச்சியோடும், நன்றியோடும், அன்போடும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

**- சத்குரு ஜக்கி வாசுதேவ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்றவாரத் தொடர்ச்சி )

“எனது மகன் எங்கே?” என யங் கேட்டதற்கு “வீட்டிற்கு சென்று இன்றிரவு தொலைபேசி அழைப்புக்காக காத்திரு” என அவனிடமிருந்து அதட்டலாகப் பதில் கிடைத்தது. யங் மேற்கொண்டு எதுவும் பேசாது பணப்பெட்டியை அவனிடம் கொடுத்துவிட்டு “எனது மகனுக்கு ஏதாகிலும் நேருமானால் உன்னைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது” எனக் கூறிவிட்டுப் புறப்பட்டார். வீடு சென்றடைந்த யங் மனைவிக்கு நடந்தவற்றைக் கூறிவிட்டு இரவு கடத்தல்க்காரர்களின் தொலைபேசி அழைப்புக்காக மனச்சஞ்சலத்துடன் காத்திருந்த அதேவேளையில் அவர்களின் மகன் கென்றி கடத்தல்காரர்களினால் கொண்டுவரப்பட்டு மயக்கமுற்ற நிலையில் ஓர் வாடகை விடுதியின் முன்பாக நிறுத்திவைக்கப் பட்டிருந்த காரொன்றின் பின் ஆசனத்தில்

# கடத்தப்பட்ட கோடீஸ்வரனின் புதல்வன்

அனாதரவாகக் கிடத்திவிடப்பட்டிருந்தான். அவனுக்குத் தூக்க மாத்திரைகள் ஊட்டப்பட்டிருந்தமையால் ஆழ்ந்துறங்கிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தின் பின் கண்விழித்தெழுந்த கென்றி தான் முற்றிலும் புதியதான ஓரிடத்தில் இருப்பதைப் புரிந்துகொண்டான். ஒருவாறு காரைவிட்டிறங்கி அவ்விடுதியில் இருந்தவர்களைக் கூவி அழைத்தான். விடுதியிலிருந்து வெளியே வந்தவர்களிடம் “நான் கடத்தப்பட்டு இங்கு கொண்டுவந்து விடப்பட்டுள்ளேன். வீட்டாருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டும்” என அழுதபடி கூறினான்.

கென்றியின் தகவல் கிடைத்ததும் யங் ஒரு கணமேனும் தாமதியாது விரைந்து அவ்விடத்திற்கு வந்து மகனைக் கூட்டிச் சென்றார்.

இவையாவும் நடந்துமுடிந்து நான்கு நாட்களின் பின்னர் யங் பொலிசாருக்கு வழங்கியிருந்த தகவலின்படி விற்பனை அங்காடியொன்றின் முன்பாகக் கைவிடப்பட்ட நிலையில் இருந்த வெள்ளை நிற செவர்லெட் NBD 770 இலக்கத் தகட்டைக் கொண்டிருந்த காரினைப் பொலிசார் கைப்பற்றினர். அவர்கள் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து அக்கார் களவாடப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. அத்துடன் பொலிசாரின் பார்வையில் இருந்து தப்புவதற்காக அக்காரின் கூரைவிளக்கு மற்றும் இலக்கத்தகட்டின் விளக்கு என்பன எரியாத வண்ணம் செயலிழக்கச் செய்யப்பட்டிருப்பதும் தெரியவந்தது. மேலும் அக்காரின் ரயர்களின் இடுக்கைகளில் அப்பியிருந்த மண்துகள்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்திய வேளையில் அக்கார் நிச்சயமாகக் கனியப்பொருட்களை அகழ்ந்தெடுக்கும் சுரங்கப்பாதையில் பயணம் செய்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

எவ்.பி.ஐ துப்பறிவாளர்கள் உசாரடைந்தனர். இதனைத் தமது திறமைக்கு விடுத்துள்ள ஒரு சவாலாகக் கருதினார்கள். கடத்தல் காரர்களை எதுவிதத்திலும் கண்டுபிடித்துவிட வேண்டுமென மிகத்தீவிரமாக இயங்கினர். அதேவேளையில் இக்கடத்தலின் பின்னணியில் நிச்சயமாகச் சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவர்களின் வழிநடத்தலோ அல்லது துணையோ இருக்கின்றதென்பதைத் திட்டவட்டமாகப் புரிந்துகொண்டனர்.

களவாடப்பட்டுக் கைவிடப்பட்ட காரின் விளக்குகள் எரியாமல் மாற்றம் செய்யப்பட்டமை முதலில் குறிப்பிட்ட இடத்தில் வைத்துப் பணயப் பணத்தைப் பெறாது பிறிதொரு சூனியவெளிக்கு அழைத்துச் சென்று அங்கு வைத்துப் பணப்பெட்டியைப் பெற்றமை, அத்துடன் அதே இடத்தில் வைத்துச் சிறுவனை ஒப்படைக்காது வேறிடத்தில் அதே சமயத்தில் கைவிட்டுச் சென்றமை போன்ற சகல விடயங்களும் துப்பறிவாளர்கள் கொண்டிருந்த கருத்தினை உறுதி செய்வதாக அமைந்திருந்தன.

எவ்.பி. ஐயினர் தொடர்சியாக முன்னாள் பதவி வகுத்த சட்ட அதிகாரிகள் தனிப்பட்ட ரீதியில் இயங்கும் துப்பறிவாளர்கள் என நூற்றுக்கணக்கிலான சந்தேக நபர்களை விசாரித்தபோதிலும், அவர்களின் முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை.

மாதங்கள் சில உருண்டோடின. அவர்களின் விசாரணைகளும் தீவிரம் குறைந்த நிலையில் படிப்படியாக மந்த நிலைக்கு மாற்றமடைந்தது.

ஆயினும் இப்பெருந்தொகையான பணத்தைச் செலவிடும் போதிலாவது கடத்தல்காரர்கள் விடக்கூடிய தவறுகள் மூலம் கண்டுபிடிக்க வழியுண்டென்ற நம்பிக்கையில் துப்பறிவாளர்கள் வங்கிகளுடன் தொடர்புகளைப்பேணி வந்தனர்.

இப்பயங்கர அனுபவத்திலிருந்து சிறுவன் கென்றியை மறக்கச் செய்வதற்காக யங் தனது குடும்பத்துடன் வேறொரு வீட்டிற்கு இடம்மாறிச் சென்றார். இரண்டு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில், பணத்தை மீளப்பெறமுடியும் அத்துடன் கடத்தல் காரரைக் கண்டுபிடித்துவிட முடியும் என்ற நம்பிக்கையை யங் குடும்பத்தினர் அறவே இழந்துவிட்டனர்.

ஏறத்தாழ இரண்டரையாண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் ‘அல்கம்பிரா’ எனுமிடத்தில் உள்ள பொதுச் சந்தையில் ஆயுத முனையில் கொள்ளையடிக்கும் சமயத்தில் பீட்டர்சன் எனும் ஓர் மாஜிக் குற்றவாளி பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டான். அவன் தானாகவே அக்குற்றத்தினை ஒப்புக்கொண்டான். அத்துடன் அவன் பொலிசாருக்கு விசாரணையின் போது வழங்கிய தகவலின்பேரில் 38 வயதான டொனால்ட் மில்லர் என்பவன் கைதானான்.

டொனால்ட் மில்லர் முன்னர் உள்நாட்டு வருமானவரி அறவீட்டுப் பிரிவில் விசேட துப்பறிவாளனாகப் பணிபுரிந்து விலகியவன் என்பதும் இதுபோன்ற பல கொள்ளைகளுக்குத் திட்டமிட்டுக்




கொடுத்தவன் என்பதும் விசாரணைகளின் போது அம்பலமாகியது. அதுமட்டுமன்றி பொலிசார் மில்லரைக் கைதுசெய்த சமயத்தில் அவனின் இருப்பிடத்திலிருந்து 14 துவக்குகளும் மாறுவேடம் அணிவதற்காக அவன் பயன்படுத்திய பொய்த் தலைமுடி, தாடி போன்ற பலவகைப் பொருட்களும் பொலிசார் வசம் சிக்கின. எதுவாயிருந்தபோதிலும் மில்லர் தனக்கும் கென்றியின் கடத்தலுக்கும் எதுவித சம்பந்தமுமில்லையென மறுப்புத் தெரிவித்தான்.

ஆனால் எவ்.பி.ஐ. அதிகாரிகள் அவனைச் சும்மாவிட்டுவிடத் தயாராக இருக்கவில்லை. நிச்சயமாக அவனது பின்னணிகளைப் பொறுத்த மட்டில் கென்றியின் கடத்தலுக்கும், மில்லருக்கும் தொடர்பு இருக்குமென்பதை அவர்கள் உள்ளுணர்வு கூறியது. எதுவிதத்திலும் உண்மைகளைக் கறந்துவிட வேண்டுமெனத் தீர்மானம் செய்தனர்.

ஆயினும் மில்லரிடமிருந்து இலகுவில் உண்மைகளை அறிய முடியாததென்பதனால் அவனது சகாவான பீட்டர்சனிடம் மில்லருடனான தொடர்புகள் குறித்து விசாரிக்க ஆரம்பித்தனர். ஏனெனில் பீட்டர்சன் முன்பதாக தெரிவித்த வாக்கு மூலத்தின் போது மில்லரை இரண்டு வருடங்களாகத் தெரியும் எனக் கூறியிருந்தான்.

எனவே, அந்த இரண்டுவருடகாலப்பகுதியில் அவன் மில்லருடன் கொண்டிருந்த உறவுகள் நடவடிக்கைகள் குறித்து மீள நினைவுபடுத்திக் கூறுமாறு துப்பறிவாளர்களினால் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டான்.

ஒருவாறு இறுதியில் பீட்டர்சன் தான் அறிந்தவற்றைக் கூறத்தொடங்கினான். கென்றியைக் கடத்துவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே பீட்டர்சன் மில்லரைச் சந்திக்க நேரிட்டுள்ளது. பின்னர் அவர்கள் இருவரும் இணைந்து சில சிறு கொள்ளைகளைச் செய்துள்ளனர். சிறுசிறு தொகையான பணக்கொள்ளைகளில் திருப்தியடையாத மில்லர், முன்னர் வரி அறிவீட்டுத் திணைக்களத்தில் துப்பறிவாளனாகப் பணிபுரிந்தபோது கிடைத்த கோடீஸ்வரர்களின் பெயர்ப்பட்டியல்களை வைத்து அதில் யங்கின் பெயரும் இடம்பெற்றிருப்பதைப் பீட்டர்சனுக்குத் தெரிவித்து, அவரின் மகன் கென்றியைக் கடத்துவதன் மூலம் கோடிக்கணக்கில் பணத்தை ஈட்டலாமெனக் கூறித் திட்டமிட்டான். அதற்காகப் பீட்டர்சனைக் காரில் கனிமப் பொருட்களை அகழ்ந்தெடுத்த பின்னர் கைவிடப்பட்ட கிறேக்கோ எனுமிடத்திலுள்ள சுரங்கத்திற்கு அழைத்துச் சென்றுள்ளான். அதனைக்காட்டி கடத்தப்படும் சிறுவனை ஒளித்துவைப்பதற்கு இதுவே சிறந்த இடமாகும் எனவும் கூறியுள்ளான்.

அதன் பின்னர் இரண்டு நாட்கள் கழிந்துவிட்ட நிலையில் மில்லரும், பீட்டர்சனுமாக இரண்டு கார்களில் தனித்தனியாக திட்டமிட்டபடி பிவெர்லி கில்ஸ்சில் உள்ள யங்கின் வீட்டிற்கும் புறப்பட்டனர். பீட்டர்சனை அவ்வீட்டிற்குச் சற்றுத் தொலைவில் உள்ள ஓர் வளைவில் காருடன் நின்று அவதானிக்குமாறு கூறிவிட்டு மில்லர் தனது காரில் சென்று கென்றியைக் கடத்திவந்து பீட்டர்சனிடம் சுரங்கத்திற்குக்கொண்டு சென்று அங்கு வைத்திருக்கும்படி கூறி அவனிடம் ஒப்படைத்துள்ளான்.

பீட்டர்சன் இவ்விதமாகச் சகல உண்மைகளையும் எவ்.பி.ஐ யினரிடம் தெரிவித்துவிட்டான். ஆயினும் இவைகுறித்து மில்லரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொழுதில் அவன் பிடிவாதமாக எதனையும் மறுத்துவிட்டான் எனினும் அதிகாரிகள் மனம் சலித்துவிடவில்லை.

இதன் நடுவில் பீட்டர்சனின் மனைவியை அதிகாரிகள் விசாரித்தபோது பயனுள்ள தகவல் ஒன்று கிடைத்தது. அதாவது கடத்தல் சம்பவம் இடம்பெறுவதற்கு ஓரிருநாட்கள் முன்பதாகப் பீட்டர்சனும், மில்லரும் சிறுவனை ஒழித்துவைத்திருப்பது தொடர்பில் தொலைபேசியில் உரையாடிய வேளையில் தான் அதனைச் செவிமடுத்ததாகத் தெரிவித்திருந்தாள்.

துப்பறிவாளர்கள் அடுத்து அவர்களின் இறுதி முயற்சியொன்றில் தீவிரமாக இறங்கிச் செயற்பட்டார்கள். மில்லரைக் கைதுசெய்த வேளையில் கைப்பற்றிய மாறுவேடமணியும் பொருட்களில் இருந்த செயற்கைத் தலைமுடியையும், கறுப்புக் கூலிங்கிளாசையும் மில்லரை அணிய வைத்து வேறு பல குற்றவாளிகள் மத்தியில் அவனை நிறுத்தி யங்கை அங்கு வரவளைத்து அவர்களில் எவரையாவது முன்பு கண்டாரா என அடையாளம் காட்டும்படி கூறினார்கள்.

பணப்பெட்டியை ஒப்படைத்தபொழுது, அதனைப் பெற்றுக்கொண்டவனின் உருவத் தோற்றத்தினை நன்கு மனதில் பதியவைத்துக்கொண்டவரான யங் இலகுவில் மில்லரை அடையாளம் காட்டிவிட்டார். இப்பொழுது மில்லரால் எந்த வகையிலும் தப்புவது என்பது மிகவும் கடினமானதொன்றாகிவிட்டது. பீட்டர்சன் மற்றும் அவனது மனைவியின் வாக்கு மூலங்கள், காரின் ரயர்களில் அப்பியிருந்த மண்துகள்கள், சுரங்கப்பாதையில் கார் பயணித்ததற்கான ஆதாரங்கள் மேலும் யங் அணிவகுப்பில் அவனை அடையாளங்கண்டு கொண்டமை சகலதும் மில்லருக்குப் பாதமாகமாக அமைந்தன.

இறுதியில் அவனாகவே சகலதையும் ஒத்துக்கொண்டு பணயப் பணமான 250,000 அமெரிக்க டொலர்களும் அப்படியே வேறு பெயரில் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தான். வழக்கின் முடிவில் மில்லருக்கு ஆயுள் தண்டனையும், பீட்டர்சனுக்கு 8 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் தீர்ப்பு வழங்கப்பட்டது. பணமும் வங்கியில் இருந்து மீட்கப்பட்டு அவரிடம் வழங்கப்பட்டது.

தமிழில் – ஜெகன்


( முற்றும் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இலக்கங்களையும் எழுத்துக்களையும் இணைத்து உருவம் ஆக்குங்கள்






வரதன் என்பவன் குரு ஒருவரைச் சந்தித்தான்.

"குருவே! நான் இறைவனைப் பார்க்க விரும்புகிறேன். அதற்கு என்ன தகுதி இருக்க வேண்டும்?" என்று கேட்டான்.

"மனிதன் என்ற தகுதி இருக்க வேண்டும்!" என்றார் குரு.

இறைவனைக் காண பக்தி என்ற தகுதி போதாதா?" என்றான்.

"போதாது! மனிதன் வேறு; பக்தன் வேறு. இறைவன் பக்தனை விரும்புவதில்லை. மனிதனை மட்டுமே விரும்புகிறான்!" என்றார் குரு.

"சரி! நானும் மனிதன் தான்!" என்றான் வரதன்.

"அதை நீ சொல்லக்கூடாது... உன் நடத்தை சொல்ல வேண்டும். நீ இன்று போய் நாளை வா!"என்றார் குரு.

அதற்கு ஒப்புக்கொண்டு, மறுநாள் வந்து அவரைச் சந்தித்தான் வரதன்.

"குருவே! இன்று அதிகாலை நடந்த ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். என் ஐந்து சகோதரர்களும் கடவுளை வணங்க வேண்டும் என்ற எண்ண மில்லாமல் அதிகாலையில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். நானோ விழித்து, குளித்து, சலவை ஆடை உடுத்திக் கடவுளை வணங்க கோவிலுக்குச் சென்று விட்டேன். அவர்கள் உறக்கத்தைக் கெடுத்து எழுப்பாமல் விட்டது மனிதாபிமானமுள்ள செயல்தானே. இப்போது நான் பக்தனாகவும் இருக்கிறேன், மனிதனாகவும் இருக்கிறேன். நான் கடவுளைக் காண முடியும் அல்லவா!" என்று கேட்டான்.

உன் ஐந்து சகோதரர்களும் என்ன தொழில் செய்கிறார்கள்?" என்று கேட்டார் குரு.

"மரம் வெட்டுவார்கள், கல் உடைப்பார்கள், நிலத்தில் உழுவார்கள், கிணறு தோண்டுவார்கள் இப்படிப் பல கடினமான வேலைகளைச் செய்வார்கள்!" என்றான்.

"உன் தொழில் என்ன?" என்று கேட்டார் குரு.

"நான் வீட்டுக்குக் கடைக்குட்டி. அதனால் அதிக செல்லம். எந்த வேலையையும் என்னைச் செய்ய விடமாட்டார்கள். நானும் செய்வதில்லை. ஆனால், ஏனோ கடவுளின் மீது மட்டும் எனக்குப் பற்றுதல் வந்துவிட்டது!" என்றான்.

குரு அவனைத் தீர்க்கமாகப் பார்த்தார்.

"உழைத்த களைப்பில் உறங்கும் உன் சகோதரர்களைக் குறை கூறுகிறாய். நீயோ உழைக்காமல் சோம்பேறியாகச் சுற்றித் திரிகிறாய். உன் இறை வணக்கத்தால் உனக்கு எந்தவித பயனும் இல்லை. மனிதனாகவே இருக்கத் தகுதியில்லாத உன் பக்தியை விட, உழைத்த களைப்பில் உறங்கும் உன் சகோதரர்களின் உறக்கம் எவ்வளவோ மேலானது. அதுதான் இறைவனுக்கும் பிடித்தமானது. உன் பக்தியை விட்டுவிட்டு, உழைத்து நீயும் தூங்க முயற்சி செய். அதுவே, மேலான பக்தி!" என்று முடித்தார் குரு.

அதைக் கேட்டு தலைகுனிந்தான் வரதன்.

பக்தியை விட உழைப்பே உயர்வானது, என்பதை உணர்ந்த வரதன், குருவுக்கு நன்றி கூறிவிட்டுச் சென்றான்.

## புருஷோத்தமனும் அலெக்சாண்டரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனமாற்றம்


வழக்கம் போல் மதியம் கடந்ததும் சரசு வீட்டின் வாசலை வேடிக்கை பார்க்கும் கும்பல் மொய்த்துப் போய் இருந்தது. தினமும் குடிமகன் குணத்திற்கும் சரசுவிற்கும் இடையில் நடைபெறும் உள்வீட்டு யுத்தம்தான். மதுவை அருந்திவிட்டால் குணம் தன் குணத்தையே இழந்து விடுவான். மாதத்தில் நான்கு ஐந்து நாட்கள் மட்டுமே கூலிவேலைக்குப் போகும் குணம் அந்த வருமானத்தையும் மதுக்கடைக்கே தாரைவார்த்துக் கொடுத்துவிடுவான். பாடசாலை முடிந்ததும் பிரியாவும் அவள் தம்பி வினோத்தும் தம் நண்பர்களுடன் கையில் வெற்றிக் கிண்ணம் ஒன்றை ஏந்தியபடி வீட்டைநோக்கி ஓடோடி வந்தனர். தமது வீட்டின் முன் வேடிக்கைபார்க்கும் கும்பலைப் பார்த்ததும் அவர்களுக்கு நிலைமைபுரிந்துவிட்டது. கால்கள் வேகத்தைக் குறைத்தன. அச்சமும் அவமானமும் உள்ளத்தில் உறைந்துகொண்டது. கூட வந்த நண்பர்களில் ஒருத்தி கிண்டலாய்ச் சொன்னாள் "பிரியா உங்கட வீட்டுச் சட்டி,பானை எல்லாம் வெளியில வந்து கிடக்கும் போய் எல்லாத்தையும் தம்பியோட சேர்ந்து பொறுக்கிவை" என்று. மற்ற நண்பி சிரித்துக்கொண்டே சொன்னாள் "இண்டைக்கு உங்கட அப்பா இலவசமா இங்கிலீஸ் வகுப்பெடுக்கிறார் நாங்களும் வரட்டோ?". பிரியாவின் கண்கள் கோபத்தில் சிவந்து கண்ணீரில் நனைந்திருந்தது. கும்பலாய் நின்றவர்களை ஊடறுத்து வீட்டினுள் நுழைந்தனர் பிரியாவும், வினோத்தும்.

புத்தகப் பையையும், வெற்றிக்கேடயத்தையும் தட்டில் வைத்துவிட்டு இருவரையும் சமரசப்படுத்தும் முயற்சியில் இறங்கினர். பிரியா தனது தாயைப் பிடிக்க வினோத் தந்தையைப் பிடிக்க உக்கிர தாண்டவம் சற்றே குறைந்தது. ஆனாலும் போதை தலைக்கேறியதால் தட்டில் வைக்கப்பட்டிருந்த வெற்றிக்கிண்ணத்தை எடுத்து தனது மனைவி நின்றிருந்த திசையை நோக்கி எறிந்தான் குணம். அது குறுக்கே நின்ற பிரியாவின் தலையைப் பதம் பார்த்தது. அவள் மூர்ச்சையாகி வேரறுந்த மரமாய் தரையில் சாய்ந்தாள். மண்ணினால் மெழுகப்பட்ட தரை, குருதியில் நனைந்தது. சரசுவும், வினோத்தும் கத்திக் கூச்சலிட்டபடி வேடிக்கை பார்த்தவர்களை உதவிக்கு அழைத்து அருகிலுள்ள மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றனர்.

போதை குறையக்குறைய நிலைமையைப் புரிந்துகொண்ட குணம் சைக்கிளை மிதித்தபடி மருத்துவமனைக்கு ஓடினான். இயல்பாகவே தந்தை தனது மகனைவிட மகள் மீதே அதிகபாசம் வைத்திருப்பர் அந்த இயல்பிற்கு குணமும் விதிவிலக்கில்லை. தனது மகள் இரத்தம் தோய்ந்த வெள்ளைச் சீருடைக்குள் கிடப்பதைக் கண்டு பயந்துபோனான். அவனிடமிருந்து மெல்ல மெல்ல மனித குணம் தலை நீட்டியது. தன் தலையில் அடித்து அழுது புலம்பினான். மருத்துவர் பரிசோதித்துக் கொண்டிருந்தார். ஆழமான காயம் ஏற்பட்டு அதிக குருதி வெளியேறியுள்ளதால் அவசரமாக 'ஓ' நெகற்றிவ் வகைக் குருதி தேவை. ஆனால், தற்பொழுது எங்களிடம் கையிருப்பு இல்லாததால் உங்களில் யாராவது கொடுக்க முடியுமா என்றார். உடனே குணம் விழுந்தடித்து எனது குருதியும் "ஓ" நெகற்றிவ் வகை குருதிதான் என்று மருத்துவருக்கு அருகே சென்றான். மருத்துவர் தனது மூக்கை விரல்களால் பிடித்தபடி "நீங்கள் குடிச்சிருக்கிறீர்கள் அதனால் இப்பொழுது உங்களது குருதி எடுக்க முடியாது" என்று நிராகரித்துவிட்டார். சரசு மிகவும் வேதனைப்பட்டவளாய் வினோத்தையும் தழுவியபடி அழுதாள். அதற்குள் வைத்தியசாலை அவளுக்கான குருதியை ஒரு குருதிக் கொடையாளியிடம் பெற்றுக்கொடுத்தது.

சிலநாட்களின் பின் பிரியாவை வீட்டுக்குச் செல்ல வைத்தியர்கள் அனுமதித்தனர். அயலில் உள்ளவர்கள் சரசு வீட்டிற்கு வருவது குறைவு காரணம் குணத்தின் குடியும், கும்மாளமும். ஒவ்வொரு அயலவரும் தமது மரியாதையைப் பாதுகாக்க இவர்களது வீட்டை விலகியே நடந்தனர். ஆனாலும் பிரியாவின் நண்பிகளும், பெற்றோரும், நெருங்கிய ஒரு சிலரும் மட்டுமேபிரியாவை நலம் விசாரிக்க வரத்தொடங்கினர். பிரியாவை நலம் விசாரித்தது மட்டுமன்றி குணத்துக்கும் புத்திமதி சொல்ல முற்பட்டனர். எந்தச் சலனமுமின்றி தூணில் சாய்ந்தபடியிருந்தான் குணம். பொழுது சாய்ந்தது. குணம் மெல்ல மெல்ல பிரியாவிடம் மன்னிப்புக்கேட்க முற்பட்டான். ஆனால் பிரியாவின் ஆத்திரமும், கண்ணீரும் அவனை நெருங்கவிடவில்லை. சரசுவின் கண்ணிலிருந்து நீரோட்டம் இன்னமும் வற்றவில்லை. குணம் தான் எறிந்த வெற்றிக்கிண்ணத்தை கையிலெடுத்து அதனைத் தனது மேற்சட்டையால் நன்கு துடைத்துவிட்டு தட்டிலே வைத்தான். அப்பொழுது இருதுளி கண்ணீர் தரையில் விழுந்து சிந்தியது. அது பாறையில் கசிந்த கண்ணீர்.

இவற்றையெல்லாம் அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தாள். பிரியா நீண்ட நேரம் அமைதி நிலவியது. ஆளுக்கொரு மூலையை வெறுத்துப்பார்த்தபடி நால்வரும் அமர்ந்திருந்தனர். விறுவிறுவென சிந்தனைகளைக் கலைத்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்த வினோத் தந்தையின் மதுப் போத்தல்களை எடுத்து முற்றத்தில் போட்டு உடைத்ததுடன் குருதி தோய்ந்த பிரியாவின் வெள்ளைச் சீருடையையும் அதன் மீது போட்டு தீயிட்டான்.




விம்மி விம்மி அழுதபடி தந்தையைப் பார்த்தான். பின்பு தட்டிலே வைத்த வெற்றிக்கேடயத்தை அக்கா பிரியாவிடம் கொடுத்தான். அதுவரை அமைதிகாத்த அவள் உதடுகள் தீப்பிடித்த பட்டாசாய் வார்த்தைகளால் வெடித்தது. "ஒவ்வொரு அப்பாவும் தன் பிள்ளை படிக்காதா, பரிசில்கள் வாங்காதா என்று ஏங்கினம். ஆனால் இஞ்ச என்னை வைத்தியசாலைக்கு அனுப்பி ஊர் சிரிக்க வைச்சாச்சு" என்று விம்மினாள். "இல்லை பிள்ளை நான் வெறியிலதானே அப்பிடிச் செய்தனான் நான் உங்கட அப்பாதானே எனக்கும் உங்கள்ள அன்பிருக்கு" என்றான் குணம். "நீங்கள் மூக்கு முட்டக் குடிச்சிட்டு எங்களையும் படிக்கவிடாமல் அம்மாவையும் அடிச்சுக் கொடுமைப்படுத்துவியள் நான் என்ன படிக்கிறன், எந்த வகுப்புப் படிக்கிறன், எனக்குள்ள திறமைகள் என்னெண்டு எதுவுமேதெரியாமல் தினமும் எங்களைக் கொடுமைப்படுத்திற உங்களை நான் எப்பிடி அப்பா எண்டு ஏற்றுக்கொள்றது" "நான் போடும் சட்டை தொடக்கம் சாப்பாடு வரைக்கும் இராப்பகலா அம்மா உடுப்புத் தைச்சு வாங்கித்தந்தது அப்படி இருக்கேக்கை உங்கட பங்குக்கு நீங்கள் என்ன செய்தனீங்கள்?"

"நான் எவ்வளவு கஸ்ரப்பட்டு ஆங்கிலப் போட்டிக்கு என்னைத் தயார்ப்படுத்தி இரவிரவா பாடமாக்கி முதலாம் இடம் கிடைச்சிது அதுக்குத் தந்ததுதான் இந்த வெற்றிக்கிண்ணம் போட்டியில் கலந்துகொண்டு பரிசு கிடைக்காத பிள்ளைகளையே அவையோட அப்பாக்கள் வந்து ஊக்கப்படுத்தினவை ஆனால், நீங்கள்தான் இதுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் என்று நினைத்து கிடைச்ச பரிசைக் காட்டி சந்தோசப்படுவமெண்டு தம்பியும் நானும் ஓடிவந்தம். ஆனால், எனக்குப் பாராட்டுக்குப் பதிலா தலையில தழும்புதான் கிடைச்சிது" என்று அவள் கூறி முடிக்கையில் வெற்றிக்கிண்ணத்தில் கண்ணீர்த்துளிகள் தேங்கி நின்றது. அதுவரை அமைதிகாத்த வினோத் "அக்கா பரிசு வாங்கிற நேரம் எல்லாரும் கைதட்டி பாராட்டினவை. அக்கா வருங்காலத்தில பெரிய ஆளா வருவா எண்டு அதிபரும் பாராட்டினவர். அதோட எங்கட பாடசாலைக்கு பெருமையும் சேர்த்துத் தந்தது.அக்காதானெண்டு எவ்வளவு பாராட்டினவர். உங்களுக்கு கள்ளுக்கொட்டிலையும், குடியையும் தவிர வேறை என்ன தெரியும்?" என்று விரக்தியாக சொன்னது அந்தப் பிஞ்சு உள்ளம்.

"நாளைக்கே இந்தத் தழும்பு மாறிடும் ஆனால் இனி நான் ஒவ்வொருமுறை பரிசு வாங்கும்பொழுதும் இந்த வலிதான் எனக்கு ஞாபகம் வரும்" என்றாள் பிரியா. அதுவரை அமைதிகாத்த சரசு "எல்லாம் என்ர தலையெழுத்து எங்கட அம்மா அப்பாவையும் எதிர்த்து உங்கட அப்பாவை காதலிச்சுக் கலியாணம் செய்தன் கொஞ்சநாள் நல்லவரா இருந்தார். பிறகு வேதாளம் முருங்கைமரம் ஏறின கதையாப்போச்சு. என்ர பிள்ளையளை அயல்ல எல்லாருமேபாராட்டுவீனம் கெட்டிக்காரர் எண்டு. ஆனால், அந்த அருமைஇந்த மனுசனுக்கு எப்பிடித் தெரியும்?." ஆரம்பத்தில களைப்பைப் போக்க குடிக்கிறன் என்று சொன்னதால நானும் அனுமதிச்சன். ஆனால், இப்பிடி பிரச்சினையா வளரும் என்று தெரியாமல் போச்சு. பிள்ளையளுக்காகத்தான் நானும் எல்லாத்தையும் தாங்கிக்கொண்டு இருக்கிறன். இல்லையெண்டால் எங்கையாவது கிணத்தில குதிச்சு செத்திருப்பன்" என்றாள் கண்ணைக் கசக்கியபடி. தாய்க்கு ஆறுதல் சொல்பவளாய் "சரியம்மா ஏன் பழசுகளைக் கிளறுவான் நாங்கள் உங்களைப் பார்த்துக்கொள்ளுவம் யோசிக்காமல் இருங்கோ" என்றாள் பிரியா.

அன்றைய தினம் தனது பிள்ளைகளின் வார்த்தைகள் குணத்தின் மனதை காயப்படுத்தியது இரவு முழுவதும் உறக்கமில்லாமல் இதுவரை போதையில் நிலம்பார்த்து குப்பறப்படுத்துறங்கிய குணம் இருள் சூழ்ந்த வானத்தை கூரையில் உள்ள ஓட்டை வழியாக பார்த்தவண்ணம் கிடந்தான். அன்றுதான் தனது வீட்டுக்கூரையில் அவ்வளவு பெரிய ஓட்டை இருப்பதே அவனுக்குத் தெரிந்தது. மறுநாள் காலை வழக்கத்துக்கு மாறாக அதிகாலை எழுந்த குணம் வெளியே சென்றுவிட்டான். மாலை வீடு திரும்பும்போது கையிலே பிள்ளைகளுக்கு தின்பண்டங்களை வாங்கி வந்தான். போதையில் வருவார் என்று எதிர்பார்த்த சரசுவிற்கும் பிள்ளைகளுக்கும் இது வினோதமான நடவடிக்கையாக தெரிந்தாலும் குணத்தின்மீது பாசமோ நம்பிக்கையோ தோன்றவில்லை.

ஒருவாரம் கடந்தும் பிரியாவின் கோபம் தணியவில்லை. இப்பொழுது வீட்டில் குணம் தனிமரமாக்கப்பட்டான். இதற்கிடையில் பிரியாவின் பிறந்ததினம் வந்துவிட்டது. உறவினர்கள் நண்பிகள் அவளை வாழ்த்துவதற்கு வீட்டிற்கு வந்துவிட்டார்கள். ஆனாலும் யாருமேகுணத்தை ஒரு மனிதனாகவே மதிக்கவில்லை. காரணம் பிரியாவோ, வினோத்தோ தங்கள் தந்தைக்குரிய மரியாதையை அவனுக்குக் கொடுக்காததுதான். இந்த நிகழ்வு குணத்தை மீண்டும் குடிக்கத் தூண்டிவிட்டது. இதனால் அந்த இரவே மதுவருந்திவிட்டு வீட்டிற்கு வந்துசேர்ந்தான். ஆனால், இம்முறை யாருடைய மனதையோ, உடலையோ காயப்படுத்தவில்லை. அமைதியாக தானாகவே ஒதுங்கிப் படுத்துறங்கிவிட்டான்.

ஆனால் பிரியாவால் உறங்க முடியவில்லை. அவளது மனதில் பிறந்ததினத்தில் நான் அப்பாவை மதிக்காமல் நடந்துகொண்டது சரியா? கடந்த நாட்களில் அப்பா குடித்ததோ, சண்டை போட்டதோ கிடையாது ஆனால், இன்று மீண்டும் அவர் குடித்திருக்கிறார் என்றால் நாங்களும் ஏதோ தவறிழைத்துவிட்டோம் என்று உணர்ந்துகொண்டாள். குடிப்பவர்கள் மனம் திருந்தி வாழ நினைக்கும்பொழுது குடும்ப அங்கத்தவர்கள் அவர்களை ஏற்பதில்லை. மாறாக மேலும் மேலும் அவர்களைப் பழிதீர்க்க நினைப்பதும், நம்பிக்கையில்லாமல் நடப்பதும், அவர்களை அவமதிப்பதும் மீண்டும் அவர்களைக் குடிக்கவே தூண்டும் என்ற உண்மையை புரிந்துகொண்டாள். மறுநாள் காலை கையில் தேநீருடன் தந்தையை தூக்கத்திலிருந்து எழுப்பினாள் பிரியா. குணத்தின் கண்கள் ஆனந்தக் கண்ணீரில் நிறைந்திருந்தது.

இப்பொழுது குணம் ஒரு பொறுப்புள்ள குடும்பத் தலைவன். சரசுவிற்கு அன்பான கணவனாய் பிள்ளைகளுக்கு பொறுப்பான அப்பாவாய் அவனது வாழ்வு மகிழ்ச்சியில் மூழ்சியது. கடந்த காலங்களில் எத்தனையோ புத்தாண்டை கடந்திருக்கும் குணத்தின் குடும்பம் ஆனால், அந்தத் தினத்தில் அவன் மட்டுமேபோதையேற்றி கொண்டாடிவந்தான். ஆனால் இம்முறை பிள்ளைகளுடன் புதிய ஆடைகளோடு புது மனிதனாய் கொண்டாடினான். குணத்தின் குடும்பம் மட்டுமல்ல சமூகமும் அவனை மதித்து தங்களில் ஒருவனாக ஏற்றுக்கொண்டது. அயலில் உள்ள சனசமூக நிலையத்தில், பிறந்திருக்கும் புதிய ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவில் குணம் இன்று பொறுப்புள்ள செயலாளராக பதவியேற்றுள்ளான். தனது பிரதேசத்திலுள்ள இளைஞர்களை ஒன்றுதிரட்டி இரத்ததானத்தை நடாத்தினான். இதில் முதல் நபராக தானே குருதிக்கொடை செய்தான். முகம் தெரியாத ஒரு குருதிக் கொடையாளியால்தான் தனது மகளுக்கு குருதி மாற்றீடு செய்யப்பட்டது. அந்த முகம் தெரியாத கொடையாளியையும் மனதில் நினைத்துக்கொண்டு சேவை செய்தான். குணம் ஒரு குணமுள்ள மனிதன் என்று எல்லோரும் பாராட்டினர்.

தனது சமூகத்தில் மதுவை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் அவனது மனமாற்றத்தையே சிறந்த உதாரணமாக பேசும் அளவிற்கு அவனது மனமாற்றமும் அதன்பின் அவனது சமூகப்பணிகளும் சிறந்து விளங்கியது. இப்பொழுது குணம் வீட்டில் ஏதாவது நிகழ்வென்றால் ஊரே கூடிநிற்கும். வேடிக்கை பார்ப்பதற்கு அல்ல. குணத்தின் அழைப்பிற்கு மதிப்பளிப்பதற்காக ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திருட்டு விசிடி-க்களை களையவே டி.டி.எச்-ல் ரிலீஸ்!

திருட்டு வி.சி.டி-க்களை களையவே 'விஸ்வரூபம்' படத்தை டி.டி.எச்.-ல் வெளியிடுகிறேன் என்று கமல் கூறியுள்ளார். திருட்டு வி.சி.டி.யால் பட அதிபர்களும், தியேட்டர் உரிமையாளர்களும் பெரும் நஷ்டம் அடைந்து வருகிறார்கள். டி.டி.எச்.சில் விஸ்வரூபம் படத்தை ஒளிபரப்புவதன் மூலம் திருட்டு வி.சி.டி.யில் அப்படம் வருவது தடுக்கப்படும். படம் நன்றாக இருக்கும் என நான் நம்புகிறேன். என் படத்தின் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதனால் தைரியமாக எனது படத்தை டி.டி.எச்-ல் வெளியிடுகிறேன் என்றார்.

## காதலன் பெயரை நீக்கினார் எமி



தமிழில் வெளியான 'விண்ணைத்தாண்டி வருவாயா' படம், இந்தியில் 'ஏக் தா தீவானா' என்ற பெயரில் ரீமேக் ஆன போது, பாலிவுட் ஹீரோ பிரதீக் பப்பர் ஜோடியாக நடித்தார். முதலில் நண்பர்களாகப் பழகிய அவர்கள், பிறகு காதலிக்கத் தொடங்கினர். இப்போது அவருக்கும், பிரதீக் பப்பருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகவும், இருவரும் காதலை முறித்துக் கொண்டதை அடுத்து தனது கையில் பிரதீக் பெயரை பச்சை குத்தியிருந்த எமி, அதை நீக்கிவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

## மூன்றாவது திருமணம் செய்துள்ளார் டைட்டானிக் நாயகி



டைட்டானிக் நாயகி கேத் வின்ஸ்லெட் மூன்றாவது திருமணம் செய்துள்ளார். 37 வயதாகும் பிரிட்டிஷ் நடிகையான கேத் வின்ஸ்லெட் ஏற்கனவே 2 முறை திருமணமாகி விவாகரத்து பெற்றவர். தற்போது தன்னை விட இளையவரான 34 வயதாகும் நெட் ராகென்ரோல் என்பவரை காதலித்து வந்தார். இவர் விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் பணி புரிகிறார். அவரைத்தான் இப்போது 3-வதாக திருமணம் செய்து கொண்டார் கேத் வின்ஸ்லெட்.

## விலைமாது வேடத்தில் நடித்த அருந்ததி!



நடிகைகளைப்பொறுத்தவரை ஒரு படத்திலாவது விலைமாதுவாக நடித்து விட வேண்டும் என்கிற ஆசை இருக்கும். காரணம் கேட்டால், அந்த மாதிரி வேடங்களில்தான் வித்தியாசமான பர்பாமென்ஸை வெளிப்படுத்த முடியும் என்பார்கள். அப்படி 'வெளுத்துக்கட்டு' அருந்ததி நடித்த படம்தான் 'கூத்து'. இந்தப் படத்தில் பக்கா விலைமாது வேடத்திலேயே நடிக்கிறார். இது மாதிரியான விலைமாது வேடங்களில் பல நடிகைகள் நடித்திருந்தபோதும், அவர்களிடம் ஆண்கள் செல்லும் காட்சிகளை இலைமறை காயாமறையாகத்தான் வைத்திருப்பார்கள். ஆனால் இந்தப் படத்தில் அப்பட்டமாக காட்சிப்படுத்தி விட்டனர் என்கிறார் அருந்ததி. அதோடு அதை படமாக்கியதும் பிட் படங்களைப்போலவே உள்ளது என்கிறார் அருந்ததி.

## சைந்தவியுடன் 2013இல் திருமணம்




வெயில் படத்தில் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் ஜி.வி.பிரகாஷ். இவரும் பின்னணிப் பாடகி சைந்தவியும் நீண்ட நாட்களாக காதலித்து வந்தனர். இருவரும் திருமணம் செய்து கொள்ளப்போவதாக கடந்த ஆண்டே அறிவித்தனர். 2013-ம் வருடத்தில் சைந்தியை திருமணம் செய்துகொள்ளப் போவதாக ஜி.வி.பிரகாஷ் அறிவித்துள்ளார்.

## எடையை குறைக்க லட்சுமி ராய் சபதம்



தமிழ், தெலுங்கில், ஒரு சில படங்களில் நடித்துள்ள லட்சுமி ராய்க்கு, இன்னும், சொல்லிக் கொள்ளும்படியான, பெரிய பட்ஜெட் படங்களில், முன்னணி ஹீரோயினாக நடிக்க முடியவில்லையே என்ற, ஏக்கம் இருந்தது. இப்போது, அவருக்கு, அந்த ஏக்கம் தீரப் போகிறது. விரைவிலேயே, பொலிவுட்டில் அடி எடுத்து வைக்கப் போகிறார், அவர். இதற்காக, பாலிவுட்டின் பிரபல தயாரிப்பாளர்களிடம், கதை கேட்டு வருகிறார். அவரிடம் கதை கூறிய சில தயாரிப்பாளர்கள், நீங்கள், சிறிதளவு எடையை குறைத்தால், பாலிவுட்டில், ஹேமமாலினி, ஸ்ரீதேவி மாதிரி, ஒரு பெரிய ரவுண்டு வரலாம் என, தூபம் போட்டனராம். இதனால், உடல் எடையை ஐந்து கிலோவாவது குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், ஜிம்மிலேயே, கிடையாய்க் கிடக்கிறாராம், லட்சுமி. எடை குறைந்தபின், பாலிவுட்டில் பாயத் தயாராகி விடுவாராம்.

## ஹீரோக்களுக்கு அருகில் சீட் போடும் பிந்துமாதவி!



'கழுகு' பட நாயகியான பிந்து மாதவி, தற்போது அரை டஜன் படங்களில் நடித்து வருகிறார். தமிழ் சினிமாவில் ஏற்பட்ட இந்த திடீர் திருப்பம் காரணமாக இப்போது ஆந்திராவை காலி பண்ணி விட்டு கோடம்பாக்கத்துக்கு வந்துவிட்ட அவர், எங்காவது முக்கியமான மிட்நைட் சினிமா பார்ட்டிகள் நடக்கிறது என்று கேள்விப்பட்டால் தானும் கலந்து கொள்கிறார். அங்கு வரும் முன்னணி இயக்குநர் மற்றும் ஹீரோக்களுக்கு அருகில் சீட் போட்டு உட்கார்ந்து சினிமா வாய்ப்புகளுக்கான அப்ளிகேசனையும் போடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கடந்த வருட அறிமுகங்கள்

கடந்த ஆண்டு 79 ஹீரோக்கள் அறிமுகமானார்கள். அவர்களில், உதயநிதி ஸ்டாலின் (ஒரு கல் ஒரு கண்ணாடி), விஜய் ஆண்டனி (நான்), விக்ரம் பிரபு (கும்கி) ஆகியோர் வெற்றி பெற்றார்கள். சிவகார்த்திகேயன் (மெரீனா), வாசகர் (பச்சை என்கிற காத்து), லகுபரன் (ராட்டினம்), தினேஷ் (அட்டக்கத்தி) ஆகியோர் கவனிக்க வைத்தனர்.

78 ஹீரோயின்கள் அறிமுகமானார்கள். அவர்களில், லட்சுமி மேனன் (சுந்தர பாண்டியன், கும்கி), வரலட்சுமி (போடா போடி), ராதிகா ஆப்தே (டோனி), மனீஷா, ஊர்மிளா (வழக்கு எண் 18/9), ஸ்வாதி (ராட்டினம்), நந்திதா (அட்டக்கத்தி), காயத்ரி (18 வயசு) ஆகியோர் கவனிக்க வைத்தனர்.

கடந்த ஆண்டு 97 இயக்குநர்கள் தங்கள் முதல் படைப்பை தந்திருக்கிறார்கள். அவர்களில் கார்த்திக் சுப்புராஜ் (பீட்சா), எஸ்.ஆர்.பிரபாகரன் (சுந்தர பாண்டியன்), ஜீவா சங்கர் (நான்), பாலாஜி மோகன் (காதலில் சொதப்புவது எப்படி), ஹரி சங்கர் - ஹரிஷ் நாராயணன் (அம்புலி), எம்.அன்பழகன் (சாட்டை), பாலாஜி தரணிதரன் (நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்), பா.ரஞ்சித் (அட்ட கத்தி) ஆகியோர் வெற்றியை சுவைத்தார்கள்.

ஐஸ்வர்யா தனுஷ் (3), பிரகாஷ்ராஜ் (டோனி), கீரா (பச்சை என்கிற காத்து), கே.எஸ்.தங்கசாமி (ராட்டினம்), கமலக்கண்ணன் (மதுபானக்கடை), தனபால்



பத்மநாபன் (கிருஷ்ணவேணி பஞ்சாலை), எல்ரெட் குமார் (முப்பொழுதும் உன் கற்பனைகள்), இரா.சுப்பிரமணியம் (சேவற்கொடி), சத்யசிவா (கழுகு), எஸ்.ஜெய்சங்கர் (மன்னாரு), அஸ்லம் (பாகன்), லட்சுமி ராமகிருஷ்ணன் (ஆரோகணம்), எஸ்.பாலன் (உடும்பன்), ஆண்ட்ரோ லூயிஸ் (லீலை), விக்னேஷ் மேனன் (விண்மீன்கள்) ஆகியோர் பாராட்டும்படியான படைப்பைக் கொடுத்தார்கள். எஸ்.எஸ்.ராஜமவுலி (நான் ஈ), சந்தோஷ் சிவன் (உருமி), கவுரி (இங்கிலீஷ் விங்கிலீஷ்) ஆகியோர் வேறு மொழிகளிலிருந்து தமிழுக்கு வந்தார்கள்.

கடந்த ஆண்டு இதுவரை இல்லாத அளவுக்கு 73 இசை அமைப்பாளர்கள் அறிமுகமானார்கள். இவர்களில் அனிருத் (3), சந்தோஷ் நாராயண் (பீட்சா, நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்), கிரிஷ் (மெரீனா), கார்த்திக் (அரவான்), பிரசன்னா (வழக்கு எண் 18/9), மனுமோகன் (ராட்டினம்), வேத்சங்கர் (மதுபானக்கடை) ஆகியோர் நம்பிக்கை வரவுகள்.

## கமலைத் தொடர்ந்து ரஜினியும் டிடிஎச்சுக்கு மாறுகிறார்?



ரஜினி நடித்துள்ள கோச்சடையானையும் டிடிஎச்சில் வெளியிட பேசி வருகிறார்கள். அப்படமும் பிரமாண்ட பட்ஜெட் என்பது மட்டுமின்றி 3டி படம் என்பதால் சில தியேட்டர்களில் மட்டுமே வெளியிடும் வசதி உள்ளது. அதனால் அவரும் இந்த பாணிக்கு மாறினால்தான் படத்தின் வசூலை எடுக்க முடியும். இருப்பினும் இன்னும் ரஜினி இறுதி முடிவை சொல்லவில்லை. இந்த செய்தி தியேட்டர் உரிமையாளர்களை மேலும் பேரதிர்ச்சிக்கு தள்ளியிருக்கிறது.

## டீச்சராக நடிக்கும் சினேகா



'ஹரிதாஸ்' படத்தில் வாய்பேசாத, காது கேளாத ஒரு சிறுவனை பராமரிக்கும் டீச்சர் வேடத்தில் நடித்துள்ள சினேகா, அந்த சிறுவனையும், மற்ற பிள்ளைகளைப் போல மாற்றி, அவனை சாதிக்க வைப்பது தான் படத்தின் ஹைலைட்டாம். இப்படத்தை, தன் கேரியரில் முக்கியமானதாக நினைக்கும் சினேகா, தன் கதாபாத்திரத்தை உணர்ந்து, மிக தத்ரூபமான நடிப்பை வெளிப்படுத்தி யுள்ளாராம். "இப்படியொரு வேடத்தில் நடிக்க வேண்டும் என்பது, என் நீண்ட நாள் ஏக்கம்" என்று சொல்லும் சினேகா, இப்படத்திற்காகத் தான் ரஜினியுடன், 'கோச்சடையான்' படத்தில் நடிக்கயிருந்த, தங்கை வேடத்தை தவிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சொந்தக் குரலும் தேசிய விருதும்




'அருந்ததியில் மிடுக்காக கொஞ்சம் குரலுயர்த்தி நடித்ததும் அனுஷ்காவா...? இரண்டு மூணு தேசிய விருது வாங்குற அளவுக்கு டேலண்ட் ஆனவராச்சே' என்று ஏற்றிவிட்டார்கள். காசு சேர்ந்த பிறகு வரவேற்பறையில் இரண்டு விருதும் இருந்தால் கௌரவமாக இருக்கும் என நினைப்பதில் தவறில்லைதான். அதுக்காக அனுஷ்கா தேர்ந்தெடுத்த படம்தான் 'இரண்டாம் உலகம்'. அனுஷ்காவுக்கு இதில் இரண்டு வேடங்கள். மொத்தமாக நாற்பது நாட்கள் கால்ஷீட் தந்திருக்கிறார். இதெல்லாம் படம் விருது வாங்கித் தரும் என்ற செல்வராகவனின் உத்தர வாதத்தால் அனுஷ்கா செய்தது. தேசிய விருதுக்கு பரிசீலிக்கப்பட வேண்டுமென்றால் சொந்தக் குரலில் டப்பிங் பேசியிருக்க வேண்டும். அனுஷ்காவின் தமிழ் சுமாரானது அவருக்காக வேறொருவர் தான் டப்பிங் பேசி வந்தார். விருது சமாச்சார மாச்சே... இரண்டாம் உலகத்தில் அனுஷ்காவே டப்பிங் பேசவிருப்பதாக கூறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'கொலைசிப்'



பேரப்பிள்ளையை சயிக்கிளில ஏற்றிக்கொண்டு அவ படிக்கிற பள்ளிக்கூடத்திற்கு போய்க்கொண்டிருந்தன். ஐஞ்சாம் வ ப்புப் படிக்கிறா. பள்ளிக்கூடம் முடிஞ்சு 'ஸ்கொலசிப்' வகுப்பு. என்ரை அவவுக்கு 'ஸ்கொலசிப்' சோதினை என்று சொல்லுறதை, 'கொலைசிப்' சோதினை எண்டுதான் சொல்லுவா, பார்த்தால் அதுவும் சரிபோலத்தான் இருக்குது.

ஒரு நாள் 'ஸ்கொலசிப்' தனியார் வகுப்பு முடிஞ்சு, ஒருத்தர் தன்ரை மகளை சயிக்கிளில் ஏற்றினார். பின்னேரம் ஐஞ்சு மணியிருக்கும். பிள்ளை நல்லா களைச்சுப் போயிருந்தது. நான் நினைக்கிறன் 2 மணிக்கு பள்ளிக்கூடம் முடிஞ்சு அப்படியே நேரே 'ஸ்கொலசிப்' ஸ்பெசல் கிளாஸிற்கு தனியார் வகுப்பில் கொண்டுவந்து விட்டிருக்கிறார். பிள்ளை யூனிபோமோடதான் நிண்டது.

பிள்ளையைச் சயிக்கிளில ஏற்றிப்போட்டு "களைச்சுப் போனீங்களா அம்மா... கொண்டு வந்த சாப்பாடு சாப்பிட்டனீங்களோ...? அம்மா ட்றிங்க்ஸ் தந்துவிட்டவவே...? போன்ற விசாரணைகளை மேற்கொள்வார் என எதிர்பார்த்தேன்.

சயிக்கிளில ஏற்றிக்கொண்டு போய்க் கொண்டிருந்தார். நானும் என்ரை பேர்த்தியை ஏற்றிக்கொண்டு பின்னாலை தொடர்ந்தன். அவர் தன்ரை பிள்ளையிட்டை சுக நலம் விசாரிக்கவே இல்லை, அன்பாக நாலு வார்த்தை பேசவும் இல்லை.

சயிக்கிளில் ஏறிப் பிள்ளை சரியாக அமர்ந்து கொள்ளவும் இல்லை. இவர் பிள்ளையைப் பார்த்து, "பதினாலாம் வாய்பாடு பாடமாக்கச் சொல்லி நேற்றுச் சொன்னான் எல்லே? பாடமாக்கிப்போட்டியே?" என்று உறுக்கிக் கேட்டார். பிள்ளை என்ன பதில் சொல்லிச்சுதோ சரியாத் தெரியேல்லை. தகப்பன் "வீட்டை வா.... பார்த்துக்கொள்ளுறன்" எண்டு சொன்னது மட்டும் தெளிவாய்க் கேட்டது.

'கொலசிப்... கொலசிப்.. கொலைவெறி டீ' எண்டு காதுக்கை பாட்டுக் கேக்கிற மாதிரி இருந்தது.

என்ரை பேரன் ஒருத்தன் இந்த முறை ஓ.எல் எடுத்தவன்... முந்தின பிள்ளையள்... எங்கடை காலத்தில 'முத்தமிழ்' என்று செல்லமாக சொல்லப்படுகிற, தமிழ்மொழி, சமயம், தமிழிலக்கிய பாடங்களை எப்படியோ முக்கித்தக்கிப் பாஸ்பண்ணிப் போடுவம்.

இந்த முறை 'ஓ எல்' லிலை விஞ்ஞான பாடத்துக்கு பகுதி ஒன்றிற்கு 'லீக்' ஆகிய 19 வினாக்களுக்கும் அனைத்துப் பிள்ளைகளுக்கும், விடை சரியோ, பிழையோ 19 புள்ளிகள் வழங்குகிறதான நற்செய்தி வந்திருக்கு 'லீக்' ஆக்கினவங்கள் 40 வினாக்கள் 'லீக்' ஆக்கியிருந்தால் எங்கடை பரம்பரையில 'ஓ எல்' இல ஒருத்தரெண்டாலும் விஞ்ஞானமும் 'பாஸ்' பண்ணினதெண்ட பெருமை வந்திருக்கும், எங்கை? காலம் விடேல்லை. இனி உண்மையில விஞ்ஞானத்தில கெட்டித் தனமாக 'ஏ' சித்தி அடைஞ்ச பிள்ளையளையும் பார்த்து 19 போனஸ் புள்ளி எண்ட படியால்தான் நீங்கள் 'ஏ' எடுத்தனிங்கள் எண்டு சொல்லி அவையளை 'அண்டர்' பண்ண வாய்ப்பாய்ப் போய்ச்சுது. சோதனை மேல் சோதனை தான்.

சரி சொல்ல வந்த விசயத்தைச் சொல்லாமல் எங்கேயோ தறிகெட்டு ஓடுறன்.

ஆ... பேரப்பிள்ளையை பள்ளிக்கூடத்துக்கு ஏற்றிக்கொண்டு எங்கடை பிறவுண் றோட்டால வந்து கொண்டிருந்தன்... சயிக்கிளில தான்... படாரெண்டு பள்ளத்துக்கை விட்டுட்டன். அதுக்கை நிறையத்தண்ணி... என்ரை பேரப்பிள்ளை றோட்டுக்காறரை திட்டத் தொடங்கியிற்று. ரெண்டு நாள் மழைதான்... பக்கத்தில இருந்த குளத்தைப் பார்த்தன்... அதுக்கை தண்ணி அவ்வளவாக இல்லை. றோட்டில, முழத்துக்கு முழம் தண்ணி.

பார்த்து ஓடுங்கோ தாத்தா... தண்ணிக்கை சயிக்கிள விடாதேயுங்கோ... என்று பேர்த்தி கடிந்துகொண்டாள். இங்கால பள்ளம் எண்டு அங்காலை திருப்பினால், அங்காலை பள்ளம். அங்காலை திருப்பினால் இங்கால பள்ளம்... என்னெண்டு நான் ஓடுறது...? வெள்ளம் நிற்கிறது நல்லதுதானே பிள்ளை... இது நிலத்தில ஊறி, நிலத்தடிக்குப் போய், எங்கடை கிணற்றோடை சேரும். அப்ப கோடையிலையும் எங்களுக்குத் தண்ணி கிடைக்கும். இதைச் சொல்லுறது 'சஸ்ரைரயினபிள் டெவலப்மென்ற்' என்று எனது வித்துவத் தன்மையை ஐஞ்சாம் வகுப்புப் பேர்த்தியிடம் சொன்னேன்.

"ஐயோ! லூசு தாத்தா லூசுத் தாத்தா... இதில நிக்கிற வெள்ளம் நிலத்தடியில சுவறாது. இதுகளை ஒண்டு சேர்த்து குளத்தில விட்டால் நீங்கள் சொல்லுற 'சஸ்ரயினபிள்' தன்மை இருக்கும், இது ரெண்டு நாளில காய்ஞ்சு போகும் நிலத்தடி மட்டத்தோட சேரமாட்டுது லூசுத் தாத்தா...." என்றாள்.

எனக்கும் யோசிச்சுப் பார்க்கச் சரியாத்தான் இருந்தது. முந்தி இந்தப் பந்தல் போடுறதுக்குக் கப்பு நடுகிற தெண்டால், கிடங்கு கிண்டக் கஷ்டமாக மண் கடினமாக இருக்கும். தண்ணி விட்டு கொஞ்ச நேரம் ஊறவிட்டுக் கிண்டுவம். ஒரு ஆறேழு அங்குலத்துக்கு அங்கால ஈரம் ஊறியிருக்காது. தோண்டக் கஷ்டமாயிருக்கும். பிறகும் தண்ணி ஊற்றி கொஞ்ச நேரம் ஊறவிடுவம். அதுவும் ஒரு ஆறேழு இஞ்சி ஊறி இருக்கும். இப்பிடியே ரெண்டு முழ ஆழக்கிடங்கு தோண்டி கப்பு நடுவம்.


இந்தத் தண்ணியும் மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு மூன்றடி நாலடி ஆழத்துக்கு ஊறாது.... இதை எல்லாம் 'கான்' வெட்டி குளத்துக்கு விட்டால் நிலத்தடி நீர் வளம் பெறும். பேர்த்தி சொன்னதுக்குப் பிறகுதான் எனக்கும் புரிஞ்சுது. இந்த 'சஸ்ரையினபிள் விசயம்'. உண்மையில அது ஒரு பேப்பரில எங்கடை பிரதேச தலைமை அம்மா ஒருவர் சொன்ன விசயத்தைத்தான், என்ரை 'ஒறிஜினல்' மாதிரி எடுத்து விட்டன். அதுக்குத்தான் என்ரை பேர்த்தி என்னை 'லூசுத் தாத்தா' எண்டது. இனி நான் சொல்லேலுமை தெருவுக்குத் தெரு தண்ணி நிக்கிறது 'சஸ்ரையினபிள்' என்று நான் சொல்லேல்லை, இது ஆரோ சொன்னது எண்டு சொல்லேலுமே?

என்ரை போதாத காலம் உப்பிடித்தான். பிள்ளையளின்ரை 'ஸ்கொலசிப்' சோதினைப் பேப்பருகளை எடுத்து ஒருக்காற் செய்து பார்ப்பம். எண்டு செய்து கொண்டு போனன். அநேகமாக எல்லா விடையும் சரி. ஆனால் ஒரு பேப்பரைச் செய்து முடிக்க மூண்டு நாலு நாள் எடுத்துது. என்னெண்டுதான் இந்தப் பிள்ளையள் ஒண்டரை ரெண்டு மணித்தியாலத்தில செய்து முடிக்குதுகளோ தெரியேல்லை.

இந்த நிர்வாக சேவை போட்டிச் சோதினையளிலையும், ஐஞ்சாம் வகுப்புக் 'ஸ்கொலசிப்' சோதினை மாதிரித்தான் கேள்வியள் வருகுது. பேசாமல் ஐஞ்சாம் வகுப்பு 'ஸ்கொலசிப்' சோதினையளில பாஸ் பண்ணுற பிள்ளையளை பாஸ்பண்ணின உடனை நிர்வாகசேவை வேலையளுக்குச் சேர்க்கலாம் போல இருக்குது.

அவ்வளவு கஷ்டமான சோதனை இந்த 'ஸ்கொலசிப்' சோதினை பாருங்கோ. அதுக்குப் பிள்ளையைப் போட்டு நாங்கள் படுத்துகிறபாடு...? கொலசிப்... கொலசிப்... கொலவெறி டீ... .




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர் தான் பாம்பு மனிதனோ...?





மெல்போர்ன் நகரில் உள்ள ஒரு மனிதர் மலரும் புதுவருடத்தை வரவேற்கும் முகமாக கலண்டருக்கு வித்தியாசமான தோற்றத்தை காண்பித்துள்ளார். இதற்காக வீதியில் படுத்து தன் மீது அல்பினோ எனப்படும் மஞ்சள் நிற மலைப்பாம்பு மற்றும் சில மலைப்பாம்புகளை உடலின் மீது போர்த்திக்கொண்டு புகைப்படக்கலைஞர்களை வியக்கவைத்துள்ளார்.

## ஆழ் கடலுக்குள் அதிசய உலகம்



அண்டார்டிகா கடல் பரப்பிலிருந்து எட்டாயிரம் அடிக்குக் கீழே இதுவரை அறியப்படாத ஒரு பாதாள லோகத்தை கண்டுபிடித்திருப்பதாகவும், வெளியுலகம் அறியாத பல புதிரான உயிரினங்கள் இருப்பதாகவும் இங்கிலாந்து விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அதில் பல வகை நண்டுகள், புதியவகையான ஆக்டோபஸ், நட்சத்திர மீன் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன. இவை, அறிவியல் உலகத்துக்கு முற்றிலும் புதியவை என்று இங்கிலாந்து விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.








### இணையத்தை கலக்கிக் கொண்டிருக்கும்

## பிஷ்மானின் புதிய பாடல்

யூரியூப்பில் 'கங்ணம் ஸ்டைல்' பாடலுக்கு பின்பு மிகப் பிரபலமாகியுள்ளது 'One Pound Fish'. பாடகர் மொஹம்மட் நசீர் கிழக்கு லண்டனில் இருக்கும், தனது மீன் கடைக்கு வாடிக்கையாளர்களை வரவைப்பதற்காக இவர் உருவாக்கிய பாடல் 'Long Live One Pound Fish'.

தெருவில் போய் வருபவர்களுக்கு இந்தப் பாடலின் இசையும், பாடலில் வரும் இலகுவாக உச்சரிக்க கூடிய சொற்களும் சட்டென பிடித்துவிடவே வியாபாரம் மட்டுமல்ல நசீரும் மெல்ல பிரபலமடையத் தொடங்கினார்.

இவ்வாறு புகழடையத் தொடங்கிய நசீர் பிரிட்டனில் தஞ்சம் கோரிய ஒரு அகதியாவார். தற்போது அவரது தஞ்சக்கோரிக்கையில் ஒரு சில சிக்கலால் பாகிஸ்தானுக்கு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அதற்குள் அவரது ரசிகர் ஒருவர் அவரைக் கொண்டே உருவாக்கிய One Pound Fish வீடியோ பாடல் யூரியூப்பில் படு ஹிட்டாகிவிட்டது.

பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்பப்பட்ட போது லாகூர் விமான நிலையத்தில் அவரது நூற்றுக்கணக்கான ரசிகர்கள் ஆரவாரமாக நசீரை வரவேற்க பூரித்துப் போய்விட்டார்.

நசீரின் புதிய One Pound Fish பாடலானது யூரியூப்பில் 7 மில்லியன் ரசிகர்களைக் கவர்ந்துள்ளது. இங்கிலாந்தின் இசைப்பாடல் பட்டியலில் 29வது இடத்தைப் பிடித்துள்ளது.

## விசித்திரமான ஹோட்டல்!









'The Heart Attack Grill' எனப்படும் உணவகமானது வைத்தியசாலை போன்று வடிவமைக்கப்பட்ட நட்சத்திர ஹோட்டலாகும். Heart Attack Grill என பெயர் வைத்ததற்கும் ஒரு காரணம் இருக்கிறது.

இங்குள்ள பெண் சேவகிகள் உங்களது உணவுத் தேவைகளுடன் சில பல தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு காத்து நிற்கிறார்கள். உணவின் சுவைக்காக உயிரையும் கொடுக்கலாம் என்பது இவர்களின் தாரக மந்திரம்...!



## மாயன் கலண்டரின் அடுத்த பகுதி கண்டுபிடிப்பு




உலகம் அழியும் என்று மாயன் கலண்டர் பற்றிய பீதியுடன் உலகமே அச்சத்தில் ஆழ்ந்தது. ஆனால், இப்போது பல வருடங்களாக ஆய்வாளர்கள் தேடிக்கொண்டு இருந்த மாயன் கலண்டரின் அடுத்த பகுதி தென்அமெரிக்காவின் வேறொரு பகுதியில் கண்டு எடுக்கப்பட்டுள்ளது. பழைய கலண்டரின் தொடர்ச்சியாக அது அமைந்ததே அதிசயமான ஒன்று. அதே நேரத்தில் உலகம் அழியாமல் போனதுக்கு இப்போது தான் சரியான காரணம் கிடைத்துள்ளது.

இந்தக்கலண்டரில் 2032ஆம் வருடத்தில் மார்ச் மாதம் 16ம் திகதிக்குப் பின் தொடர்ச்சியாக 21 நாட்கள் இடைவெளி விடப்பட்டுள்ளனவாம். இந்த காலகட்டத்தில்தான் 'டுபிரு' என்ற வால்நட்சத்திரம் பூமிக்கு மிக அருகில் வரும் என்று அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

அதே நேரத்தில் சூரியன், வியாழன் போன்றவையும் பூமியுடன் நேர் கோட்டில் இருக்கும். அதனால் ஏற்படும் கடுமையான ஈர்ப்பு விசையின் காரணமாக பூமியின் சுழற்சி வேகம் தடைப்படலாம் என்று கூறப்படுகிறது. ஒரு வேளை அப்படி நடக்குமானால் உலக அழிவு நிச்சயம் நடந்தேறலாம். ஆனால் அப்படி நடக்கும் போது பலர் தப்பிப் பிழைப்பதற்கும் வாய்ப்பு உண்டு என சொல்லப்படுகிறது.

அதனாலேயே மாயன் கலண்டரில் 21 நாட்கள் இடைவெளிக்குப் பின் மறுபடியும் கலண்டர் தொடர்கிறதாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்த மூன்று நாட்களின் அவஸ்ததையைக் குறைக்க

பெண்களுக்கு மாதந்தோறும் 'பீரியட்ஸ்' பிரச்சினை என்பது சிலருக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்திவிடும். தலைவலி, மனஅழுத்தம், கை கால் வலி என அந்த மூன்று நாட்களில் சிலர் துவண்டு போய்விடுவார்கள். இல்லத்தரசிகளுக்கு பிரச்சினையில்லை வீட்டில் ஓய்வெடுத்துக்கொள்ளலாம். ஆனால் அலுவலகம் செல்லும் பெண்களுக்குத்தான் சிக்கல் அதிகம்.

ஆரோக்கியமாக உள்ள பெண்களுக்கு சராசரியாக 28 நாட்களில் மாதவிலக்கு சுழற்சி ஏற்படும். இதன்படி வருடத்திற்கு 13 முறை 'பீரியட்ஸ் டைம்' ஏற்படவேண்டும் என்கின்றனர் மகப்பேற்று மருத்துவர்கள். மாதசுழற்சி வருவதற்கு முன்பாகவே சிலருக்கு உடல்வலி, மார்பகவலி, எரிச்சல் ஆரம்பித்துவிடும். சிலருக்கு தலைவலியும் அதிகரித்துவிடும். இதுபோன்ற நாட்களில் ஏற்படும் வலிகளை சரியான சத்துணவுகளை உண்பதன் மூலம் சமாளிக்க முடியும் என்கின்றனர் நிபுணர்கள்.

மாதவிலக்கு நாட்களில் கோப்பி, டீ போன்ற பானங்களை குடிப்பதை தவிர்க்க வேண்டுமாம். ஏனெனில் கோப்பியில் உள்ள கோஃபின் பதற்றத்தையும், மனஅழுத்தந்தையும் அந்த நாட்களில் அதிகரிக்கும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

மாதவிலக்கு நாட்களில் வெதுவெதுப்பான நீரில் குளிப்பது உடலையும், மனதையும் ரிலாக்ஸ் செய்யும். வலிகளை குறைக்கும். அதேபோல் அடி வயிற்றில் சுடுதண்ணீர் ஒத்தடம் கொடுக்கலாம்.

மாதவிடாய் நாட்களுக்கு ஒரு வாரம் முன்பு இருபது நிமிடம் நடப்பது மனரீதியான பாதிப்புகளைக் குறைக்க உதவும். இதே போல் அந்த மூன்று நாட்களில் குறைந்த பட்சம் 7முதல் 8 மணி நேரம் கண்டிப்பாக உறங்கி ஓய்வெடுக்க வேண்டும்.

மாதவிலக்கு நாட்களில் கோப்பி, டீ போன்ற பானங்களைத் தவிர்க்கலாம். தினமும் இரண்டு கப்பிற்கு மேல் கோப்பி, டீ, குடிக்கும் பெண்கள் சாதாரணப் பெண்களை விட ஏழு மடங்கு மாத விலக்கு நாட்களில் அவதிப்படுவார்கள் என்கிறார்கள், ஆராச்சியாளர்கள். கோப்பியில் உள்ள கோஃபின் பதற்றத்தையும், எரிச்சலையும் அதிகப்படுத்துமாம்

அன்னாளப்பழ ஜூஸ் சாப்பிடலாம். அதில் உள்ள என்சைம்கள் தசைகளை ரிலாக்ஸ் செய்யும். அதேபோல் இஞ்சி டீ சாப்பிடுவதும் களைப்பைப் போக்கும். மனஅழுத்தம் ஏற்படுவதை தவிர்க்க விட்டமின் சி உள்ள தோடம்பழம், திராட்சை, எலுமிச்சை ஜூஸ்களை குடிக்கலாம்.

இந்தச் சமயத்தில் பெண்களுக்கு களைப்பும், அயர்ச்சியும் ஏற்படும். எனவே துத்தநாகம், கல்சியம், விட்டமின் பி சத்து நிறைந்த உணவுகள் மாதவிலக்கு சமயங்களில் வலிகளை நீக்கும். மேலும் விட்டமின் ஏ,டி சத்து அதிகம் உள்ள கரட், பசலைக்கீரை, பால் போன்றவற்றை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மார்பக வலி, களைப்பு போன்றவற்றிலிருந்து நிவாரணம் பெற, விட்டமின் பி6 அதிகம் உள்ள மீன், கோழி, வாழைக்காய், உருளைக்கிழங்கு போன்ற உணவுகளை சாப்பிடலாம். இந்த ஊட்டச்சத்துணவுகளை மாதவிடாயின் ஒரு வாரத்துக்கு முன்பும், மாதவிடாயின் போதும் கடைப்பிடித்தல் நல்லது!

"பீரியட்ஸ்' வரும் நாட்களுக்கு முன்பாக அதிக கொழுப்புச் சத்துள்ள உணவுகள் உண்பதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் இது PM எனப்படும் (Pre menstrual syndome) அறிகுறிகளை அதிகப்படுத்தும். அந்த நாட்களில் குறைவான கொழுப்புள்ள உணவு வகைகளை உட்கொள்ள வேண்டும்.

மாதவிலக்கு நாட்களில் அதிகம் உப்பு, காரம் சேர்ந்த ஊறுகாய், நொறுக்குத்தீனி போன்றவைகளை சாப்பிட வேண்டும் என்று தோன்றும் ஆனால், அவற்றை கண்டிப்பாக ஒதுக்கிவிட வேண்டும். அதேபோல் ஸ்வீட், ஐஸ்கிறீம், சொக்லெட், சிப்ஸ் போன்றவற்றை சாப்பிடக்கூடாது என்கின்றனர் நிபுணர்கள். அந்த மூன்று நாட்களில் இனிப்புக் குறைவாக உள்ள உணவுகளைச் சாப்பிடுவதே நல்லது.

குடும்பத்திற்காக உழைத்து களைக்கும் இல்லத்தரசிகளுக்கு மாதம் மூன்று நாட்கள் அவஸ்தைதான். இந்த நாட்களில் அவர்களுக்கு மனஅழுத்தம் ஏற்படாமல் தடுப்பது குடும்பத்தினரின் கைகளில் உள்ளது. இதேபோல் மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களை அதிலிருந்து வெளிக்கொண்டுவருவது குடும்பத்தினரின் கைகளில் தான்உள்ளது.

மகளிர் சுடர்

# செம்பருத்திப் பூ குளியல்



செம்பருத்தி இலையை அரைத்து தலைக்கு தேய்த்து குளித்து வந்தால் முடி பட்டுப்போன்று மென்மையாக மாறிவிடும். பளபளப்பு கூந்தலுக்கு ஷம்போவே கதியென்று கிடக்கும் பெண்கள், அதற்கு மாற்றாக இதைப் பயன்படுத்தலாம். இதேபோல், 2 அல்லது 3 செம்பருத்திப் பூக்களை ஒரு டம்ளர் நீர்விட்டு காய்ச்சி வடிகட்டி எடுத்துக்கொண்டு, அதனுடன் சிறிது சர்க்கரை சேர்த்து தினமும் குடித்து வந்தால் இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவு அதிகரிக்கும்.

உடலும் நன்கு ஆரோக்கியம் பெறும். தலைமுடி அடர்ந்து, உறுதியாக, செழிப்பாக வளர்வதற்கு செம்பருத்திப் பூ உதவுகிறது. கூந்தலைச் சுத்தப்படுத்த செம்பருத்தி இலையை நைசாக அரைத்து தலைக்குப் பூசி குளிக்கலாம். இவ்வாறு தேய்த்துக் குளிப்பதால் முடி சுத்தமாவதுடன் பட்டுப்போல பளபளக்கும்.

சிலருடைய தலையில் பொடுகு, பேன், ஈர் தொல்லைகள் அதிகமாக இருக்கும். இவர்கள் எவ்வளவுதான் மருந்துகள், ஷம்போக்கள் உபயோகித்துப் பார்த்தாலும் அவர்கள் முழுமையாக இந்த தொல்லையிலிருந்து விடுபட முடிவதில்லை. இதற்கு அருமையான மருந்து செம்பருத்திதான்.

செம்பருத்திப் பூவின் இதழ்களை அரைத்து தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் பேன், பொடுகு நீங்கும். செம்பருத்தி இதழ்களை நிழலில் உலர்த்தி எடுத்து வெந்தயப்பொடி, கறிவேப்பிலைப்பொடி கலந்து எண்ணெயில் கொதிக்க வைத்து எடுத்து போத்தலில் அடைத்து வைத்து தினமும் தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் தலைமுடி உதிர்தல் நீங்கி, முடி நன்கு வளரும்.

செம்பருத்திப் பூக்களைப் பறித்துத் தலையில் வைத்துக் கட்டிக்கொண்டு இரவு படுத்துக் கொள்ளவும். இதுபோன்று மூன்று நான்கு தடவைகள் செய்தால் தலையிலுள்ள பேன்கள் ஒழிந்துவிடும்

# வெங்காயப் பகோடா

வெங்காயப் பகோடாவை சின்ன வெங்காயத்தில் செய்தால்தான் மென்மையாக மாவும், வெங்காயமும் சேர்ந்ததுபோல் வரும். பெரிய வெங்காயத்தில் செய்யும்போது இரண்டுமே கொஞ்சம் பிரிந்து தனித்தனியாக வரும். அதுவுமில்லாமல் மாவு வெந்து வெங்காயம் வேகாமல் இருக்கும்.

**தேவையான பொருட்கள் :**

சின்ன வெங்காயம் - 3
கடலை மாவு - ஒரு கப்
அரிசி மாவு - ஒரு தேக்கரண்டி
சமையல் சோடா - துளிக்கும் குறைவாக
பச்சை மிளகாய் -1
இஞ்சி - சிறு துண்டு
பெருங்காயம் - சிறிது

வெங்காயம், பச்சைமிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை இவற்றை நீளவாக்கில் நறுக்கி சிறிது உப்பு சேர்த்து லேசாக பிசறினாற்போல் வைக்கவும்.



**செய்முறை :**

கடலைமாவு, அரிசிமாவு, சமையல் சோடா,சிறிது உப்பு இவற்றை இரண்டு முறை சலித்து வைக்கவும். இதில் பெருங்காயம் சேர்க்கவும்.

ஒரு தேக்கரண்டி அளவிற்கு எண்ணெய் காயவைத்து மாவில் ஊற்றி மாவு முழுவதும் படுமாறு கிளறவும்.

பிறகு மாவைக் கொஞ்சம் கொஞ்சமாக வெங்காயக் கலவையில் தூவினாற்போல் போட்டு அழுத்தி பிசையாமல் பக்குவமாகப் பிசையவும். தண்ணீர் சேர்க்க வேண்டாம்.

ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி அடுப்பிலேற்றவும். அது காய்வதற்குள் மாவை உதிர்த்தாற்போல் செய்து வைக்கவும்.

எண்ணெய் காய்ந்ததும் மாவைக் கிள்ளி எடுக்காமல், அழுத்தாமல் அப்படியே உதிரியாக எடுத்துப் போடவும்.

ஒரு பக்கம் லேசாக சிவந்ததும் திருப்பிவிட்டு அடுத்த பக்கமும் லேசாக சிவக்கும்போதே எடுத்துவிடவும். அதிகம் சிவந்தால் சுவையில் கசப்பு தெரியும்.

இறுதியாக கொஞ்சம் கறிவேப்பிலையை வறுத்துப் போடவும்.

இது கமகம, கரகர, மொறுமொறு பகோடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# METFORMIN பக்கவிளைவை ஏற்படுத்துமா?

டொக்டர். எஸ்.சுரேந்திரஜித்

## உடல் நலம்




சி. மயூரி, யாழ்ப்பாணம்.

**கேள்வி :** நீரிழிவு நோய்க்கு பயன்படுத்தும் METFORMIN என்ற மருந்தினால் சிறுநீரகம் பாதிக்கப்படும் என்கிறார்களே இது உண்மையா?


**பதில் :** மருத்துவ விஞ்ஞானத்தில் மருந்தியல் (PHARMACOLOGY) முக்கிய துறையாகும். இலகு தமிழில் சொல்வதானால் மருந்து மாத்திரைகளின் வகை, அவற்றின் பெயர், மருந்துகள் தொழிற்படும் விதம் அவற்றின் பக்கவிளைவுகள் ஆகியன பற்றிய கற்றல் எனலாம். இவ்வாறு மருந்துகள் நூற்றுக்கணக்கில் புதிதாக அறிமுகமாகி வருகின்றன. புதிதாக கண்டுபிடிக்கப்படுபவை முன்பு அதே வியாதிக்கு பயன்படுத்தப்பட்ட பழைய மருந்துகளை விட பக்கவிளைவுகள் குறைந்தவையாக உள்ளன. எனவே நாம் புதிய மருந்துகளுக்கு மாறிக்கொள்கிறோம். இருந்தபோதிலும் ஒருசில மருந்துகள் பல தசாப்தங்களாக தனிக்காட்டு ராஜாவாக வலம் வந்து கொண்டே இருக்கின்றன. நீங்கள் கூறும் (METFORMIN) இப்படிப்பட்ட ஒரு பழைய போர்வீரன் (WARRIOR HORSE) எனலாம். நீரிழிவு உள்ள பெரும்பாலானவர்கள் இந்த METFORMIN மாத்திரையினையே பயன்படுத்துகின்றனர். மிகத்தீவிரமான சிறுநீரக செயலிழப்பு (KIDNEY FAILURE) இருந்தால் தான் (METFORMIN) மாத்திரை உள்ளெடுப்பது தவிர்க்கப்பட வேண்டும். மற்றும்படி METFORMIN அற்புதமான மாத்திரையாகும்.

முற்காலத்தில் நீரிழிவு வியாதிக்கு மட்டுமே METFORMIN மாத்திரை பயன்படுத்தினார்கள். இப்போது உடல் எடையைக் குறைக்க நீரிழிவு இல்லாதவர்களுமே METFORMIN பயன்படுத்தலாம் என சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் நீரிழிவு இல்லாதவர்களில் சீனிமட்டத்தை METFORMIN குறைத்துவிடாதா என நீங்கள் கேட்கலாம். இல்லை! நீரிழிவு வியாதி இல்லாதவர்களில் METFOR MIN அவர்களின் சீனிமட்டத்தில் தாழ்வை ஏற்படுத்துவதில்லை. இது மருத்துவ விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்ட விடயமாகும். METFORMIN WILL NOT REDUCE BLOOD GLUCOSE LEVELS IN NON - DIABETIC SUBJECTS என BNF என்ற (BRITISH NATIONAL FORMULAR மருந்தியல் நூல் தெளிவாக கூறுகிறது ஒரே விடயம் METFORMIN நீரிழிவு வியாதி உள்ளவர்களில் ஒருவிதமாகவும் இல்லாதவர்களில் மற்றொரு விதமாகவும் தொழிற்படும் உண்மையே. இதில் ஆச்சரியப்பட எதுவுமே இல்லை.

**வாசகர்களே!**
**உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு டொக்டர் எஸ்.சுரேந்திரஜித் பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**
**உடல் நலம்**
**சுடர் ஒளி வாரமலர்,**
**இல.361, கஸ்தூரியார் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

எனவே METFORMIN சிறுநீரக வியாதியை ஏற்படுத்தும் என்று அநாவசிய வதந்திகளால் பயமுற்று உள்ளவர் METFORMIN மாத்திரை அருந்தாது விடுவதால் உண்மையில் நீரிழிவு வியாதியால் பாதிக்கப்படுவதே நடக்கும். சிறுநீரக மாற்றீடு அறுவைச் சிகிச்சை (KIDNY TRANSPLANTATION SURGERY) என்பது ஒன்றும் சர்வசாதரண சத்திரசிகிச்சை கிடையாது. பெருந்தொகைப் பணம் இதற்கு செலவாகும். ஒரு ருபாவிற்கும் METFORMIN மாத்திரையை உள்ளெடுக்கப் பயந்து கடைசியில் ஒரு கோடி ருபா செலவாகும் சிறுநீரக மாற்றீடு சிகிச்சை தேவைதானா என்பதை நோயாளிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சிறுநீரக செயலிழப்பு சிகிச்சை (KIDNEY FAILURE TREATMENT UNIT) பிரிவிற்கு நீங்கள் அவசியம் சென்று பார்க்கவேண்டும். அங்கு சிறுநீரகம் செயலிழந்து சிகிச்சை பெற வந்துள்ள நோயாளரில் அவலம் புரியும் மருத்துவர்கள் இதற்கு இடமளிக்கக்கூடாது. இந்த தொடர்பாடல் இடைவெளி. (Communication Gap) இருப்பதுதான் பல நோயாளிகள் தவறாது அபிப்பிராயங்களை உருவாக்கி கடைப்பிடிக்கத் தலைப்படுகின்றனர். உங்கள் நண்பர், அயலவர், மருந்துக்கடையில் மருந்து விற்பவர் சொல்லும் அறிவுரையை ஒருபோதும் கணக்கில் கொள்ளவேண்டாம். 'அரைவைத்தியன் ஆயிரம் பேரைக்கொல்வான்' என்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவர்கள் செய்வது நிச்சயமாக கொலைதான். தாம் அறியாத, கற்காத ஒரு விடயம் பற்றிக் கூற இவர்களுக்கு உரிமை இல்லை. அவ்வாறே நோயாளிக்காக நேரம் செலவிட்டு அறிவுரை வழங்காது விடவும். மருத்துவருக்கு உரிமை இல்லை.

# ஞானப்பற்கள்



## (Wisdom Tooth)

இருபது வயதுக்கு மேல் முளைத்து படாதபாடு படுத்தும் ஞானப்பற்கள் ((Wisdom Tooth) ) தேவைதானா? இவற்றை பல் மருத்துவரிடம் சென்று பிடுங்க முடியுமா? பொதுவாக பதினெட்டு வயது முதல் இருபத்தைந்து வயதுக்குள் ஞானப்பல் முளைக்கும். நமக்கு நன்கு விபரம் தெரிந்து முளைக்கும் பற்கள் இவை என்பதால், இதை ஞானப்பற்கள் என்று சொல்கிறார்கள். மூன்றாவது கடவாய்ப் பல்லான ஞானப்பற்கள் கீழ்த்தாடையில் இரண்டும், மேல்த்தாடையில் இரண்டும் வளரும். ஞானப்பற்கள் எல்லோருக்கும் முளைக்கும் என்று சொல்ல முடியாது.

சிலருக்கு முளைக்கும். சிலருக்கு முளைக்காமலே போகும். சிலருக்குப் பாதி முளைத்து, மீதி தாடைக்குள்ளேயே தங்கிவிடும். சிலருக்குப் பல் வெளியே வர முடியாதபடிக்கு எலும்பு தடுத்துவிடும். இதனால் எல்லாம் பிரச்சினை இல்லை. ஞானப்பல் வளரும்போது கோணலாக வளர்ந்து புற்றுநோய்க்கு ஒரு காரணமாகவும் மாற வாய்ப்புண்டு. எனவே, ஞானப்பல் வளரும் பட்சத்தில் தாடையில் ஏதாவது வலி ஏற்பட்டால், உடனடியாக ஒரு பல் மருத்துவரை அணுகுவது நல்லது. உங்களுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தும் ஞானப்பல்லைப் பிடுங்கிவிடலாமா அல்லது மருத்துவ சிகிச்சைகள் மூலம் சரி செய்து விடலாமா என்பதை அந்த மருத்துவரே முடிவு செய்வார்.

# வாழைக்காயிலும் மருத்துவ குணமுண்டு!



வாழைக்காயில் பல வகைகள் இருந்தாலும் மொந்தன்வாழை ரகத்தைத்தான் சமைப்பது வழக்கம். அதற்காக மற்றவகை வாழைக்காய்களை சாப்பிடக் கூடாது என்பது கிடையாது. அவைகள் பரவலாக கிடைப்பதில்லை.

மொந்தன் வாழைக்காயில் இரும்புச்சத்துடன் நிறைய மாவுச்சத்து இருக்கிறது. இதனால் உடல் பருக்கும். உடலுக்கு நல்ல வளர்ச்சி கிடைக்கும். பசியை அடக்கும். இதனுடன் மிளகு சீரகம் சேர்த்து சமைப்பது மிகவும் நல்லது. வாயால் ரத்தம் கக்குபவர்களுக்கும், கிராணி, நீரழிவு உள்ளவர்களுக்கும் பத்திய உணவாக வாழைக் கச்சல் பயன்படும்.

வாழைக்காயைச் சமைக்கும்போது மேல் தோலை மெல்லியதாகச் சீவியெடுத்தால் போதும். உள்த்தோலுடன் சமைப்பதே சிறந்தது. சிலர் இதுபோன்று சீவியெடுத்த தோலை நறுக்கி வதக்கி, புளி, மிளகாய் சேர்த்து துவையலாகச் செய்து உண்பார்கள். பொதுவாக கேரளத்தில் இந்தப் பழக்கம் அதிகம் இருக்கிறது.

இப்படி துவையலாக செய்து சாப்பிடுவதால் இரத்த விருத்தியும், பலமும் உண்டாகும். வாழைக்காய் சாப்பிடுவதால் வயிறு இரைச்சல், கழிச்சல், வாயில் நீர் ஊறுதல், இருமல் ஆகியவையும் நீங்கும். ஆனால் வாய்வு மிகும். அதுபோல வாழைப்பிஞ்சு சாப்பிடுவது பத்தியத்திற்கு ஏற்றதுதான் என்றாலும் மலத்தை இறுக்கி விடும்.

பச்சை வாழைக்காயை சின்னச் சின்ன வில்லைகளாக நறுக்கி வெயிலில் உலர்த்தி மாவாக்கி உப்புடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் அஜீரணம், புளித்த ஏப்பம் ஆகியவை நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

55

நா.யோகேந்திரநாதன்

தெருமுனையில் வந்துகொண்டிருந்த இரு கார்களும் மணியாறன்மூலை இளைஞர்களிடம் ஒரு பரபரப்பை ஏற்படுத்திய போதும் உச்சிலடி கடுக்கன் கணபதியின் ஆட்கள் துணிந்து இப்படியான நேரத்தில் வரமாட்டார்கள் என்றே விதானையார் நம்பினார். ஆனால் அப்படி வந்தால் வருபவர்கள் பாளைக்கத்தியால் வெட்டு வாங்க வேண்டிவரும் என்பதையும், இருவாகனங்களும் எரியூட்டப்படும் என்பதையும் அதைத் தன்னால்கூடத் தடுக்க முடியாது என்பதையும் விதானையார் உணர்ந்து கொண்டார். எனினும் தனது குடிமக்களின் இடத்தில் புகுந்து வீடு கொளுத்தியவர்களை அவரும் மன்னிக்கத் தயாராக இருக்கவில்லை.

என்றாலும் அவர் சுற்றி நின்றவர்களிடம் "எதுக்கும் அவசரப்படாதேங்கோ கிட்ட வரட்டும்" என அவர்களைச் சற்றுக் கட்டுப்படுத்தினார்.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக ஒரு காரில் ஐயா மாமாவும், சில சாணக்கமூலை வாலிபர்களும் மற்றக் காரில் குடியரசாரும், சில கரவெட்டி இளைஞர்களும் வந்திருந்தனர்.

எரிந்து புகைந்து கொண்டிருந்த வீடும், கமலி நின்ற கோலமும் ஐயா மாமாவுக்கு சினத்தை மூட்டி விட்டன. அவர் நேராக வேலாயுதத்திற்கு கிட்டச்சென்று, "நீ தானேயடா...? வீடு கொளுத்தின வீரன்" எனக் கேட்டார். அவன் பயத்தில் மிரளமிரள விழித்தான்.

ஐயா மாமா விதானையாரிடம் போய் "கமலி எங்கடை கட்சிக் கூட்டத்திலை பேசினபடியால் தானே அவளின்ரை வீட்டைக் கொழுத்தினவங்கள். இது எங்கடை கட்சிக்கு விட்ட சவால் விதானையார்" என்றார். விதானையார் நிதானமாக "உண்மைதான். இப்ப அதுக்கு என்ன செய்யலாம்?" எனக் கேட்டார்.

ஐயா மாமா ஒரு முறை வேலாயுதத்தைக் குறிப்பில் பார்த்து விட்டு "இவனை எங்கடை காரிலை ஏத்திக்கொண்டு போய் இவன் பாக்கத் தக்கதாய் இவன்ரை வீட்டைக் கொழுத்தப் போறம்" என்றார்.

குடியரசார் குறுக்கிட்டார்.

"இவன் ஊரைத் தட்டிச் சுத்தி கள்ளையும், சாராயத்தையும் குடிச்சிட்டு திமிர் வேலை பாக்கிறதுக்கு சந்தை வியாபாரம் செய்து கஷ்டப்பட்டு குடும்பத்தைப் பாக்கிற இவன்ரை பெண்டிலையும், ஒண்டுமறியாத பிள்ளையளையும் தெருவிலை விடுறதே?"

ஐயா மாமா சீறினார். "இப்ப இவங்கள் ஆடுற கூத்தெல்லாம் ஆட நாங்கள் கைகட்டிப் பாத்துக் கொண்டிருக்கிறதே?"

"அப்பிடியெண்டில்லை. என்ரை குடிமக்களிலை கைவைச்சவங்களை நானும் சும்மா விடப்போறேல்லை. ஆனால் இப்ப பெட்டை இவன்ரை கையை அடிச்சு முறிச்சு விட்டிட்டாள். இவனைக்கொண்டு போய் பொலிசிலை குடுப்பம். பிறகு மிச்சத்தைப் பாப்பம்" என்றார் விதானையார்.

ஐயா மாமா வேலாயுதத்தின் கையைப் பார்த்துவிட்டு கமலியிடம் "ஏனடி பிள்ளை! கையோடை விட்டனீ... அடிச்சு மண்டையைப் பிளந்திருக்கலாமே?" எனக் கேட்டார்.

"நான் எனக்கு முடிஞ்சதைச் செய்தன். அப்பு வந்து மிச்சத்தைப் பாப்பார்" என்றாள் கமலி.

அப்போது தான் பொன்னுக்குட்டி வந்தால் நிலைமை எவ்வளவு விபரீதமாக மாறும் என்ற விஷயம் விதானையாருக்கு உறைத்தது. உடனடியாகவே வேலாயுதத்தை அந்த இடத்திலிருந்து அகற்றவேண்டும் என முடிவு செய்து கொண்டார்.

"கந்தப்பண்ணை! எல்லாரும் வாருங்கோ..." முதலிலை இவனைக் கொண்டு போய் பொலிசிலை குடுப்பம்" என்றார் விதானையார்.

ஐயா மாமாவுடன் வந்த சிவராசன் வேலாயுதத்தின் தலைமயிரைப் பிடித்துக்குலுக்கி விட்டு "டேய்... கை முறிஞ்சதாலை தப்பியிட்டாய்... இல்லாட்டில் குடல் உருவி மாலை போட்டு விட்டிருப்பம்" என்றான்.

"நீங்கள் இவனைக்கொண்டு போங்கோ... நாங்கள் பிறகு வாறம்" என்றார் ஐயா மாமா... புகையும் வீட்டைப் பார்க்கப் பார்க்க அவரின் கோபம் மேலும் மேலும் கூடிக்கொண்டு போனது.

விதானையார் தான் வந்த மணியத்தின் காரில் வேலாயுதத்தை ஏற்றிக்கொண்டு முன்னால் புறப்பட பின்னால் குடியரசு கந்தப்பரின் வாகனம் தொடர்ந்தது.

கார் ஒழுங்கையால் வந்து கல்லு றோட்டில் ஏறியது. முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த விதானையார். திரும்பி வேலாயுதத்தைப் பார்த்து, "வீடு கொழுத்தினதுக்குப் பத்து வருஷம்..., பெட்டையைக் கற்பழிக்க முயற்சித்ததுக்கு ஒரு பத்து வருஷம்... எல்லாமே எப்பிடியும் ஒரு இருபது வருஷத்துக்குக் குறையாமல் மறியல் தீரும். சம்மதம் தானே?" எனக் கேட்டார்.

இருபது வருஷம் என்றதும் வேலாயுதத்துக்குக் குலை நடுங்கியது. ஒரு முறை 14 நாள் விளக்கமறியலில் இருந்தபோதே கள்ளுக்குடிக்க முடியாததாலும், பீடி பற்றமுடியாததினாலும் விசர் பிடிக்கும் நிலையில் கஷ்டப்பட்டவன். இருபது வருஷம் என்பதை நினைக்கவே தற்கொலை



செய்வது மேல் என்றே அவனுக்குத் தோன்றியது.

அவன் எதுவுமே பேசவில்லை.

விதானையார் மீண்டும் கேட்டார் "அப்ப... என்ன செய்யப்போறாய்?"

அவன் ஒருவிதத் தயக்கத்துடன் "ஒரு நல்ல அப்புக்காத்தை வைச்சு...?" என இழுத்தான்.

"எந்த அப்புக்காத்து வந்தாலும் சரி வராது... உன்ரை கை ஏன் முறிஞ்சது... எங்கை முறிஞ்சது எண்ட கேள்வி வர எல்லா உண்மையும் வெளிச்சுப் போம்"

"அது... நான் பொலிசிலையும், ஆஸ்பத்திரியிலையும் விழுந்துதான் கை முறிஞ்சதெண்டு சொன்னால்....?"

"சொல்லிப்பாரன்" என்றார் விதானையார், மெல்லிய ஒரு புன் சிரிப்புடன்.

அப்படி அவன் சொல்வதை விதானையாரும் விரும்பினார். இந்தப் பிரச்சினைக்குக் கமலியை இழுக்க அவர் விரும்பவில்லை.

"அவளும் நீ கிணத்தடியிலை பிடிச்சு இழுத்ததைச் சொல்ல மாட்டாள். நீயும் விழுந்து தான் கை முறிஞ்சதெண்டு சொன்னியெண்டால் கற்பழிக்க முயன்ற குற்றத்திலையிருந்து தப்பியிடலாம்"

"அப்ப... வீடெரிச்சதுக்கு...?"

"அதுக்கு நல்ல அப்புக்காத்தை வைச்சுப் பேசன்..." என்றார் விதானையார்.

கார் பிரதான வீதியால் ஏறி பருத்தித்துறை நோக்கி ஓட ஆரம்பித்தது.

அவர்கள் பொலிஸ் நிலையத்தில் போய் இறங்கிய போது சார்ஜண்ட் சின்னத்தம்பியே பொறுப்பில் இருந்தார். தம்பிப்பிள்ளை விதானையார், குடியரசு கந்தப்பர் என ஒரு கூட்டமே போய் இறங்கிய போது ஏதோ ஒரு பெரும் அசம்பாவிதம் நடந்து விட்டதைப் புரிந்து கொண்டார் சின்னத்தம்பி.

"இறங்கி வாடா!" என்று விட்டு விதானையார் முன்னால் போனார்.

"வாருங்கோ.. விதானையார். ஏதோ விசேசத்துடன் வந்திருக்கிறியள் போலை?" எனக் கேட்டார் சின்னத்தம்பி.

"ஓமோம். வீடு கொழுத்த வந்த கோஷ்டியிலை மற்றவங்கள் ஓடியிட்டாங்கள். இவன் மட்டும்தான் சனத்தட்டைப் பிடிபட்டவன்" என்றார் விதானையார்.

"அப்ப... ஆர் முறைப்பாடு போடுறது..?"

"அங்கை வீட்டுக்காரர் ஒருதரும் சம்பவம் நடந்த நேரம் இருக்கேல்லை. நானே முறைப்பாடுதாறன்" என்று விட்டு விதானையார் சிலர் ஒரு காரில் வந்து வீட்டுக்குத் தீ மூட்டியதாகவும், சனங்கள் ஓடி வர வேலாயுதத்தை விட்டிட்டு காரில் ஏறி ஓடி விட்டதாகவும் முறைப்பாடு கொடுத்தார்.

பின்பு அவர் வேலாயுதம் பக்கம் திரும்பி. "டேய் உன்னோடை வந்த ஆக்களின்ரை பேர், நீ வந்த காரின்ரை நம்பர் எல்லாத்தையும் சொல்லுவியெண்டால் உன்னை அரசாங்க தரப்புச் சாட்சியாய் போட்டு தப்ப வைக்கலாம்... இல்லாட்டில் பத்து வருஷம் தப்பாது?" என்றார்.

"ஐயா! உண்மையாய் நான் கொழுத்தேல்லை. எரியேக்கைதான் கண்டனான்."

"அது எங்களுக்கும் விளங்கும்... நீ கொழுத்தினவங்களோடை கூட வந்தனி. அவங்கடை பேர்கள் உனக்குத் தெரியாதெண்டு செல்லேலுமே? பேர்களைச் சொன்னால் நீ தப்பலாம். இல்லாட்டில் நீ தான் முதல் எதிரி?" விதானையார் விரிக்கும் வலையைச் சின்னத்தம்பி நன்றாகவே புரிந்துகொண்டார் ஆனால், அவர் எதுவுமே பேசவில்லை. ஏற்கனவே காசி முதலாளிக்காக சிவஞானம், கனகரத்தினம் விஷயத்திலை திருகுதாளம் செய்து விதானையாரிடம் பட்டபாட்டை அவர் மறக்கவில்லை. வங்கோலை வேலாயுதம் எதுவும் பேசாமல் இருக்கவே விதானையார் "எது விருப்பம்" எனக்கேட்டார்.

அவன் ஒரு முறை விதானையாரையும், சார்ஜனையும் மாறி மாறிப் பார்த்துவிட்டுக் கடகடவெனத் தன்னுடன் வந்தவர்களின் பெயர்களைச் சொல்லிவிட்டு காரின் இலக்கம், சாரதியின் பெயர் எல்லாவற்றையும் அட்சரம் பிசகாமல் சொல்லி முடித்தான்.

அவன் சொன்னவற்றையெல்லாம் எழுதிவிட்டு அவனுக்கு ஒருமுறை அதை வாசித்துக் காட்டிவிட்டு, அவனிடம் கையெழுத்து வாங்கினார் சின்னத்தம்பி.

"இப்ப என்ன செய்யப்போறியள்...?" எனச் சின்னத்தம்பியை நோக்கிக் கேட்டார் விதானையார்.

"இப்ப இவனை ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேணும். யாழ்ப்பாணம் தான் பண்டேஜ் போட அனுப்புவாங்கள்... பிறகு தான் கோட்டிலை முற்படுத்த வேணும்" என்றார் சின்னத்தம்பி.

"அப்ப. வீடு எரிச்ச மற்றவங்கள்...?"

"இப்பவே அவ்வளவு பேரையும் கைது செய்ய வெளிக்கிடப் போறம்" என்றார் சின்னத்தம்பி.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்பின் பின்னும்...



நீதித்துறையில் தெரிவுக்குழு எந்தளவு செல்வாக்கு செலுத்த முடியும் என்பதை உயர் நீதிமன்றம் மேன் முறையீட்டு நீதிமன்றிற்கு அனுப்பியுள்ள வியாக்கியானத்தின் மூலம் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது. தெரிவுக் குழு விசாரணை அறிக்கை மீது இடைக்கால தடையுத்தரவை விதிக்கக்கோரி பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவின் சட்டத்தரணிகளால் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ரீட்மனு பற்றிய வழக்கு விசாரணையின் போதே, உயர் நீதிமன்றினால் அனுப்பப்பட்ட வியாக்கியானத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் வாசித்து வழங்கியிருக்கிறது. இவ்வியாக்கியானத்தில் நிலையியல் சட்டக்கோவை 78 (அ) கீழ் செயற்படும் நாடாளுமன்றத்திற்கோ, அல்லது செயற்படும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கோ, பிரதம நீதியரசரை குற்றவாளியாக்கி தண்டனைக்கு உட்படுத்தும் அதிகாரம் கிடையாது என தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப்பிரேரணையை சட்ட அங்கீகாரம் கொண்ட அமைப்பே விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனவும், நிலையியல் சட்டக்கோவையை ஒரு அங்கீகரிக்கப்பட்ட சட்டமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதால், அதன் கீழ் செயற்படும் தெரிவுக்குழுவிற்கு அந்த அதிகாரம் கிடையாது என ஆணித்தரமாக அடித்துக் கூறியிருக்கிறது. ஆனாலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் நாடாளுமன்றமும் அதில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களும் நாடாளுமன்றமே முதன்மையானது எனவும், நாடாளுமன்ற விவகாரங்களில் நீதிமன்றங்கள் தலையிடுவதற்கு சட்ட அங்கீகாரம் கிடையாது எனவும், அவ்வாறு தலையிட்டால் அது அரசியல் அமைப்பின் நான்காவது (C) உறுப்புரையை மீறுவதாக அமையும் என்றும் தெரிவித்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் உட்பட்ட அதிகாரிகள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி நாடாளுமன்ற நிலையியல் சட்டங்களுக்கும், நீதிமன்ற சட்டங்களுக்கும் இடையில் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன, நாடாளுமன்ற விவகாரங்களில் மூன்றாம் தரப்பு தலையிட எந்தவிதமான சட்ட அங்கீகாரமும் கிடையாது, இந்நிலையிலேயே நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு தனது செயற்பாடுகளை சபாநாயகரின் தீர்மானத்திற்கமைய முன்னெடுத்துச் சென்றது, இந்நிலையில் தெரிவுக்குழுவிற்கு நீதிமன்றம்அழைப்பாணை (இது அழைப்பாணை அல்ல என அரசு ஏற்கனவே தெரிவித்திருந்தது) அனுப்பியபோது நாடாளுமன்ற உள்விவகாரங்களில் உச்ச நீதிமன்றம் தலையிட எந்தவிதமான சட்ட அங்கீகாரமும் இல்லை என நாடாளுமன்றம் சுட்டிக்காட்டியது. அரசியல் அமைப்பின் நான்காவது உறுப்புரையின் படி நாடாளுமன்றத்தை கட்டுப்படுத்தும் அதிகாரம் நீதிமன்றிற்கு கிடையாது என தெளிவாக கூறப்பட்டுள்ளது. இதனால் உச்ச நீதிமன்றால் மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு அனுப்பப்பட்டுள்ள வியாக்கியானம் தெரிவுக்குழுவில் எந்தவிதமான தாக்கத்தையும் செலுத்தாது எனவும் சந்திமாவீரக்கொடி பதிலளித்திருக்கிறார். ஆனாலும், நீதிமன்றம் பாராளுமன்ற விவகாரங்களில் செல்வாக்கு செலுத்தமுடியாவிட்டாலும் பிரதம நீதியரசரின் உரிமையையும் நீதிமன்ற கட்டமைப்பையும் பேணிப்பாதுகாக்கும் பொருட்டே இவ் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்ததாகவும் அதற்குரிய அதிகாரம் தமக்கு இருப்பதாகவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 21 ஆம் திகதி வழக்கு விசாரணையின் போது சுட்டிக்காட்டியிருந்தது.

ஆனாலும், இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் தொடர்பு அமைச்சருமான அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல நாடாளுமன்றமே முதன்மையானது எனவும், இது தொடர்பில் நாடாளுமன்றம் சார்பாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தின் கருத்தை எதிர்வரும் எட்டாம் திகதி வெளியிடுவார் எனவும் தெரிவித்திருக்கிறார். இதேவேளை, கடந்த வாரம் தெரிவுக்குழு விசாரணை பற்றி கருத்துத் தெரிவித்த அமைச்சரொருவர் பிரதம நீதியரசர் விவகாரம் பிளாஸ்ரிக் கூடை போன்றது எனவும், அவரே கௌரவமாக பதவியை விட்டு விலகாவிடின் அவரை வலுக்கட்டாயமாக வீட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அது தொடர்பிலான அதிகாரம் தமது அரசுக்கு இருப்பதாகவும் அவர் வெளிப்படையாக தெரிவித்து இருக்கிறார்.

ஆனாலும் அரசால் தற்போது இல்லை என கூறப்படும் தெரிவுக்குழு தனது அதிகாரத்திற்கு அப்பாற்பட்டு செயற்பட்டதான குற்றச்சாட்டுகள் தற்போதும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதை உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பன நீதியரசரின் வழக்கு விசாரணையின் போது அடிக்கடி சுட்டிக்காட்டி வருகின்றது. இலங்கையின் அரசயிலமைப்பின் 122 உறுப்புரையின்படி அரசியல் அமைப்பிற்கு பொருள்விளக்கம் கொடுக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றினைத் தவிர வேறு எந்த அமைப்புக்கும் கிடையாது, என தெளிவாக வரையறுக்கிறது. ஆனால், இந்த அதிகாரத்தை சட்ட அதிகாரம் அற்ற தெரிவுக்குழு பயன்படுத்தியதாகவும் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. குறுக்கு விசாரணை செய்யும் அதிகாரமும், அவரிடம் கேள்வி கேட்கும் அதிகாரமும் அங்கீகரிக்கப்பட்ட நீதிமன்றினைத் தவிர வேறு எந்த அமைப்புக்கும் கிடையாது எனவும், ஆனால், பிரதம நீதியரசரை குறுக்கு விசாரணை செய்ததன் மூலம் தெரிவுக்குழு தனது அதிகார வரம்புகளை மீறி செயலாற்றியதாகவும் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவற்றையும் உயர்நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றமும் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவின் வழக்கு விசாரணையின் போது தெளிவாக வரையறுத்திருக்கிறது.

இதேவேளை தெரிவுக்குழு தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவுக்குழுவிற்கு அழைப்பாணை அனுப்பியிருந்தது. ஆனால், அந்த அழைப்பாணையை தெரிவுக்குழுவும், நாடாளுமன்றமும் சடுதியாக நிராகரித்து கடந்த மூன்றாம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றின் வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்காது, புறக்கணிப்பு செய்துகொண்டது. இதனாலேயே தெரிவுக்குழுவும் நாடாளுமன்றமும் நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காது தான்தோன்றித்தனமாக செயற்பட்டதான குற்றச்சாட்டுகள் பல்வேறு தரப்புகளால் முன்வைக்கப்பட்ட வண்ணமிருக்கின்றன.

இதேவேளை நீதிமன்றத் தீர்ப்பை அரசும், நாடாளுமன்றமும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் உதாசீனம் செய்து வருவது குறித்து பல்வேறு தரப்புகள் கண்டனத்தொனியிலான அச்சங்களை வெளியிட்டு வருகின்றன. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றம் சட்டத்தை மதித்து செயற்படவில்லையாயின் மக்களும் சட்டத்தை மதிக்காத சூழ்நிலை ஏற்படும் எனவும், இதனால் நாட்டின் சட்டம் ஒழுங்கு சீர்குலைவதன் ஊடாக அராஜகங்கள் தலைதூக்கும் எனவும், எனவே நீதிமன்றத் தீர்ப்பை நாடாளுமன்றம் மதித்து செயற்படவேண்டும் எனவும் வலியுறுத்தியிருக்கிறார். இதேவேளை இது தொடர்பாக அறிக்கை விடுத்திருக்கும் லண்டன் சட்டத்தரணிகள் குழு எந்தவித கட்டுப்பாடும் அற்ற நீதித்துறை சுயாதீனமாக செயற்பட வேண்டும். எனவும் நேர்மையான நிர்வாகத்திற்கும் நீதிபரிபாலனத்திற்கும் முறையான உத்தரவாதம் தேவையெனவும் வலியுறுத்தியிருக்கிறது. இதேவேளை நீதித்துறையை மதிக்காத போக்கை பல்வேறு நாடுகளும் கடுமையாக சாடியிருக்கின்றன.

ஆனால், தம்மை குற்றச்சாட்டிற்குள் உள்ளாக்கும் அதிகாரமோ, தமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யும் அதிகாரமோ யாருக்கும் கிடையாது என அரசு கர்ச்சித்து வருகின்றது. இதேவேளை பிரதம நீதியரசரின் வழக்கு விசாரணையின் தீர்ப்பை அரசு ஏற்காத போக்கைக் கண்டித்து இன்னும் சில மாதங்களில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை சில நாடுகள் புறக்கணிக்கப்போவதாகவும் இலங்கை அரசு மீது அழுத்தங்களை பிரயோகிக்கப் போவதாகவும் தகவல்கள் வெளியாகி வருகின்றன. ஆனால், இந்நிலையை எதிர்கொள்ள தமது அரசு திடசங்கற்பம் பூண்டிருப்பதாக, அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா தெரிவித்திருக்கிறார். பொதுநலவாய மாநாட்டை பகடைக்காயாக்கி தமது உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிட அனுமதிக்க முடியாது எனவும் எமது நாட்டு சட்டத்திற்கு அமையவே பிரதம நீதியரசர் மீது குற்றப்பிரேரணை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதம நீதியரசர் விடயத்தை காரணங்காட்டி எமது இறைமையில் செல்வாக்குச் செலுத்த எந்த நாட்டையும் அனுமதிக்கப்போவதில்லை எனவும், வெள்ளைக்காரருக்கு தலைசாய்க்க எமது ஜனாதிபதி தயாராகவில்லை எனவும், அமைச்சர் முழங்கித் தள்ளியிருக்கிறார்.

இதேவேளை அரசின் நீதியைப் புறக்கணிக்கும் போக்கைக் கண்டித்து உலகின் முன்னணி மனித உரிமை அமைப்புகள், சர்வதேச நீதித்துறை சார்பான அமைப்புகள், சர்வதேச நாடுகளும் அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருக்கின்றன. ஆனால் 'கெடுகுடி சொற்கேளாது' என்பதைப்போல அரசு தனது தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் மூலம் நீதித்துறைமீது செல்வாக்கு செலுத்தி வருகின்றது. நீதித்துறை, பாராளுமன்றம், நிறைவேற்று அதிகாரம் என்பவற்றிற்கிடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை என அரசு அரைத்த மாவையே அரைத்தபோதும் திடீரென அதில் பல்டி அடித்து சில பிரச்சினைகள் இருந்தன, ஆனால் அது தீர்க்கப்பட்டுவிட்டன என தன்னை நியாயப்படுத்திக்கொள்ள முயல்கின்றது. அத்துடன் பிரதம நீதியரசரின் ரீட்மனு பற்றிய வழக்கு விசாரணையின் போது நீதிமன்றின் உயரிய கௌரவத்தை மதித்து மன்றில் முன்னிலையான நாடாளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத், தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க முற்படுவதன் மூலம் நீதித்துறையை அரசு எடுப்பார் கைப்பிள்ளை போல பயன்படுத்தி வருவது தெளிவாகின்றது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரதி சபாநாயக்கர் சந்திம வீரக்கொடி நாடாளுமன்ற நிலையியல் கட்டளை 17 ஆவது பிரிவின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களென்ற வகையில் எங்காவது சாட்சியாளராக முன்னிலையாக வேண்டிய தேவையிருப்பின் அது தொடர்பில் நாடாளுன்றத்தின் விசேட அனுமதியை பெறவேண்டும் என்றும், ஆனால் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கட்டளையை மீறி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்னிலையாகி உள்ளது தொடர்பில் தமக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் குறித்த தகவல் உறுதிப்படுத்தப்படின் குறித்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் சிறப்புரிமையை மீறியதன் காரணமாக நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணித்தரமாக தெரிவித்திருக்கிறார்.

எனவே நீதிமன்ற தீர்ப்பின் பின்னரும் அரசும், நாடாளுமன்றமும் தமது தான்தோன்றித்தனமான அதிகாரத் திமிர்த்தனமான போக்கை கைவிடுவதாக தெரியவில்லை. நிறைவேற்று அதிகாரமும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் இருக்கிறது என்ற துணிவில் தாண்டவம் ஆடுகிறது அரசு. எனவே மக்களின் பிரதிநிதிகளாக தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் நாடாளுமன்றமும், அமைச்சரவையும் முதலில் நீதிமன்ற தீர்ப்பை மதித்து அதற்கு தலைசாய்க்க வேண்டும். இல்லாவிடில் இலங்கை உள்விவகாரங்களில் மூன்றாம் தரப்பு தலையிடுவதற்குரிய சூழல் தவிர்க்கமுடியாது ஏற்பட்டுவிடும்.

■ ஹரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனிடம் வேண்டுவதெல்லாம்



**வெளிநாடுகளில் அரசாங்கம் தொடர்ந்தும் கடன்களைப் பெற்றுக்கொண்டு வருகின்றது. நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு சிசுவும் லட்சக்கணக்கான ரூபாய்களுக்குக் கடனாளியாகவே பிறக்கின்றது. இந்நிலையிலும் அரச களியாட்டங்கள், வெளிநாட்டுப் பயணங்கள், கண்காட்சிகள், வரவேற்பு விழாக்கள், காரோட்டப் போட்டிகள் எனப் பல மில்லியன்கள் செலவில் நடைபெறும் ஆடம்பரச் செலவுகளுக்குக் குறைவேயில்லை.**

புதுவருடம் தன்பாட்டில் காலச்சுழற்சியுடன் வந்து போகின்றது. ஆனால், தமிழ் மக்களின் வாழ்வினில் புத்தொளி பிறப்பதாகத் தோன்றவில்லை. மறுமலர்ச்சியோ அன்றி மனமகிழ்வோ அளிக்கக்கூடிய விதத்திலான மாற்றங்கள் எவையும் நம் நாட்டில் உதிப்பதற்கான அறிகுறிகளும் தென்படுவதாயில்லை.

என்ன நடக்குமோ? ஏது விளையுமோ? என்ற ஒருவித ஏக்கமும் அச்சமும் கலந்த உணர்வுகளுடனேயே இப்புதுவருடமும் பிறந்துள்ளது.

சுதந்திரமடைந்த காலந்தொட்டு இன்று வரையிலும் இந்நாட்டில் வாழும் தமிழர்கள் இடையிடையே காலத்திற்குக் காலம் இடம்பெற்ற பேரினவாதிகளின் ஒடுக்குமுறைச் சம்பவங்களினாலும், இன ஒழிப்பு நடவடிக்கைகளினாலும் உயிர்களையும், உடமைகளையும் படிப்படியாகப் பறிகொடுத்த நிலையில் கிடந்து அவதிப்படுகின்றனர்.

அதிலும் பிரதானமாக, கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நாட்டினில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரினால் உற்றார், உறவினர்களையும், தம் குடும்பத்தவர்களையும் உயிர்ப்பலி கொடுத்தும், வாழ்நாளில் உழைத்துச் சம்பாதித்த செல்வமனைத்தையும் இழந்தும், காணாமற்போய்விட்ட தமது இனிய உறவுகளைத் தேடியலைந்த வண்ணமும், இன்னமும் கண்ணீரும் கம்பலையுமாக எதிர்காலம் குறித்த அவநம்பிக்கையுடன் செய்வதறியாத நிலையில் பல்லாயிரக்கணக்கான தமிழ் நெஞ்சங்கள் கிடந்து தவிக்கும் சமயத்தில் இப் புதுவருடம் பிறந்துள்ளது.

பயங்கரவாதத்திற்கெதிரான போர் முடிவடைந்துவிட்டதாக நாட்டில் தலைவரால் 2009 பங்குனியில் பகிரங்கமாக உலகறியும் வண்ணம் பறைசாற்றப்பட்ட போதிலும் அத்துடன் அன்றிலிருந்து மூன்றரை வருடங்களுக்கு மேலாகக் கழிந்துவிட்ட நிலையிலும்கூட இன்னமும் நாட்டினில் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், பாலியல் வன்முறைகள், லஞ்ச ஊழல்கள் என நாட்டு மக்களை வாட்டி வதைக்கும் அராஜகச் செயல்கள் விடுதலைப்புலிகளின் காலத்தில் கூட இல்லாத அளவில் நிகழ்ந்தவண்ணமுள்ளன.

இவற்றால் பெருமளவில் பாதிப்படைவது வறுமைக் கோட்டின் கீழுள்ள ஏழை மக்களேயாகும். செல்வந்தர்களும், மேனிலையிலுள்ளவர்களும், அதிகாரத்திலுள்ளவர்களும் இதனால் அவ்வளவாகப் பாதிப்படைவதேயில்லை.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தாற்போல, கடந்தகால இழப்புகளை மறந்து இனியாவது விடிவுகாலம் வராதா என ஏங்கித் தவிக்கும் மக்களுக்கு மேலும் தொடர்ந்து கெடுதல்களை விளைவிப்பவையாகவே இவை இருக்கின்றன.

நாட்டினில் சட்டமும், ஒழுங்கும் நிலைகுலைந்து தள்ளாடும் நிலையில் லஞ்சமும், ஊழலும், அதிகார துஷ்பிரயோகமும் தலைவிரித்தாடுகின்றன.

அதிகாரத்திலிருப்பவர்களும் அவர்களின் அடிவருடிகளும் இவை குறித்துச் சற்றும் சிந்திப்பதில்லை. அவர்கள் சிந்திப்பதெல்லாம் தத்தமது வாழ்வினைச் செம்மைப்படுத்துவதும் மற்றும் முடிந்தளவில் அதிகாரங்களைக் கையகப்படுத்துவதுமேயாகும். அதுவே அவர்களின் குறிக்கோளாக இருக்கின்றது.

பொது நலத்தை இலட்சியமாகக் கைக்கொள்ள வேண்டியவர்கள் இன்றோ சுயநலத்தின் பிறப்பிடங்களாகிவிட்டனர். இதுவே இன்று நம் நாட்டினைப் பீடித்திருக்கும் பெரும் சாபக்கேடு.

பேரினவாதப் போக்கு விஸ்வரூபம் எடுத்தாடுகின்றது. முஸ்லிம் பள்ளிவாசல்கள் தொடக்கம் கிறிஸ்தவ ஆலயங்கள் வரையில் உட்புகுந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் அளவிற்கும், நிறுவப்பட்ட தமிழ் பெரியார்களின் சிலைகளை அடித்து நொறுக்குமளவிற்கும் பௌத்தமதத் துறவிகளால், காடையர்கள் வழிநடத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட அத்துமீறிய வன்செயல்கள் இடம்பெறுகின்றன.

ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் இதனைத் தட்டிக் கேட்பதில்லை. மாறாக ஏதாவது சாக்குப் போக்குக் கூறிச் சமாளிக்கவே முயலுகின்றனர். பூனை கண்ணை மூடிக்கொண்டால், உலகம் இருண்டுவிடுமா என்ன?

போரின்போது பாதுகாப்புப் படையிலிருந்து 60,000 ற்கும் மேலான படையினர், தப்பியோடியதாகக் கூறப்பட்டது. பின்பு கடந்த வருடத்தில் அவ்வாறாகத் தப்பியோடியவர்களில் ஏறத்தாழ 40000 பேர்கள் அளவில் கைது செய்யப்பட்டும், தாமாகச் சரணடைந்ததாகவும் இராணுவத் தரப்பால் தெரிவிக்கப்பட்டது. இங்ஙனம் தப்பியோடிய 60000 பேர்களில் எத்தனைபேர் தமது சுடுகலன்களுடன் ஓடிச்சென்றனர் என்பது தெரியவில்லை. தப்பியோடியவர்களில் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் சரணடைந்தவர்களின் எண்ணிக்கை போக மீதியானவர்களின் கதி என்னவாயிற்று? ஒரு சிலர் போலிக்கடவுச் சீட்டுகளைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கலாமெனக் கருதினாலும் கூட எஞ்சியவர்கள்தான் இப்பொழுது பாதாள உலகக் குழுக்களிலும் அரசியல்வாதிகளின் பின்னணியிலும் இயங்கி வருகின்றனர் போலும் காணப்படுகின்றது. ஏனெனில் நாட்டினில் இடம்பெறும், இடம்பெற்ற பல கொலை, கொள்ளைச் சம்பவங்களில் கைது செய்யப்படும் அத்துடன் முன்பு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் தப்பியோடிய மற்றும் பதவி விலகிய இராணுவத்தினரே அதிகளவில் இருப்பது இத்தகைய சந்தேகத்திற்கு வலுவூட்டுவதாக இருக்கின்றது.

இவை ஒருபுறமிருக்க, கடந்த காலப் போரினால் வடக்குக் கிழக்கில் வீடுவாசல்களையும், உடமைகளையும், இழந்தவர்களுக்கும், கண்பார்வை தொடக்கம் உடல் உறுப்புக்களை இழந்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களுக்கும் அவர்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளைக் கூட அரசாங்கம் கொடுப்பதற்கு முன்வருவதாயில்லை. சர்வதேச சமூகத்திற்கு ஓர் கண்துடைப்பாக அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிலருக்கே அதுவும் குறைந்த அளவிலான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளையே அரசு வழங்கி வந்துள்ளது.

போர் முடிவுற்று மூன்றரை வருடங்களுக்கு மேலாகிவிட்ட நிலையிலும் இன்னமும் கண்ணிவெடி அகற்றப்படவில்லையென்ற மாயையினை ஏற்படுத்தி எமது பிரதேசங்களை இராணுவ மயப்படுத்தி வருகின்றது.

இப்பொழுது அரசில் 40 இற்கும் மேற்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த அமைச்சர்களெல்லாம் பொம்மைகளாகவே உள்ளனர். எனவே அமைச்சரவை மாற்றம் என்று ஒன்று வரும் போது இந்த எல்லா அமைச்சர்களையும் நீக்கிவிட்டு பசில்ராஜபக்ஷவை மட்டும் ஒரு அமைச்சராக நியமித்தால் நாட்டின் பெருமளவு நிதியை மிச்சப்படுத்த முடியும்.

அன்றாடம் மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்குரிய உணவுப் பொருட்கள் மற்றும் சமையல் எரிவாயு போன்றவற்றின் விலைகள் இரவோடிரவாக அதிகரித்துச் செல்கின்றன. ஓர் சாதாரணக் குடிமகன், குடும்பச் சுமையைத் தாங்கமுடியாது தவிக்கின்றான்.

இதேவேளையில் வெளிநாடுகளில் அரசாங்கம் தொடர்ந்தும் கடன்களைப் பெற்றுக்கொண்டு வருகின்றது. நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு சிசுவும் லட்சக்கணக்கான ரூபாய்களுக்குக் கடனாளியாகவே பிறக்கின்றது. இந்நிலையிலும் அரச களியாட்டங்கள், வெளிநாட்டுப் பயணங்கள், கண்காட்சிகள், வரவேற்பு விழாக்கள், காரோட்டப் போட்டிகள் எனப் பல மில்லியன்கள் செலவில் நடைபெறும் ஆடம்பரச் செலவுகளுக்குக் குறைவேயில்லை.

அரச திணைக்களங்களில் மற்றும் கூட்டுத்தாபனங்களில் இடம்பெறும் ஊழல்கள், நிதி மோசடிகள் நாட்டின் நிதிநிலைமையினையும், பொருளாதாரத்தையும் படுபாதாளத்தில் தள்ளியுள்ளன. இச் சுமைகளை, விலைவாசிகளை அதிகரிப்பதன் மூலமும், வரியினை அதிகரிப்பதன் மூலமும் நாட்டு மக்களின் மீது திணித்துவிட அரசு முயலுகின்றது.

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு எதிரான ஆணைக்குழுவின் தலைவர் ஜெகத் பாலபட்ட பத்தி இது பற்றி அண்மையில் தெரிவித்த பின்வரும் கருத்துக்களை கவனத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

அதாவது முறையற்ற வகையில் சொத்துச் சேர்த்தது தொடர்பில் ஆளுங்கட்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் 30 பேர்களுக்கெதிராகவும், சுமார் 60 பிரதேச சபை உறுப்பினர்களுக்கெதிராகவும் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இதைவிட மேலும் பலர் முறைப்பாடுகளைச் செய்துள்ள போதிலும் அச்சம் காரணமாகத் தமது பெயர்களைக் குறிப்பிடாதமையினால் ஆணைக்குழுவினால் விசாரணைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் நலன் குறித்து எவருமே சிந்திப்பதாயில்லை. தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளையே எதிர்பார்க்கின்றனர். அவர்கள் இந்நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகள் அல்லர். பெரும்பான்மை இன மக்களைப் போன்று அவர்களும் அனைத்து உரிமைகளையும் அனுபவிக்கவே விரும்புகின்றனர். வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் அரசிடமிருந்தோ, ஏனைய நிறுவனங்களிடமிருந்தோ அல்லது உலக நாடுகளிடமிருந்தோ சலுகைகள் எதனையும் எதிர்பார்க்கவில்லை. அவர்களுக்குச் சொந்தமான வீட்டுக்காணிகள், தோட்டக்காணிகள் மற்றும் வயற்காணிகள் இருந்தும் பல்லாயிரக்கணக்கானவர்கள் அவர்களின் சொந்த இடங்களில் குடியேறித் தமது வாழ்வாதாரத்தைச் சீர்செய்வதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் கடந்த ஆண்டும் சோதனைகள் நிறைந்த ஆண்டாகவே கழிந்துள்ளது. பல தசாப்தங்களாக நீடித்த போர் ஓய்ந்தபோதிலும் அதற்குப் பிந்தியதான அமைதியை அவர்களால் அனுபவிக்க முடியவில்லை. பல்வேறு வகையிலும் இன்னல்களையே எதிர்கொண்டனர். பொருளாதார ரீதியாகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாகச் சமூக விரோத சக்திகளின் செயற்பாடுகளால் அச்ச நிலைக்குள்ளாகியுள்ளனர்.

இந்த மக்களின் அவலங்களைப் போக்கவேண்டியது அரசின் தார்மீகக் கடமையாகும். தமிழ் மக்களும் இந்நாட்டின் குடிமக்களே என்ற உணர்வு ஆளுந்தரப்பினரிடம் உருவாகவேண்டும். அதன்பொருட்டு பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியிலும் அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது போல இதேவித உணர்வு பல்கிப் பரவுதல் வேண்டும்.

புத்தரின் அகிம்சையும், யேசுநாதரின் சாந்தமும், நபிகள் நாயகத்தின் பொறுத்தருளும் பண்பும், இந்து தெய்வங்களின் அருளும் ஆளுந்தரப்பினரின் உள்ளங்களை வளப்படுத்தி, நாட்டு மக்களுக்கு அமைதியையும், சுபீட்சத்தையும் ஏற்படுத்தும் வகையில் ஆளும்தரப்பினர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் ஆற அமர யோசித்து எடுக்கும் நன்முடிவுகளிலேயே நாட்டினதும், மக்களதும் எதிர்காலம் தங்கியுள்ளது. எமது எதிர்பார்ப்புகள் யாவும், இவ்வாண்டில் கனவாகிவிட்டது. நனவாக மாறுவதற்கு அனைவருமாக இறைவனை வேண்டுதல் செய்வோம்.

**நீலன்**

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இரா.புத்திரசிகாமணி

# கூட்டு ஒப்பந்தங்கள் தூசுதட்டப்படவேண்டும்

மலையக தொழிற் சங்கங்கள் தொடர்ந்தும் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்காமல் தம்மை நம்பி இருக்கும் தொழிலாளர்களுக்கு உள்ளார்ந்த ரீதியாக சேவை செய்ய முன்வரவேண்டும். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். ஒவ்வொரு வருடமும் இந்த தோட்டத் தொழிலாளர்கள் இந்த நம்பிக்கையுடன் தான் காலம் கழிக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு கடைசி வரையில் ஏமாற்றம்தான் மிஞ்சுகின்றது.

நமது தலைவர்களும் உதயமாகும் புத்தாண்டைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒளிமயமானதாக அமையவேண்டும். சகல வளங்களும் பெற்று சுபீட்சமடைய வேண்டும். நாளைய பொழுது தமதாக அமையவேண்டும் என்று தமது வாழ்த்துச் செய்திகளை ஊடகங்களுக்கு அனுப்பி விட்டு ஓய்ந்து விடுகின்றனர். தேர்தல் அலுவலகத்தில் வாக்காளர்களின் பெயர்கள் அனைத்தும் இருப்பதுபோல் சகல தொழிற்சங்க அலுவலகங்களிலும் தமக்கு சந்தா வழங்கி வாழவைக்கும் தொழிலாளர்களின் பெயர்களும் இருக்கத்தானே செய்யும். நமது ஜனாதிபதி கூட தொலைபேசித் தகவல் (SMS) மூலம் நாட்டு மக்களுக்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்பும் ஏற்பாடுகளை செய்துள்ளார்.

ஆனால், மாதாமாதம் கோடி கோடியாக சந்தாவை சுருட்டும் தொழிற்சங்கத் தலைவர்கள் எவராவது சந்தா செலுத்தும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் ஒரு வாழ்த்து அட்டையையாவது அனுப்பி இருப்பார்களா?

இந்தத் தலைவர்கள் அப்படி ஒரு வாழ்த்து அட்டையை அனுப்பி இருந்தால் அந்த அப்பாவித் தொழிலாளர்கள் இது நமது தலைவரின் வாழ்த்து என ஒரு பொக்கிசம் போல் பாதுகாத்துப் பெருமைப்படுவார்கள். தேர்தல் காலங்களிலும் ஏனைய விழாக்களுக்கும் கோடி கோடியாக செலவிட்டு போஸ்டர்களை அச்சிட்டு காசைக் கரைக்கும் எங்கள் தலைவர்கள் ஒரு வாழ்த்து அட்டையை அனுப்ப மறந்து விடுகிறார்களே என ஒரு மூத்த தொழிற்சங்கத் தலைவர் வேதனைப்படுகின்றார். அவருடைய வேதனையும் நியாயமானதுதான்.

இப்பொழுது அதைவிட முக்கியமான விடயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அதாவது தொழில் தரகர்களுக்கும் (முதலாளிமாருக்கும்) தொழில் பெறுநர்களுக்குக்கும், ஊழியர்களுக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தங்கள். தொழிலாளர்களின் தொழில் உத்தரவாதம், தொழில் பாதுகாப்பு, சம்பளம், நலன்புரி சேவைகள், வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் எனப் பல விடயங்களை உள்ளடக்கியே ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் ஸ்தாபகத் தலைவர் காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமான் தான் இந்த கூட்டு ஒப்பந்த நடைமுறைக்குப் பிள்ளையார் சுழிபோட்டவர்.

ஆரம்பத்தில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் இவை அனைத்தும் உள்ளடக்கப்பட்டிருந்தன

ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் தான் ஆர்வம் காட்டப்படவில்லை. இந்த ஒப்பந்தத்தாலும் இருதரப்பினருக்கும் இடையிலான தலைவர்கள் இணக்கப்பாட்டின் படி தோட்டத் தொழிலாளர்களின் படித்த பிள்ளைகளுக்கு தோட்டத்துறையில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்க வேண்டும்.

இதன் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில் பணியாற்றுவதற்கான தாதியர் நியமனம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போதும் கூட தோட்டப் புறங்களில் இருந்து ஒருபகுதியினரும் கிராமப்புற சிங்கள யுவதிகள் பலரும் குழந்தை பராமரிப்பு தாதியர்களாக நியமிக்கப்பட்டனர். பச்சிளம் குழந்தைகளைப் பராமரிக்க தமிழ் மொழியில் பேசவும், தமிழ் ஒரு வார்த்தைகூட தெரியாத சிங்கள யுவதிகள் தமிழ் சிறார்களை எப்படிப் பராமரிப்பார்கள் என்ற பிரச்சினை அப்போதே ஆரம்பமானது. அன்றே இந்த தொழிற்சங்கத் தலைவர்கள் சற்று அழுத்தம் கொடுத்திருந்தால் தோட்டப்புறங்களுக்குள் சிங்களவர்களின் ஆதிக்கம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

ஆனால் இப்பொழுது சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், தோட்ட ஆஸ்பத்திரிகள், தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் தோட்ட அலுவலகங்களிலும் பெரும்பான்மை இனத்தவர்களின் ஆதிக்கம் தலைதூக்கி உள்ளது.

சிங்களம் மட்டுமே தெரிந்த இளைஞர், யுவதிகளினால் தொழிலாளர்கள் பல்வேறுவிதமான சிரமங்களுக்கு முகம்கொடுக்கவேண்டியுள்ளது.

தேசிய அடையாள அட்டை, பிறப்பு இறப்பு பதிவுகள், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன தோட்ட அதிகாரிகளின் மூலமாகவே செயல்படுத்தப்படுகின்றன.

தமிழ் பெயர்களை சரியாக எழுதத் தெரியாத பெரும்பான்மை இனத்தவர்கள் பிழை பிழையாக எழுதுகின்றனர். உதாரணமாக 'மூக்கையா' என்ற பெயரை 'மூக்காயி' என்று எழுதி உள்ளனர். தங்கவேலு என்பவரின் பெயரை 'தங்கநூல்' என்று தப்புத்தப்பாக எழுதி உள்ளனர். மொழிபுரியாத மக்களினால் ஏற்படும் இந்தத் தவறுகளால் தொழிலாளர்கள் தமது ஊழியர் சேமலாப நிதியம், நம்பிக்கை நிதியம் என்பனவற்றை மீளப்பெறும்போது பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும், வேலை வாலாகவும் மாற்றும் வல்லமை படைத்தவர்கள் தோட்டக் காரியாலயங்களில் எழுதுவினைஞர்களாக இருக்கின்றனர். இவ்வாறான பெயர் மாற்றங்களினால் தொழிலாளர்கள் தமது நிதியத்தின் பல கோடி ரூபாய்களை மீளப்பெற முடியாமலே செத்தும் மடிந்தும் போயுள்ளனர்.

இப்படியான பாதிப்புகள் தென்பகுதியிலும் ஊவா பிரதேசத்திலும் பெருமளவு காணப்படுகின்றன.

இதற்கெல்லாம் மலையக தொழிற்சங்கத் தலைவர்களின் பொறுப்பற்ற தன்மையே அடிப்படைக் காரணமாகின்றது.

மலையகத்தில் இப்பொழுது மூன்று மொழிகளையும் கற்ற இளைஞர் யுவதிகள் பெருமளவு காணப்படுகின்றனர். தமது படிப்புக்கு ஏற்ற தொழில்வாய்ப்புகள் இன்றி கஷ்டப்படுகின்றனர்.

நீங்கள் செய்து கொண்டுள்ள கூட்டு ஒப்பந்தங்களினதும் தோட்டத்துறையில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு தொழிலாளர்களின் பிள்ளைகள் நியமிக்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்தும் உண்டு. எனவே இந்தக் கூட்டு ஒப்பந்தங்கள் தூசி தட்டப்பட வேண்டும். தோட்டத் துரைமார் தொழிற்சங்கத் தலைவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக காகித ஒப்பத்தங்களை செய்துவிடுகின்றனர். ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதில்லை.

தலைவர்களும் சம்பள உயர்வுக்காக மட்டும் தானே கூட்டு ஒப்பந்தம். அது ஒன்றுபோதும் என்று அசட்டையாக இருந்து விடுகின்றனர். இதனால் ஏற்படும் பின்விளைவுகளைப் பற்றி சிந்திப்பதே இல்லை.

எனவே கூட்டு ஒப்பந்தங்களை செய்யும் போது தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களுக்கான நலன்புரித் திட்டங்களையும் உள்ளடக்கவேண்டும். ஆரம்பகாலத்தில் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்கவேண்டும்.

ஒப்பந்தங்களை செய்து விட்டால் மட்டும் போதாது அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் அதன் நன்மையைப் பெறமுடியும்.

***

**தமிழ் பெயர்களை சரியாக எழுதத் தெரியாத பெரும்பான்மை இனத்தவர்கள் பிழை பிழையாக எழுதுகின்றனர். உதாரணமாக 'மூக்கையா' என்ற பெயரை 'மூக்காயி' என்று எழுதி உள்ளனர். தங்கவேலு என்பவரின் பெயரை 'தங்கநூல்' என்று தப்புத்தப்பாக எழுதி உள்ளனர். மொழிபுரியாத மக்களினால் ஏற்படும் இந்தத் தவறுகளால் தொழிலாளர்கள் தமது ஊழியர் சேமலாப நிதியம், நம்பிக்கை நிதியம் என்பனவற்றை மீளப்பெறும்போது பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோக்சபா தேர்தலில் தனித்தே போட்டி!

# ஜெயலலிதா திட்டவட்டம்




எதிர்வரும் 2014 லோக்சபா தேர்தலில் ஆளும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தமிழகம், புதுச்சேரியை அடக்கிய 40 தொகுதிகளிலும் தனித்தே போட்டியிடும் என கட்சித் தலைவியும் முதலமைச்சருமான ஜெயலலிதா மீண்டும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். அவருடன் கூட்டணி வைக்க இஷ்டம் கொண்டுள்ள இரு பிரதான தேசியக் கட்சிகளான காங்கிரசும், பாரதிய ஜனதாக் கட்சியும் இதைக்கேட்டுக் கலக்கமடைந்திருக்கும் என்பது நிச்சயம். ஜெயலலிதாவின் நேரடி எதிரியான தி.மு.க தலைவர் கருணாநிதிக்கோ இது மறைமுகமாக மகிழ்வை தரும் விடயமாகும். அ.தி.மு.கவுடன் முடியாவிட்டால் தி.மு.க.வுடனாவது கூட்டணி சேரலாமே, என இரு தேசிய கட்சிகளும் முடிவெடுக்க இதனால் நிப்பந்திக்கப்படும் என்பதுடன் அதனால் பேரம் பேசலில் கூடிய இடங்களை தி.மு.கவுக்கு ஒதுக்க கோரிக்கை விடலாம்.

எனினும் தேர்தலில் கூட்டணி இல்லை; தனித்துப் போட்டி என்ற முழக்கம் பி.ஜே.பி, காங்கிரஸ் இரண்டுக்கும் தான் பொருந்தும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி என்பன அ.தி.மு.கவுடன் அணிசேர விரும்பக்கூடும் என்று கூறப்படுகிறது. குறிப்பாக முன்பு அ.தி.மு.க.வுடன் கூட்டணி இல்லை எனக் கூறிவந்த பாட்டாளி மக்கள் கட்சி தனது பரம வைரியான விஜய்காந்தின் கட்சியை அ.தி.மு.க மெல்ல மெல்ல கரைத்துக் கொண்டிருப்பதால் புளகாங்கிதம் அடைந்துள்ளார்.

இதனால் ஜெயலலிதாவுடன் இனி கூட்டு கிடையாது என முழங்கி வந்த ராமதாஸ் தே.மு.தி.கவை ஒழித்துக் கட்டியதற்கு நன்றி கூறுமுகமாக தனது பழைய முடிவை மாற்றி அ.தி.மு.க அணியில் மீண்டும் இணையக் கூடும். வைகோவின் கட்சி இப்போதைக்கு அ.தி.மு.க அணியில் சேர வாய்ப்பில்லை என்றாலும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலர் தா. பாண்டியன் ஜெயலலிதாவின் பரம விசுவாசி என்பதால் கடைசிநேரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அ.தி.மு.க அணியில் இடம்பெற நிறையவே வாய்ப்புள்ளது. இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் நெடுங்காலமாக ஒருமித்த கொள்கையுடன் இயங்கி வந்தாலும் சமீபகாலமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளராக தா. பாண்டியன் பதவி ஏற்றதில் இருந்து இரு கட்சிகளும் இரு துருவங்களாகவே செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நீண்ட நெடுங்காலமாகவே. திராவிட முன்னேற்றக் கழகத்துடன் நெருக்கமான் நட்பு பாராட்டி வந்த கட்சியாகும். இடையில் வாஜ்பாய் அரசிலும், மன்மோகன் அரசிலும் தி.மு.க தீவிரமாக பங்கேற்றதால் மாக்ஸிஸ்ட் தி.மு.க உறவு சற்றே கசந்து போயிருந்தது. இப்போது அது மீண்டும் துளிர்விட தா.பாண்டியனின் ஜெயலலிதா விசுவாசம் வழிசமைத்துள்ளது எனலாம். தா.பாண்டியன் நாளாந்தம் ஜெயலலிதாவின் படத்துக்கு கற்பூர ஆராதனை செய்து மதக் கடமைகளை தொடங்குவார் என அவரது எதிரிகளும் முக்கியமாக தி.மு.கவினரும் நையாண்டி செய்வதும் குறிப்பிடத்தக்கது.

எனவே இரு பெரிய தேசிய கட்சிகளுடன் சேர்வதை விட உதிரியான பா.ம.க இந்திய கம்யூனிஸ்ட் முதலிய கட்சிகளுடன் ஒரு சிறு கூட்டணி அமைத்து அவர்களுக்கு ஓரிரு இடங்களை வழங்க ஜெயலலிதா இணங்கக்கூடும் என்றும் ஊகங்கள் அடிபடுகின்றன.

இது இவ்வாறிருக்க தி.மு.கவில் தனது வாரிசு யார் என்பதைக் கடந்த வாரம் கலைஞர் நாசூக்காக கோடி காட்டியிருப்பதும் அதற்கு அழகிரி நறுக்கென்று பதிலடி கொடுத்திருப்பதும் பரபரப்பாக கட்சி வட்டாரங்களில் பேசப்படுகிறது. "நான் உயிரோடு உள்ளவரை தி.மு.கவைக் கட்டிக்காப்பேன். அதன் பிறகு ஸ்டாலின் இருக்கவே இருக்கிறார்" என கலைஞர் கட்சிக்குள் ஒவ்வொரு பிரிவினரும் தத்தமக்கு வசதியான வியாக்கியானம் செய்து வருகின்றனர். நான் உள்ளவரை நானே தலைமை வகிப்பேன் என்ற அர்த்தம் இதில் பொதிந்து இருப்பதால் ஸ்டாலின் வாரிசு இல்லை என்றே கூறியதாக பொருள்படும் என அழகிரி தரப்பு கூறுகிறது. இது போதாதென்று வாரிசை அறிவிப்பதற்கு தி.மு.க ஒன்றும் சங்கர மடம் அல்ல என்றும் அழகிரி தாக்கியுள்ளார். முன்பு 1983 இல் இந்திராகாந்தியுடன் முறுகல் நிலையில் இருந்தபோது இந்திராவின் வாரிசு மகன் ராஜீவ் என பேச்சுகள் அடிபட்டபோது இந்திரா தன் மகனை வாரிசாக அறிவிக்க இந்திய அரசாங்கம் என்ன சங்கரமடமா என்று அப்போது கிண்டலாக கேட்டது நீண்ட காலமாக சிலாகித்து பேசப்பட்ட விடயமாகும். அதை மனதில் வைத்து தந்தை சொன்னதையே கொண்டு அழகிரி ஸ்டாலினுக்கு எதிராக தந்தையாரை திருப்பித் தாக்கியுள்ளார் எனலாம். அத்துடன் மற்றொரு முக்கிய விடயமாக விஜய்காந் கட்சியுடன் லோக்சபா தேர்தலில் கூட்டணி அமைக்க முடியாது. நாலு வழக்கு போட்டவுடன் நடுங்குபவர் தலைவரா எனவும், விஜய்காந்தை அழகிரி கிண்டலாகப் பேசியுள்ளார். ஸ்டாலின் தரப்பு தே.மு.தி.கவுடன் கூட்டணிக்கு முயல்வதும், அழகிரி காங்கிரசுடனேயே உறவைத் தொடர நினைப்பதும் உண்மையே என்பதை இந்நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன. தமிழகத்தின் தென்பகுதியில் தான் அழகிரி கால்பதிக்க முயன்று வருகிறார் அந்தப் பிரதேசத்தின் திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தூத்துக்குடி சிவகங்கை பகுதிகளில் காங்கிரசுக்கு கணிசமான செல்வாக்கு உள்ளது உண்மைதான். மேலும் கடந்த 4 வருடங்களாக மத்திய அமைச்சராக காங்கிரஸ் தலைமையுடன் உரசல் இன்றி நெருங்கிய நட்பு பாராட்டி வருபவர் அழகிரி என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அழகிரி காங்கிரஸ் என்றும் ஸ்டாலின் தே.மு.தி.க என்றும் லாடாய் படுவது அ.தி.மு.கவுக்கு சாதகமாகவே அமையும். ஏற்கனவே தே.மு.தி.கவை கலங்கடித்து சிதறடித்து வரும் ஜெயலலிதா இந்தத் தாயாதிகள் சண்டையில் இன்னும் இரட்டிப்பு லாபம் காண எதிர்பார்ப்பதில் வியப்பொன்றுமில்லை. லோக்சபா தேர்தலுக்கு முன் தே.மு.தி.கவை ஒரு வழி பண்ணி விடுவார் அம்மா என்கின்றனர் அவரது கட்சியினர். இதில் ஓரளவு உண்மை இல்லாமலும் இல்லை. ஆக்ரோஷமாகவும், ஆவேசமாகவும் ஜெயலலிதாவை விமர்சித்து வந்த விஜய்காந் சமீபகாலமாகவே அடக்கியே வாசித்து வருகிறார். அதைத்தான் 4 வழக்கு போட்டவுடனேயே நடுங்குகிறார் என அழகிரி கிண்டலடித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. அவரது கட்சி எம்.எல்.ஏக்களையும், உள்ளூராட்சி உறுப்பினர்களையும் வலைவீசி அதில் ஜெயலலிதா ஓரளவு வெற்றியும் கண்டுள்ளார். ஜெயலலிதாவின் அரசியல் அனுபவம், நீண்ட காலமாக எம்.ஜி ஆரால் கட்டி வளர்க்கப்பட்ட கட்சியின் பலம் என்பன விஜய்காந் கட்சியை கரைத்து விடுமோ என அக்கட்சியின் தொண்டர்கள் கலவரமடையத் தொடங்கி இருப்பது தெளிவாகத் தெரிகிறது. தலைவரும் சற்று அடக்கியே வாசிக்கிறார். காங்கிரசிடம் தஞ்சமடையலாமா அல்லது நேரடியாக தி.மு.கவிடமே அணிசேரலாமா என்ற குழப்பம் வேறு அவரை வாட்டுகிறது. மறுபுறம் பி.ஜே.பியிலும் ஒரு தரப்பு அவரை ஈர்க்கமுயன்று வருகிறதாம். ஆனால் தே.மு.தி.கவை ஈர்க்கப்போய் அ.தி.மு.க.வின் கடைசி நேர மன மாற்றத்தினால் ஒருவேளை கிடைக்கக்கூடிய நன்மையை இழந்துவிடக்கூடாது என்பதிலும் தமிழக பி.ஜே.பியினர் கவனமாக இருந்து வருகின்றனர்.

தமிழகத்தின் 39 தொகுதிகளும் பாண்டிச்சேரியுடன் சேர்த்து 40 தான் டெல்லி ஆட்சி அரியணையில் அமர்ந்து யார் என்பதை தீர்மானிப்பவையாகும். இந்த முறை ஜெயலலிதா காட்டில் மழை என்பது தெளிவாகத் தெரிவதால் அவரை ஈர்க்க பல தரப்புகளும் முஸ்தீபு செய்வது எதிர்பார்க்கக்கூடியதுதான். 30-35 இடங்களை ஜெயலலிதாவை தனித்துவென்றால் அவரது பிரதமர் பதவி கனவு நனவாக நிறையவே வாய்ப்புள்ளது. கடந்த வாரம் மோடி பிரதமராக ஜெயலலிதாவுக்குக் கைகொடுப்பார் என்ற கேள்வியை இவ்விடத்தில் அலசி இருந்தோம். 65 வயதான ஜெயலலிதா மோடியை விட வயதிலும் அரசியல் அனுபவத்திலுமே மூத்தவர். எனவே அவருக்கு முதலில் வழிவிட மோடி இணங்கக்கூடும் என்றும் தெரிகிறது. ஜெயலலிதா பிரதமராக பி.ஜே.பி இணங்கினால் பஞ்சாபின் ஆழும் அகாலி தளம் ஒரிசாவின் ஆளும் பி.ஜே.டி ஹாராஷ்டிராவில் சிவசேனா என்பனவும் ஆதரவு தெரிவிக்கலாம். பி.ஜே.பியின் எதிரிகள் என்றாலும் கம்யூனிஸ்ட்களை மற்றொரு கோணத்திலிருந்து ஆதரவளிக்க ஜெயலலிதா இணங்கவைக்கக்கூடும். இப்படித்தான் 1989 இல் வி.பி.சிங் ஒருபுறம் பி.ஜே.பி மறுபுறம் அதன் எதிரியான கம்யூனிஸ்ட்கள் என இருதரப்பு ஆதரவுடன் பிரதமரானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

***

"ஜெயலலிதாவுடன் இனி கூட்டு கிடையாது என முழங்கி வந்த ராமதாஸ் தே.மு.தி.கவை ஒழித்துக் கட்டியதற்கு நன்றி கூறுமுகமாக தனது பழைய முடிவை மாற்றி அ.தி.மு.க அணியில் மீண்டும் இணையக் கூடும். வைகோவின் கட்சி இப்போதைக்கு அ.தி.மு.க அணியில் சேர வாய்ப்பில்லை என்றாலும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலர் தா. பாண்டியன் ஜெயலலிதா வின் பரம விசுவாசி என்பதால் கடைசி நேரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அ.தி.மு.க அணியில் இடம்பெற நிறையவே வாய்ப்புள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்

# காதலுக்கு பேதமில்லை என்பது உண்மையா?

**நு. அகிலா. பூநகரி.**
கே : பித்தரே, மது ஒழிப்பு வாரம், புகைத்தல் ஒழிப்பு வாரம் என்றெல்லாம் அனுஷ்டிக்கப்படுகிறதே? இவற்றால் பலனேதும் விளைகிறதா?



ப : இவையாவும் குறிப்பிட்ட அந்தந்த வாரத்துடன் முடிந்து விடுகிறதே? மீண்டும் வழமைபோன்று அடுத்த வருடம்தானே. இவ்வாறான விழிப்புணர்வு முயற்சிகள் உரிய பலன் தருவதாகக் காணோமே?

**வ. யசோதரன், மட்டக்களப்பு.**
கே : பித்தரே, குழந்தை எந்தப் பாலில் அடங்கும் சொல்லும் பார்க்கலாம்?
ப : ஹி....ஹி.... வந்து, நிச்சயமாக தாய்ப்பாலில் தான் அடங்கும். மற்ற மாப்பால் வகையெல்லாம் அடுத்தபடிதான்.



**சி. சுரேகா, கொழும்பு - 11.**
கே : பித்தரே, காதலுக்கு இன, மத, ஜாதி பேதம் எதுவும் இல்லை என்பது உண்மைதானா?
ப : உண்மையான காதலுக்கு முன்னால் அத்தகைய பேதங்கள் எதுவும் தடைபோட முடியாது. உறுதியற்ற காதலில் சிலவேளை இத்தகைய பேதங்கள் வெற்றிபெற்று விடுவதுண்டு.

**த. இளவரசன், வேலணை.**
கே : எனது நண்பன் அடிக்கடி என்னைப் பைத்தியம், பைத்தியம் என்று கேலி செய்கிறானே? இந்தக் கேலி, கிண்டலை எப்படித் தடுத்து நிறுத்துவது?



ப : விரல் சூப்பத் தெரியாத 'பபா' வாய் இருக்கிறீரே? உமது நண்பன் அப்படி உம்மைக் கேலி செய்யும்போது ஒரு நாளைக்கு அவன் எதிர்பார்க்காத விதத்தில் நாலு சாத்துச் சாத்திப் பாரும். அன்றிலிருந்து உம்மை அப்படிக் கேலி செய்வதை அவன் விட்டுவிடுவான்.

**ம. துரைசிங்கம், வவுனியா.**
கே : பித்தரே, உமது 'ஜோக்' வாசித்து பல காலமாச்சு. ஒரு 'ஜோக்' எடுத்து விடும் பார்க்கலாம்?
ப : டாக்டரிடம் தனது மாமியாரை அழைத்து வந்த மருமகள் மாமியாரை வெளியில் இருக்க வைத்துவிட்டு டாக்டரின் அறைக்குள் சென்று 'டாக்டர், எனது மாமியின் காலில் பெரிய முள்ளொன்று குத்திவிட்டது' என்று தெரிவித்தாளாம். டாக்டரும் அலட்சியமாக 'அதற்கென்ன, அந்த முள்ளை எடுத்து விட்டால் போயிற்று' என்று கூறினாராம். அந்த மருமகளோ "முள்ளு ரொம்ப ஆழமாகத் தைத்திருக்கிறது டாக்டர்". "உங்களுக்கேன் வீண் சிரமம்; முடிந்தால் மாமியின் காலையே கழற்றி விட்டிடுங்களேன்" என்றாளாம் தணிந்த குரலில்.





**வை. இளங்கோ, திருமலை.**
கே : அன்பின் பித்தரே! காதலர்களுக்கென்று 'காதலர் தினம்' இருப்பது போல, காதலில் தோல்வி கண்டவர்களுக்கென ஒரு தினத்தை ஒதுக்கினால் என்ன?
ப : அதுதான் ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கிறதே; அதுதான் ஏப்ரல் முதல் நாள்.



**வ.து.கணேசன், நீர்கொழும்பு.**
கே : பித்தரே, பெண் என்றால் பேயும் இரங்கும் என்பது பழமொழி. இது எந்த அளவுக்கு நிதர்சனம் என்று சொல்வீரா?
ப : அது முற்று முழுதான உண்மை. இனம் தன் இனத்துக்காக இரங்குவது நியாயம்தானே.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 555

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | |
| | ■ | 6 | | | | | ■ |
| 7 | 8 | | | ■ | | ■ | 9 |
| 10 | | | ■ | 11 | | | |
| ■ | | ■ | 12 | | | ■ | |
| 15 | | | | | ■ | 14 | |
| | | ■ | | ■ | 16 | | |
| | ■ | 17 | | | | | |

அனுப்புபவர் பெயர் :..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### மேலிருந்து கீழ்

1. பயப்படாத தன்மை
2. விலங்கினம் அல்லாத உயிரினம்
3. நாள்
4. சுவாசத்துடன் தொடர்புடைய நோய்
5. தமது
8. நினைவு தப்புதல்
9. நிகழ்காலம் தாண்டி இனி வருவது
11. நாட்டைப் பரிபாலிப்பது
12. கிடைப்பதற்கு அருமையானவை
13. போதல்
14. மாறி மாறி வரும் யோகம் இது
16. மறைவில் தீட்டுவது

### இடமிருந்து வலம்

1. ஒரு பாடலின் இறுதியை அடுத்த பாடலின் முதலாகத் தொடங்கும் பிரபந்தம்
4. வாசலில் அமைவது
6. இராமனும் பஞ்ச பாண்டவர்களும் சென்றனர் இதற்கு
7. இதைக் கவரி என்றும் கூறுவர்
10. நடுப்பகுதி
11. சொற்களஞ்சியம்
12. உலோகக் கருவிகளைக் கூர் தீட்டுவது இதனால்
13. வம்சாவழியில் தனித்துவ உரித்தாளர்
14. தோழர்
15. படி
16. எல்லா
17. தைரியமான உறுதியுடைய நெஞ்சு

## சொற்சிலம்பம் போட்டி இல. 555

சொற்சிலம்பம் 555 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 553 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**
1. சதா, 2.முடைதல், 3. திகைப்பு, 4. ரம்பை, 5. தலைவி, 8. சோதனை, 11. வேள்வி, 12. பசை, 13. கயல், 14. ஓர், 15. மதில், 17. நாகம், 18. கவிதை, 19. வீரம், 21. விதை

**இடமிருந்து வலம்**
1. சமுத்திரம், 6. தாடை, 7. கைம், 8. சோலை, 9. தர்ப்பை, 10. தவி, 11. வேல், 12. பனை, 14. ஓசை, 16. விநாயகர், 19. வீதி, 20. கல்வி, 21. விரல், 22. நாம், 23. தைமாதம்

## போட்டி இல. 553 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** அ.ஷண்முகப்பிரியா, முத்து மாளிகை. டச்சுவீதி.கோப்பாய் தெற்கு,கோப்பாய்.

**2ஆம் பரிசு** அ.இ. பாக்கியராஜா, இல 88 1/1.பசல்ஸ் ஒழுங்கை. கொழும்பு - 06.

**3ஆம் பரிசு** செல்வி ஸ்ரீ.தனோஜா, கிளி.உருத்திரபுரம் ம.வி. உருத்திரபுரம்.

## பாராட்டுப் பெறுவோர்

**(1) செல்வன். ஸ்ரீ.லக்ஷன்,**
மாணவன் ஆண்டு - 06,
யா/மத்திய கல்லூரி.

**(2) திருமதி. சி. புஸ்பராணி,**
'வசந்தபவனம்',
மருதடி மேற்கு. சாவகச்சேரி.

**(3) வே.கார்த்திகேசு,**
விபுலானந்தர் வீதி,
வாழைச்சேனை.

**(4) பொ.பாலசுப்பிரமணியம்,**
பிரதான வீதி,
தம்பிலுவில் - 01.

**(5) கனகசபை - நாகேந்திரன்,**
இல - 11-3/1. நெல்சன் இடம்.
வெள்ளவத்தை. கொழும்பு -06.

**(6) திருமதி மயூரி. பிரியதர்சன்சர்மா,**
இல - 119/16 மழவ.பட்லந்த
கெக்கிராவ.

**(7) கே. இராஜகோபால்,**
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.

**(8) செ.வசீகரன்,**
இல.209. சூசைப்பிள்ளையார் குளம்,
வவுனியா.

**(9) செல்வி. செ.தர்சினி,**
வல்லை வீதி,
அச்சுவேலி வடக்கு. அச்சுவேலி.

**(10) சின்னையா செல்வராஜ்,**
இல 9/5, B-10. மஜீத் பிளேஸ்,
அவிசாவெலை வீதி. வெல்லம்பிட்டிய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

## 2012இல் அசத்திய இலங்கை வீரர்கள்



2012ஆம் ஆண்டில் இலங்கை அணி வீரர்களே அதிகளவு ஆதிக்கம் செலுத்தி உள்ளனர்.

ஒருநாள் போட்டி பந்துவீச்சில் இலங்கை வீரர் மலிங்கா தான் முன்னிலையில் இருக்கிறார்.

இவர் 32 போட்டிகளில் 47 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். அடுத்ததாக மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் சுனில் நரைன் 34 விக்கெட்களுடன் முதலிடத்திலும், இலங்கை வீரர் திசரா பெரைரா 32 விக்கெட்களுடன் 3வது இடத்தையும் பெற்றுள்ளார்.

இதே போன்று துடுப்பாட்டத்தில் சங்கக்காரா 1184 ஓட்டங்களை எடுத்து முதலிடத்தில் உள்ளார்.

திலகரத்னே தில்ஷன் 1119 ஓட்டங்கள் எடுத்து இரண்டாமிடத்திலும், 1026 ஓட்டங்கள் எடுத்து வீரட் கோஹ்லி மூன்றாமிடத்திலும் உள்ளனர்.

## முதலிடத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணி

பிரிமியர் லீக் கால்பந்து போட்டியில், 49 புள்ளிகள் பெற்று மான்செஸ்டர் யுனைடெட் அணி முதலிடத்தில் நீடிக்கிறது.

இங்கிலாந்தில் உள்ளூர் கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும் பிரிமியர் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது.

லண்டனில் நடந்த லீக் போட்டியில் ஆர்சனல், நியூகேசில் அணிகள் மோதின. அபாரமாக ஆடிய ஆர்சனல் அணி 7-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு போட்டியில் மான்செஸ்டர் சிட்டி அணி 4-3 என்ற கோல் கணக்கில் நார்விச் அணியை வீழ்த்தியது.

மற்ற போட்டிகளில் மான்செஸ்டர் யுனைடெட்(2-0, புரோம்விச்), விகான்(3-0, எதிர்-அஸ்டன் வில்லா), சுவான்சியா (2-1, எதிர்-புல்ஹாம்), ரீடிங்(1-0, எதிர்-வெஸ்ட் ஹாம்), டாட்டன்ஹாம்(2-1, எதிர்-சந்தர்லாந்து) அணிகள் வெற்றி பெற்றன.

இதுவரை விளையாடிய 20 போட்டிகளில் 16 வெற்றி, ஒரு டிரா, மூன்று தோல்வி உட்பட 49 புள்ளிகள் பெற்ற மான்செஸ்டர் யுனைடெட் அணி முதலிடத்தில் நீடிக்கிறது.

மான்செஸ்டர் சிட்டி(42 புள்ளி), டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர்(36), செல்சியா(35), அர்சனல்(33) அணிகள் டொப்-5 வரிசையில் உள்ளன.



## மரியா ஷரபோவா விலகல்

பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் தொடரில் இருந்து, காயம் காரணமாக ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா விலகினார்.

அவுஸ்திரேலியாவில் உள்ள பிரிஸ்பேன் நகரில், சர்வதேச டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், ரஷ்யாவின் மரியா ஷரபோவாவுக்கு 'ரை' வழங்கப்பட்டது. இவர், 2வது சுற்றில் அவுஸ்திரேலியாவின் ஜார்மிளா காஜ்டோசோவாவை சந்திக்க இருந்தார்.

ஆனால் ஷரபோவாவின் வலது தோள்ப்பட்டை எலும்பு பகுதியில் காயம் ஏற்பட்டதால், தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்தார். ஏற்கனவே இவர், கடந்த ஆண்டு இத்தொடரில் காயம் காரணமாக விலகினார். பின், காயத்தில் இருந்து மீண்டு, அவுஸ்திரேலிய ஓபனில் பைனல் வரை முன்னேறினார். ஷரபோவா விலகியதன் மூலம், அவுஸ்திரேலிய வீராங்கனை ஜார்மிளா காஜ்டோசோவா, நேரடியாக காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

இதுகுறித்து ஷரபோவா கூறுகையில், "தோள்ப்பட்டை எலும்பு பகுதியில் லேசான காயம் ஏற்பட்டிருப்பதால், இத்தொடரில் இருந்து விலகுகிறேன். விரைவில் காயத்தில் இருந்து மீண்டு, அவுஸ்திரேலிய ஓபனில் விளையாடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது," என்றார்.

## 2012இன் சிறந்த துடுப்பாட்ட அணியாக கே.சி.சி.சி தெரிவு

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகம் ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட துடுப்பாட்ட அணிகளின், தர வரிசையினை கடந்த 3 வருடங்களாக வெளியிட்டு வருகின்றது.

2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மேற்படி தரவரிசை கணிப்பிடுதலில், அவ்வருடமும், 2011ஆம் ஆண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி முதலிடம் பெற்றிருந்தது.

2012 ஆம் வருடத்திற்கான தரவரிசையில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி (கே.சி.சி.சி) 152.3 புள்ளிகளுடன் முதலிடம் பெற்று ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணத்தினை தனதாக்கியது.

தொடர்ந்து இரண்டாம் இடத்தினை 111.4 புள்ளிகளுடன் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும். மூன்றாமிடத்தினை 93.3 புள்ளிகளுடன் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகமும் பெற்றுக் கொண்டது.

## 2ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார் ஜோகோவிச்

அபுதாபியில் நடந்த டென்னிஸ் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

அபுதாபியில் உலக டென்னிஸ் சம்பியன்ஷிப் கண்காட்சி தொடர் நடந்தது. இதில் உலகின் நம்பர் 1 வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே உள்ளிட்ட 6 முன்னணி வீரர்கள் பங்கேற்றனர்.

இதன் இறுதிப் போட்டியில் செர்பியாவின் ஜோகோவிச், ஸ்பெயினின் நிகோலஸ் அல்மாக்ரோ மோதினர்.

டை-பிரேக்கர் வரை நீடித்த முதல் செட்டை அல்மாக்ரோ 7-6 என கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட ஜோகோவிச், 2வது செட்டை 6-3 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் அசத்திய செர்பிய வீரர் 6-4 என வென்றார். இறுதியில் ஜோகோவிச் 6-7, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, தொடர்ந்து இரண்டாவது முறையாக(2011, 12) சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.



விளையாட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்களினால் கணனியை இயக்கும் புதிய சாதனம் அறிமுகம்



அசுர வேகத்தில் வளர்ந்துவரும் தொழில்நுட்பத் துறையில் தற்போது கண்ணசைவின் மூலம் கணனிகளை இயக்கக்கூடிய புத்தம் புதிய சாதனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Tobii REX எனப்படும் USB இணைப்பு மூலம் செயற்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ள இச்சாதனமானது மைக்ரோசொப் நிறுவனத்தினால் புதிதாக அண்மையில் வெளியிடப்பட்ட விண்டோஸ் 8 இயங்குதளங்களில் செயற்படக்கூடியவாறு காணப்படுகின்றது. 2013ம் ஆண்டின் ஆரம்ப நாட்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இச்சாதனத்தின் பெறுமதியானது 995 அமெரிக்க டொலர்கள் ஆகும்.




பெருகிவரும் கணினி பாவனைக்கு ஈடாக வைரஸ் தாக்கங்களும் நாளாந்தம் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றன.

இப்படியான வைரஸ் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கென பல்வேறு அன்டிவைரஸ் மென்பொருட்களும் அறிமுகப்படுத்தப்பட்ட வண்ணம் காணப்படுகின்ற போதும் அவற்றுள் பெரும்பாலானவை இலவசமாகக் கிடைப்பதில்லை.

ஆனால், பிரபலமான அன்டிவைரஸ் மென்பொருட்களுள் ஒன்றான Bitdefender Antivirus தற்போது புதுவருடத்தில் Bitdefender Antivirus 2013 எனும் பெயரில் தனது இலவச பதிப்பு ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

விண்டோஸ் 8 இயங்குதளத்திலும் செயற்படக்கூடிய இம்மென்பொருளை பெற்றுக்கொள்வதற்கு பேஸ்புக் கணக்கு மற்றும் டுவிட்டர் கணக்கினைப் பயன்படுத்திப் பதிவு செய்யவேண்டியது அவசியமாகும்.


**Admission for 2013 year**

**Daffodil** Montessori School

is a proven academy for providing its students with an education of superior quality

**& Day care**

Appliction are accepted before 30th January 2013

Mental development is assured for the safety of your child

**Daffodil** EDUCATION CENTRE

No.74,37th LANE WELLAWTTA,COLOMBO -06 Tel:0112364208

E-mail: daffodil@sltnet.lk

Learn and feel the Difference









**R.G.ட்ரேடர்ஸ் அபான்ஸின் அங்கீகாரம் பெற்ற முகவர்**

யாழ்ப்பாணம் – இல: 285, 287 ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2226185 • யாழ்ப்பாணம் – ப்லஷர் காட்சியறை இல: 291, ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2227667 • நெல்லியடி – இல: 84, பருத்தித்துறை வீதி, நெல்லியடி: 021 2262585 • சாவகச்சேரி – இல: 5A , கண்டி வீதி, சாவகச்சேரி: 0212270185 நாவட்குளி – இல:50, கண்டி வீதி, நாவட்குளி சந்தி, நாவட்குளி • சுன்னாகம் – 12, 14, KKS வீதி, சுன்னாகம்: 021 2241985 • கிளிநொச்சி – கரடிபோக்கு சந்தி, A9 வீதி, கிளிநொச்சி: 021 2280185 • பளை – இல: A9 வீதி, பளை: 0777 340056

**Abans**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

2013 happy new year

# THAMPA TOURIST HOTEL

Thampa

Regd by Tourist Board & BOI



- RESTAURANT
- HOTEL SCHOOL
- WEDDING HALL
- AFRICAN BEER GARDEN
- LUXURY ROOMS
- SWIMMING POOL



No: 10, 1st Lane,
Sinnaputhukkulam, Vavuniya.
info@thampahotel.com
premendrarajah7@hotmail.com
024 222 0598, 024 567 0262

www.thampahotel.com


## 2013

ஜனவரி January

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

பெப்ரவரி February

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | | |

மார்ச் March

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

ஏப்ரல் April

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

மே May

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

ஜூன் June

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

ஜூலை July

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

ஆகஸ்ட் August

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

செப்டம்பர் September

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

ஒக்டோபர் Octobar

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

நவம்பர் November

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

டிசம்பர் Decembar

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள [illegible] பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2013 ஜனவரி 09 ஆம் திகதி வெளியிடப்பட்டது.